# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 31 | கதிர் 349 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 24, புதன்கிழமை 09.11.2016


செங்கோலைத் தூக்க ஓடிய

## சிவாஜியால் சபையில் நேற்று பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ. 9
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின்போது திடீரென ஆத்திரமடைந்த உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் >> 27

## புத்தரை எதிர்ப்பது தவறாம்

யாழ்ப்பாணம், நவ. 9
அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், மாணிக்கமடுக் கிராமத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள புத்தர் >> 29

## குடும்பத் தலைவர் விபத்தில் சாவு

மோதியவர் தப்பியோட்டம்

சாவகச்சேரி, நவ. 9
வீதியில் நடந்து சென்றபோது மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது >> 27

## பரீட்சைக்கு முன்பாகவே வெளியானது வினாத்தாள்

விசாரணைகளை ஆரம்பித்தது வடக்குக் கல்வித் திணைக்களம்

யாழ்ப்பாணம், நவ. 9
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் மூன்றாம் தவணைப் பரீட்சைக்கான வரலாற்றுப் பாட வினாத்தாள், குறித்த திகதிக்கு >> 29

நெல்சிப் திட்டத்தில்

# பரு., வல்வை சபைகளில் ரூ. 43 லட்சம் நிதி மோசடி

வடக்கு மாகாண சபை நியமித்த உப குழு நேற்று அறிக்கை

யாழ்ப்பாணம், நவம்பர் 9
வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்ற மேம்பாட்டுத் திட்டத்தின் (நெல்சிப்) கீழ் இரு சபைகளில் மட்டும் 43 லட்சம் ரூபா நிதி நுணுக்கமான முறையில் மோசடி செய்யப்பட்டதாக வடக்கு மாகாண சபை நேற்று அறிவித்தது. வடமராட்சியில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் வல்வெட்டித்துறை நகர சபை ஆகியவற்றிலேயே >> 29



## நல்லிணக்கத்துக்கு பிரிட்டன் வலியுறுத்தும்

சம்பந்தனிடம் உறுதியளித்தார் அந்நாட்டு இராஜாங்க அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 9
புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கு இலங்கை அரசிடம் பிரிட்டன் தொடர்ந்து வலியுறுத்தும்.
இவ்வாறு ஐக்கிய நாடுகள் மற்றும் பொது நலவாய நாடுகளுக்கான பிரிட்டனின் இராஜாங்க >> 25

## மற்றவர்களின் ஊழலை விசாரிக்க மாகாண சபைக்குத் தகுதியில்லை

வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 9
வடக்கு மாகாண சபையின் அமைச்சர் களின் ஊழல்கள் தொடர்பில் இதுவரை விசாரணைகள் நடத்தப்படவில்லை. அப்படியிருக்கையில், மாகாண சபையினர் மற்றவர் >> 29

## பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு உலர் உணவு நிவாரணங்கள்

அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 9
தமிழ் நாட்டிலிருந்து திரும்பிவந்த அகதிகள், நலன்புரி நிலையங்கள் மற்றும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள், மீண்டும் சமூகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட >> 29

## மாவீரர் தினத்துக்கு சிவாஜி அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 9
தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய மாவீரர்களை நினைவுகூர்ந்து மனதிலிருத்தி, மாவீரர் வாரத்தை உணர்வெழுச்சியுடன் - >> 06

## பெரும் குழுவல்ல ஆவா

கூறுகின்றனர் யாழ். பொலிஸார்

யாழ்ப்பாணம், நவ. 9
ஆவா என்பது பெரிய குழு அல்ல. அவர்கள் யாழ். மாவட்டத்தின் குறித்த சில பகுதிகளில் மாத்திரம்தான் செயற்படுகின்றனர். இவ்வாறு பொலிஸார் தெரிவித்தனர்.
வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற, வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை தொடர்பான >> 27

## சங்கரத்தையில் நேற்றிரவு இருவர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், நவ. 9
இலக்கத் தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிளில் சென்ற குழுவினர் நடத்திய வாள்வெட்டில் 2 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை -சங்கரத்தை அந்திராணி வாய்க்கால் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றது.
அந்திராணி வாய்க்கால் வீதி வழியாக >> 05

## 2 மாணவர் உட்பட நான்கு பேர் ரி.ஐ.டியினால் நேற்றும் கைது

யாழ்ப்பாணம், நவ. 9
வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் இருவர் உட்பட 4 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்று வரை 13 பேர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கொக்குவில், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே நேற்றும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களின் விவரங்களை பொலிஸார் வழங்கவில்லை. (4,10)

## போதைப் பொருள் மையமாக வடக்கு

பொலிஸார் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 9
இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுத் தென் பகுதிக்குப் போதைப் பொருள்களைக் கடத்தும் மையமாகவே வடக்கு இருக்கின்றது. இங்கு 5 சதவீதமானோரே அதன் நுகர்வுக்குரியவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நேற்று நடத்திய சிறப்புக் >> 27

## தமிழரைத் தேசிய இனமாக ஒருபோதும் ஏற்க முடியாது

இப்படிக் கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, நவ.9
தமிழர்கள் தம்மை இலங்கையின் தேசிய இனமாக ஒருபோதும் அடையாளப்படுத்த முடியாது. பத்தாம் நூற்றாண்டில் இலங்கைக்கு படையெடுத்த தமிழக மன்னரின் இராணுவத்தில் >> 05

ஓட்டுமடம் கொலை வழக்கு

## 3 சகோதரர்கள் உட்பட நால்வருக்குத் தூக்கு

யாழ்ப்பாணம், நவ. 9
யாழ்ப்பாணம், ஓட்டுமடம் பகுதியில் குடும்பத் தலைவரை வாளால் வெட்டிக் கொலை செய்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட 8 எதிரிகளில் 3 சகோதரர்கள் உள்ளிட்ட 4 பேர் குற்றவாளிகள் >> 25

## ரி.ஐ.டி. கைது செய்த மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ. 9
பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் (ரி.ஐ.டி) யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டவர்களில் 3 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதி >> 29




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கைதிகள் விடுதலைக்காக கொழும்பில் கையெழுத்து

கொழும்பு, நவ 9
பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ்கைதுசெய்யப்பட்டுப் பல வருட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, கொழும்பில் நேற்றுக் கையெழுத்துப் பெறும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நேற்று மாலை 3 மணி முதல் 6 மணிவரை இந்தக் கையெழுத்துப் பெறும் போராட்டம் நடத்தப்பட்டது.
அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட, அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான கையெழுத்துப் பெறும் போராட்டத்தின் இறுதி நாள் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது.
நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயற்பாட்டின் இறுதியில், சேகரிக்கும் கையெழுத்துக்கள் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. (தி)

சர்ச்சைக்குரிய கருத்து

## சீனத் தூதுவருடன் அரசு உரையாடல்

கொழும்பு, நவ. 9
இலங்கை அரசு தொடர்பாகச் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்ட சீனத் தூதுவருடன், அயலுறவுத்துறைச் செயலர் எசல வீரக்கோன், தொலைபேசி மூலம் உரையாடியுள்ளதாகத் தக்வல்கள் வெளியாகியுள்ளன.
நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வெளியிட்ட கருத்துக்களை ஊடகவியலாளர்கள் முன்பாக விமர்சித்துச் சீனத் தூதுவர் யி சியாங்லியாங் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.
இது குறித்து, சீனத் தூதுவரை அயலுறவுத்துறை அமைச்சுக்கு அழைத்து அதிருப்தியை வெளியிட அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.
அயலுறவுத்துறைச் செயலர் எசல வீரக்கோன், சீனத் தூதுவர் யி சியாங்லியாங்குடன் தொலைபேசி மூலம் நேற்று முன்தினம் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார்.
இதுபோன்ற கருத்துக்களை ஊடகங்கள் மூலம் கலந்துரையாடக் கூடாது என்று சீனத் தூதுவருக்கு அயலுறவுத்துறைச் செயலர் எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
எந்த விவகாரம் தொடர்பாகவும், திறந்த கலந்துரையாடல் நடத்துவதற்கு அரசு எப்போதும் தயாராகவே இருப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார். (த-5)

# சிப்பாய்களின் போராட்டத்தின் பின்னணியில் சதி

## நல்லாட்சி அரசு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 9
போரினால் அவயவங்களை இழந்த ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையிலும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் ஏற்படுத்தப்பட்ட குழப்பகரமான நிலைக்குப் பின்னால் மிகப் பெரும் சதி முயற்சி இருப்பதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அரசை நெருக்கடிக்குள் தள்ளும் நோக்கிலும், படையினருக்கும் அரசுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்தும் முகமாகவும் இந்தச் சதி திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டுள்ளதாகவும் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஜனாதிபதி அலுவலக வளாகத்துக்கு வந்த அப்பாவிகளான அங்கவீனமுற்ற படையினர், தங்களைப் பின்னால் இருந்து இயக்குபவர்கள் யார் என்பதை அறிந்திருக்கவில்லை. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைத்துத் தேவைப்பாடுகளும் முழுமை பெற்றிருந்த நிலையில் இத்தகையதொரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதே அரச எதிர்ப்புச் சக்திகளின் நோக்கமாகும்.
பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நான்கு மாதங்களுக்கு முன்னர், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார். அமைச்சரவைப் பத்திரத்திற்கு திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு அது குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.
ஜனாதிபதி இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டிருந்தபோதும் நீண்டகாலமாக அரசை எதிர்த்துவரும்–அரசியல் அமைப்புகளில் செயற்பட்டுவரும் சில பிக்குகளினதும் இன்னும் சில வெளியாள்களினதும் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அரசியல் நோக்கம் கொண்டதாகும்.
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதி அலுவலக பிரதிநிதிகளுக்கும் படைச் சிப்பாய்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் பிரதிநிதிகளுக்குமிடையே பாதுகாப்பு அமைச்சில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த அசம்பாவித நிகழ்வு இடம் பெற்றுள்ளது.
சேவை ஓய்வூதியக் கொடுப்பனவை 12 வருடங்களுக்குக் குறைந்த காலம் சேவையில் ஈடுபட்ட அங்கவீனமுற்ற படைவீரர்களுக்குப் பெற்றுக்கொடுப்பது இராணுவத்தின் ஓய்வூதியப் பணிக்கொடை சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதல்லாத போதிலும் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அந்தச் சட்ட திட்டங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டுச் சேவை ஓய்வூதியத்தை இந்த படைச் சிப்பாய்களுக்கும் பெற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அலுவலகத்தில் சில வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்ததுடன், ஜனாதிபதி அலுவலகப் பாதுகாப்பு அதிகாரிகளை அசௌகரியத்திற்குள்ளாக்கி அலுவலக வளாகத்துக்குள் அத்துமீறிப் பிரவேசிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.
ஓய்வுபெற்ற படையினரின் கோரிக்கையை முன்னிறுத்தி அரசை அசௌகரியத்திற்குள்ளாக்கும் வகையில் ஒரு கலகத்தை உண்டு பண்ண வேண்டும் என்பது சூழ்ச்சிக்காரர்களுக்குத் தேவையாக இருந்தது. கடந்த சில நாள்களாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் விளங்கிக் கொண்டு நடவடிக்கை எடுத்திருப்பதும் உறுதியாகியுள்ளது என்றுள்ளது. (த-5)

## நூலகம் அமைக்க ஒதுக்கிய நிதியில் சம்பளம் கொடுத்த மாநகர நிர்வாகம்

### மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி சபையில் சுட்டிக்காட்டு


யாழ்ப்பாணம், நவ. 9
திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இயங்கிய மாநகர சபையின் முன்னைய நிர்வாகம், நூலகம் அமைப்பதற்கு ஒதுக்கிய நிதியை அதற்குரிய நோக்கத்துக்குப் பயன்படுத்தவில்லை. இது கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் 65 ஆவது அமர்வு, பேரவைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. யாழ். மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுமற்றும் 2013 ஆம் ஆண்டுக்குரிய கணக்காய்வு அறிக்கை தொடர்பான பொதுக் குழு அறிக்கை மாகாண சபையில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: யாழ். மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் யாழ். மாநகர சபையில் நூலகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பணத்தில் நூலகம் அமைக்கும் பணியை மேற்கொள்ளாது, மாநகர சபையில் தேவைக்கு அதிகமாக நியமித்த பணியாளர்களுக்கான சம்பளம் கொடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு நிரந்தர வைப்பில் இருந்த பணத்தை இடையில் எடுத்தமையினால் அதன் வட்டி வருமானமும் இழக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயல்களுக்கு மாநகர சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதா?.
அதேபோன்று இதே காலத்தில் ஒரு வாடகைக் காரைப் பாவித்த செயற்பாட்டுக்கும் விளக்கம் கொடுக்கப்படவில்லை – என்றார்.
இது குறித்து பொதுக்குழுவில் ஆராய்ந்தோம். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அனுமதியுண்டா என்று தற்போது விளக்கம் கோரப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.
நாளை மறுதினம் வியாழக் கிழமை நடைபெறும் குழுக் கூட்டத்தில் மேலும் ஆராய்ந்து அடுத்த கூட்டத்தில் இதனை எடுக்கலாம் என்று அவைத் தலைவர் தெரிவித்தார். (த-5-101)

## தனியார் பேருந்துகள் பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 9
நகரங்களில் காணப்படுகின்ற அதிகளவிலான போக்குவரத்து நெரிசலைக் காரணம் காட்டித் தனியார் பேருந்துகள் எதிர்வரும் 15 ஆம் திகதி பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகத் தனியார் பேருந்து போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.
“கொழும்பு மாநகரம் உள்ளிட்ட ஏனைய நகர எல்லைகளில் பெரிய வாகன நெரிசல் காணப்படுகின்றது. இதன் காரணமாகப் பேருந்து சேவை நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.
பயணிகளுக்குச் சீரான போக்குவரத்துச் சேவையை எம்மால் வழங்க முடியாமல் உள் ளது.
இது தொடர்பில் அரசின் கவனத்துக்குக் கொண்டு வரும் முகமாக பெரிய பணிப்புறக் கணிப்பு நடவடிக்கையில் ஈடுப் படுவ தற்கு திட்டமிட்டுள்ளோம்” என்று கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (த-5)

## பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் தெல்லிப்பழையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.9
போர் காரணமாக காயமடைந்தவர்களுக்கான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் நேற்றுத் தெல்லிப்பழை வைத்திசாலையில் ஆரம்பமாகின. இது தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளதாக லயன்ஸ் 306 பி1 மாவட்ட ஆளுநர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:
பன்னாட்டு லயன்ஸ் கழகத்தின் நூறாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அதன் ஒரு கட்டமாக போரில் காயமடைந்தவர்களுக்கான பிளாஸ்ரிக் சத்திர சிசிச்சை முகாம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இது இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெற உள்ளது.
இந்தச் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக ஸ்மைல் பங்களாதேஷ் நிறுவனத்தின் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய 21பேர் வருகை தந்திருக்கின்றார்கள்.
பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்காகப் பதிவுகளை மேற்கொண்டவர்களில் ஒரு தொகுதியினருக்கான சத்திர சிகிச்சைகள் இன்று (நேற்று) நடைபெற்றுள்ளன. தொடர்ந்து சத்திர சிகிச்சைகள் நடைபெறவுள்ளன– என்றார். (கு-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## டிரான் அலஸின் விளக்கமறியல் உத்தரவு நீக்கம்

யாழ்ப்பாணம், நவ. 9
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் விளக்கமறியல் உத்தரவை மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைநிறுத்தி உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்றத்தால் கடந்த வாரம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இடைநிறுத்திய மேன்முறையீட்டு நீதிமன்றம், அவரை விளக்கமறியலில் இருந்து விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ராடா நிறுவனத்தின் 124 மில்லியன் ரூபா நிதியைத்தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டது. இதுதொடர்பில்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிர்வரும் 10 ஆம் திகதி வரை டிரான் அலஸை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசல வீரரத்ன உத்தரவிட்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண நிதித்துறைப் பொறுப்பாளர் எமில்காந்தன், ராடா நிறுவனத்தின் முன்னாள் தலைமை அதிகாரி சாலிய விக்ரமசூரிய மற்றும் கலாநிதி ஜயந்த டயஸ் தொடர்பில் டிரான் அலஸுக்கு எதிராகச் சட்டமா அதிபர் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்திருந்தார். (த-5)

# செய்தியாளர்களை வெளியே கலைத்தார் அவைத் தலைவர்

## மத்திய மாகாண சபை அமர்வில்

யாழ்ப்பாணம், நவ. 9
மத்திய மாகாண சபையின் நேற்றைய அமர்விலிருந்து செய்தியாளர்களை வெளியேறுமாறு அவைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண சபையின் மாதாந்த அமர்வு பல்லேகல மாகாண சபை மண்டபத்தில் சபைத் தலைவர் எல்.டி.நிமலசிறி தலைமையில் நேற்றுக் கூடியது. அவைத் தலைவர் அறிவிப்பில் முதலாவதாக, மத்திய மாகாண சபையிலிருந்து ஊடகவியலாளர்களை வெளியேறுமாறு கூறினார்.

'ஊடகவியளார்களது கவனத்துக்கு இதனைத் தெரிவிக்க விரும்புகிறேன். சபையில் எதிரணித் தலைவி மற்றும்ஆளும்தரப்பு, மாகாண அமைச்சர்கள் உட்பட சகல தரப்பினதும் வேண்டுகோளின்படி ஊடகவியலாளர்களை ஊடக சந்திப்பில் சந்திப்போம். அதன் பின் ஊடகவியலாளர்கள் சபைக்குச் சமுகமளித்து செய்திகளைச் சேகரிக்க முடியும். அதுவரை செய்தி சேகரிக்க வந்துள்ள ஊடகவியலாளர்களை அவர்களது ஊடகக் கூடத்தில் இருந்து வெளியேறுமாறு வேண்டுகிறேன்' என்றார் அவைத் தலைவர்.

இதனை அடுத்து அங்கு செய்தி சேகரிக்க வந்திருந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக வியலாளர்கள் சபை ஊடகக் கூடத்திலிருந்து வெளியேறினர்.

மாகாண சபையின் கடந்த அமர்வின்போது ஒரு சில ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பாகச் சபையில் பேசப்பட்டது. இதன் போது செய்தியாளர்களது நலனை அது பாதிப்பதாகக் கூறி செய்தியாளர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச்செய்திருந்தனர்.

மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் ரஷ்யாவுக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணம் தொடர்பாகச் செய்தி வெளியிட்டமை உட்பட இன்னும் சில செய்திகள் தொடர்பாக அதிருப்தி வெளியிட்டு உரையாற்றியிருந்தனர். இதையடுத்தே அங்கு முறுகல் நிலை உருவானது என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

## திருமறைக் கலாமன்றத்தின் 2 நாடகங்கள் கொழும்பில்

யாழ்ப்பாணம், நவ. 9
கொழும்பில் நடைபெறவுள்ள நம்பிக்கையின் சிறகசைப்பு 'விங்ஸ்' கலைப் பெருவிழாவில் திருமறைக் கலாமன்றத்தின் இரண்டு நாடகங்கள் மேடையேற்றப் படவுள்ளன.

கெயார் சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும், மறுநாள் 12ஆம் திகதி சனிக்கிழமையும், 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இந்தக் கலைப்பெருவிழா நடைபெறவுள்ளது.

இதில் கடைசிநாளான 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 07இல் அமைந்துள்ள லயனல் வெண்ட் அரங்கில் பி.ப 3.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிக்கும் திருமறைக் கலாமன்றத்தின் சிறப்பு மிக்க ஆற்றுகைகளான 13.7+ P=W வார்த்தைகளற்ற நாடகமும், அற்றைத் திங்கள் கூத்துருவ நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன. (த-10)

## அம்பாறையில் புத்தர் சிலை; சமாதானப் பேரவை கவனம்

மட்டக்களப்பு, நவ. 9
அம்பாறை - இறக்காமம், மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்ட சர்வமதப் பேரவையை அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் செயற்றிட்ட அதிகாரி சாந்த பத்திரன தெரிவித்தார்.

புத்தர்சிலை வைப்பதற்கு அம்பாறை மாவட்ட சர்வமதப் பேரவையில் அங்கத்தவராக உள்ள பிக்கு ஒருவரும் பின்னணியில் இருந்து கருமமாற்றியதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவது குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சர்வமத மற்றும் சர்வ இன அமைப்புகளிலுள்ள அங்கத்தவர்களின் பரஸ்பர புரிந்துணர்வுடனான, சகோதர வாஞ்சையின் கருத்துப் பரிமாறல்கள் மூலமே அடிமட்டத்தில் உறுதியான சமாதானத்தை கட்டியெழுப்ப முடியும். இதனடிப்படையிலேயே சர்வ மதப் பேரவைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பிலுள்ள இன, மத, மொழி, பிரதேச, அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் கடமையாற்றவேண்டும் என்ற அபார எதிர்பார்ப்பு தேசிய சமாதானப் பேரவைக்கு உண்டு.

அம்பாறை மாவட்ட தேசிய சமாதானப் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் குறிப்பிட்ட பௌத்த தேரர் புத்தர்சிலை வைப்பு விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக் குறித்து முழுமையான அறிக்கை சமர்ப்பிக்குமாறு அம்பாறை மாவட்ட சர்வமதப் பேரவை கேட்கப்பட்டுள்ளது.

அறிக்கை கிடைத்ததும் இந்த விவகாரம் குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த-ய-46)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்
"எவரொருவர் ஒரு மரத்தை நடுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."
- லியூசி லர்கோம் (அமெரிக்கக் கவிஞர்).
கார்த்திகை
01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்"





# நாற்றமெடுகின்றது யாழ்ப்பாண நகரம்

## கணக்கிலெடுக்காத உள்ளூராட்சி அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 9
யாழ்ப்பாண நகரத்தின் குப்பைகள் கடந்த இரண்டு தினங்களாக அகற்றப்படவில்லை. நகரத்தில் செல்பவர்கள் மூக்கைப் பொத்திய படி பயணம் செய்ய வேண்டியுள்ளது. யாழ். மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்களின் போராட்டம் தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் கவனம் செலுத்தாமையால் நகர் அசுத்தமடையும் நிலை நீடிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுறது.

யாழ். மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்துகின்றனர். மாநகர சபை எல்லைக்குட்பட்ட நகரப் பகுதியில் குப்பைகள் அகற்றப்படவில்லை.

நகரில் வசிக்கின்ற பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் நகருக்கு வந்து செல்வோர் வீசும் குப்பைகள் என்பன நகரின் பிரதான வீதிகளில் குவிந்துள்ளன. அவற்றில் உணவுக் கழிவுகள், மாமிசக் கழிவுகளும் கலந்து காணப்படுகின்றன. அவற்றை நாய்கள், காகங்கள் என்பன வீதியில் இழுத்துச் செல்கின்றன. குப்பைகள் வீதியெங்கும் சிந்திச் - சிதறுண்டு காணப்படுகின்றன.

வீதியால் பயணம் செய்பவர்கள் மூக்கைப் பொத்தியபடியே செல்ல வேண்டியுள்ளது. மழை காலமாகவும் இருப்பதால், அந்தக் குப்பைகள் வீதிகளில் மழை நீரில் நனைந்து மேலும் நாற்றமெடுக்கின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் இன்னும் அதிகமாகும் நிலையும், தொற்று நோய்கள் பரவும் சூழலும் காணப்படுகின்றது.

சுகாதாரத் தொழிலாளர்களின் இந்தப் போராட்டத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு யாழ். மாநகர சபையும் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. மாநகர சபைக்குப் பொறுப்பான உள்ளூராட்சி அமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இந்த விடயம் தொடர்பில் கருத்தில் கொள்ளவில்லை. சுகாதாரத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குப் பேச்சும் நடத்தப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு உடனடி நடவடிக்கை எடுத்து, நகரை நாற்றத்திலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று நகர மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-5,7)

# தொகை மதிப்பிடல் பணிகள் அனைத்து அலுவலகங்களிலும்

யாழ்ப்பாணம், நவ.9
அரச மற்றும் அரச சார்புத் துறைகளில் பணிபுரிவோர் தொடர்பான தொகை மதிப்பிடல் பணிகளை அனைத்து அலுவலகங்களிலும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த பணிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி மு.ப. 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் அனைத்து அலுவலகங்களிலும் இடம்பெற உள்ளது.

அன்று அனைத்து அரச, அரச சார்பு நிறுவனங்களில் பணியாற்றுவோர் அதற்கென நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியிடம் உரிய படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து வழங்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

அரச பணியாளர்களைக் கணக்கெடுக்கும் திட்டம் கடந்த பத்து வருடங்களாக மேற்கொள்ளப்படுகின்ற போதும், இந்த வருடம் முதற் தடவையாக அனைத்துப் பணியாளர்களிடமும் வினாக்கொத்து வழங்கி அதன் மூலம் தகவல்கள் தனிப்பட்ட ரீதியில் பூரணப்படுத்தப்பட்டு திரட்டப்படவுள்ளது என்று ஜனாதிபதியின் செயலாளர். பி.பீ.அபேகோன் அறிவித்தார். (ற-9)

# தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

## யாழ். மாநகர சபை சுகாதார தொழிலாளர்கள் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், நவ.9
யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதாரத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை எவரும் செவிமடுப்பதாக இல்லை. எமது கோரிக்கைக்குத் தீர்வு கிடைக்கும்வரை எமது போராட்டம் தொடரும்.

இவ்வாறு வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த.றொபின்சன் தெரிவித்தார்.

"யாழ். மாநகர சபையில் தற்காலிக சுகாதாரத் தொழிலாளர்களாக நீண்டகாலம் கடமையாற்றும் 127 தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்று முன்தினம் முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுவரை அது குறித்து எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை.

தொழிலாளர்களுக்கு உரிய நியமனம் தொடர்பாக யாழ். மாநகர சபையால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் ஒருமாதத்துக்குள் நியமனங்கள் வழங்கப்படலாம் என்று கூறப்பட்டது. நியமனம் வழங்கப்படாது தொடர்ந்து இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது. தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் விரைந்து நடவடிக்கைகள் எடுத்து இவர்களுக்கான நியமனங்களை வழங்கும் வரை பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும். யாழ். மாநகர சபை சுகாதார தொழிலாளர்களின் கோரிக்கைகளை யாரும் செவிமடுப்பதாக இல்லை. எங்கள் கோரிக்கைக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்" என்று சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (ற-7)



மன்னார் தாழ்வுப்பாடு கடற்கரையில் உயிரிழந்த நிலையில், கடல் பன்றி கரையொதுங்கியது. சுமார் 5 அடி நீளமும் 450 தொடக்கம் 500 கிலோ கிராம் எடை கொண்டுள்ளது. அது பாலூட்டியான 'ஆபிரியா' எனப்படுகின்ற ஒரு கடல் வாழ் உயிரினம் எனக் கண்டறியப்பட்டது. மன்னார் தாழ்வுப்பாடு கடலில் வித்தியாசமான ஓர் உயிரினம் இறந்த நிலையில் மிதக்கிறது என்று கடற் படையினருக்கு அறிவிக்கப்பட்டது. கடற்படையினர் அதனை மீட்டுள்ளனர். மன்னார் வனவிலங்குத் திணைக்கள அதிகாரி சம்பவ இடத்துக்குச் சென்று உயிரிழந்தது 'ஆபிரியா' எனப்படுகின்ற ஒரு கடல்வாழ் உயிரினம் எனத் தெரியப்படுத்தினார். குறித்த கடல் உயிரினத்தை கடற்படையினர் கடற்கரையில் புதைத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-56,21)

# ஓட்டோ சாரதிக்கு தண்டம்

சாவகச்சேரி, நவ.9
பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஓட்டோவில் பொருத்தப்பட்டுள்ள வானொலிச் சத்தத்தை அதிகரித்துச் சென்ற ஓட்டோச் சாரதியை எச்சரித்த சாவகச்சேரி நீதிமன்று 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

ஓட்டோவுக்குள் உள்ள வானொலியை அதிகளவு சத்தமாக ஒலிக்கவிட்டவாறு பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஓட்டோவை வீதியில் செலுத்தினார் என சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது.

அதேவேளை, வாகன வரிப்பத்திரமின்றி காரைச் செலுத்திய சாரதிக்கு 18 ஆயிரம் ரூபாவும் சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் ஓட்டோவைச் செலுத்திய சாரதிக்கு 12 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார விழா

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச கலாசார விழா எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனிருத்தன் தலைமையில் இடம்பெறும் . பாரம்பரிய கலாசாரங்களை சித்திரிக்கும் ஊர்திகள் ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனத் திணைக்களச்சந்தியிலிருந்து, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் வரை ஊர்வல மாகப் பயணிக்கும். ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதான கலை நிகழ்வுகள் இடம்பெறும். விழாவின் சிறப்பம்சமாக மலர் வெளியீடும், மூத்த கலைஞர்கள் கௌரவிப்பும், பண்டாரவன்னியன் விருதும் வழங்கி வைக்கப்படவுள்ளன. (ற-7,102)

## சங்கரத்தையில்...

நேற்று இரவு 8 மணியளவில் மூன்று இளைஞர்கள் துவிச்சக்கர வண்டியில் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்கள் மீது இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் முகங்களை கறுப்புத் துணியால் மறைத்தவாறு தலைக் கவசம் அணிந்திருந்த 4 பேர் கைக்கேடாரி போன்ற ஆயுதம் ஒன்றினால் தாக்குதல் நடத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
மற்றொரு இளைஞனை உதைத்து விழுத்திய வாள்வெட்டுக் குழுவினர் கையடக்கத் தொலைபேசியையும் பறித்துச் சென்றனர். இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை வீதியால் சென்ற இந்த வாள்வெட்டுக் குழுவானது சங்கரத்தைப் பகுதியில் வீதியால் செல்பவர்கள் மீது வாளைக் காட்டி அச்சுறுத்திச் சென்றதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (வ-4,101)

## தமிழரைத்...

இடம்பெற்றிருந்த சிலர், யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியேறியதன் மூலமே, நிரந்தரமாக வாழும் தமிழினமொன்று இங்கு உருவாகியது.
இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் இணைந்து கொழும்பில் நேற்று செய்தியாளர் சந்திப்பை நடத்தினர். இதன்போதே உதய கம்மன்பில புதிய வரலாற்றுப் பாடத்தை எடுத்திருக்கின்றார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
பேராசிரியர் இந்திரபாலன் தனது முதுமாணிப் பட்டப்படிப்பிற்கான ஆய்வின் பிரதி ஒன்று என்னிடம் காணப்படுகின்றது. 10 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இலங்கையில் தமிழ் மக்கள் நிலையான குடிகளாக இருந்ததில்லை என்று அவர் வாதிடுகிறார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் 22 கிலோ மீற்றர் இடைவெளிதான். இந்தப் பகுதிகளில் இன்றும் படகுகள் ஊடாக அங்கும் இங்கும் சென்றுகொண்டிருக்கின்றார்கள். இதற்கமைய தமிழ் நாட்டில் இருந்தவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடு பட்டார்கள். எனினும் நிலையான குடிகளாக அவர்கள் இருக்கவில்லை.
பொலன்னறுவை காலத்தில் இலங்கையைக் கைப்பற்ற முனைந்த தமிழ் இராணுவத்தின் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணத்தில் தங்கியதாலேயே நிலையான தமிழ் குடிகள் உருவாகினர். வந்த தினம் தேவையில்லை. இந்த நாட்டில் வாழ்வதால் அவர்களும் இந்த நாட்டுப் குடிமக்களே. ஆனால் தேசிய இனமல்ல. இதனால் நாட்டைப் பிரிக்கவோ, சுயாட்சியைகோருவதற்கோ, சுயநிர்ணயத்தை கேட்பதற்கோ அவர்களுக்கு உரிமையில்லை. 200 வருடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் இலங்கைக் குடிமக்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. அதற்காக சுயாட்சியைக் கோர முடியாது.
அந்த நாட்டின் பெரும்பான்மையின மக்களுடன் இணைந்து சிறுபான்மையினருக்குரியஉரிமைகளைப்பெற்றுவாழவேண்டும். தமிழ் நாட்டில் செய்துகொள்ள முடியாததை இங்கு செய்ய முயன்றதாலேயே பிரச்சினைகள் எழுந்தன. தமிழ் மக்கள் வேறு எங்காவது சுயாட்சியை கோருகின்றார்களா நீங்கள் கூறுங்கள்.
தமிழர்கள், சீனர்கள் யூதர்களுக்கு அடுத்தபடியாக உலகளாவிய ரீதியில் பரந்து வாழுகிறார்கள் - என்றார்.
கேள்வி - அப்படியாயின் தமிழர் பிரச்சினைக்கு நீங்கள் முன்வைக்கும் தீர்வுதான் என்ன?
தமிழர்களுக்கு சிறப்புப் பிரச்சினைகள் இல்லை. அனைத்து சமூகங்கள் தொடர்பிலும்சிந்திக்கவேண்டும். சிங்களம், தமிழ்,முஸ்லிம்எனப் பார்க்கத் தேவையில்லை. அனைவரும் நாட்டுக் குடிமக்கள் என்றே நோக்க வேண்டும். அடிப்படை உரிமைகளைஉறுதிப்படுத்த வேண்டும் என்று உதயகம்மன் பில பதிலளித்தார். (வ-5)


### வீடு வாடகைக்கு தேவை

பிரதானவீதி. (Main Steet) வீடு வாடகைக்கு தேவை. ஆஸ்பத்திரி வீதி விரும்பத்தக்கது.
077 3627055, 077 4682951



### உடனடி வேலைவாய்ப்பு

DMI Group இலங்கை வலயமைப்பின் கீழ் திறக்கப்பட உள்ள 7 புதிய கிளைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிரந்தர வேலைவாய்ப்பு.

1) Administrator (Females)
2) Team Leaders ( Male / Females)
3) Supervisors ( Male / Female)

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, மலையக பிரதேசங்களைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.

குறிப்பு : கல்வித்தகைமை : O/L, A/L
வயது : 18 - 30
தங்குமிடவசதியுண்டு

தொடர்பு -
076 678 1042,
077 664 4442
(ஊ/5989) (17.19.20)


### மரண அறிவித்தல்

#### திருமதி விமலாதேவி (புஸ்பி) இராசரத்தினம்



புத்தூர் கிழக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி இராசரத்தினம் 06.11.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் செல்லையா - லட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வியும் இராசரத்தினத்தின் (மேல் நீதிமன்ற ஊழியர், யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும் தேனுஜ னின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கனகு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமக ளும் அற்புதராணி, சிவபாலசிங்கம்(ஜேர்மன்), மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, சரஸ்வதி, தனலட்சுமி, செல்லத்துரை, நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2016) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அந்திராணை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

தகவல்:
க.இராசரத்தினம்
(கணவர்)

(J 5983) (14.18.21)

077 805 1720

### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
#### தம்பிஐயா வேலுப்பிள்ளை

கடந்த 11.10.2016 அன்று இறைபதம் எய்திய எங்கள் குடும்பத்தலைவர் அமரர் தம்பிஐயா வேலுப்பிள்ளை அவர்களின் பிரிவுச்செய்தி அறிந்து எமது ஆறாத்துயரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி, இணையத்தளங்கள் மூலம் அனுதாபச்செய்திகளை தெரிவித்தவர்கள், கண்ணீர் பிரசுரங்களை வெளியிட்டவர்கள், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள், இறுதிஊர்வலத்தில் மயானம் வரை கலந்து சிறப்பித்தவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
மேலும் நாளை (10.11.2016) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொண்டு தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
இந்த அழைப்பை எமது குடும்பத்தின் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

4 ஆம் வட்டாரம், கோம்பாவில்
(சி/23342) (17.19.20)
077 7402914

## மரண அறிவித்தல்கள்

### அப்புத்துரை செல்லச்சாமி

(ஓய்வு பெற்ற சுன்னாகம் பட்டனசபை சுகாதார மேற்பார்வையாளரும், முன்னாள் பிரபல கரப்பந்தாட்ட வீரரும்)




சூளானை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை செல்லச்சாமி நேற்று (08.11.2016) செவ்வாய்க் கிழமை கலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை- செல்ல முத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் தங்கவேலு, வடிவேலு, கதிரவேலு, செல்வநாயகி, ஶ்ரீகாந்தமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற தங்கம் மற்றும் ஶ்ரீரஞ்சினி, ஶ்ரீகோமதி, இந்துமதி, ஜீவன், ஜீவராணி, கீதா, மஞ்சுளா, இராமச்சந்திரன், குகநாதன், தவமணி, இராசதுரை, நடராசா ஆகியோரின் மைத்துனரும், சோபனா, மனோகரசிவம், குமரேஸ்வரன், சோமாயினி, நரேஸ், சமீனா ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், கோகுலன், பராகுலன், இராகுலன், நிராஜினி, நிறோஜன் ஆகியோரின் பெரிய மாமனாரும், கிருஸ்ணகுமாரி, மோகனகுமாரி, ரேணுகாகுமாரி ஆகியோரின் சிறிதந்தையும், சிவரூபன், ஜசிதரன், மயூரன் ஆகியோரின் மர்மனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2016) புதன்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
சுன்னாகம்.

தகவல்:
செ. கேதீஸ்வரன் (தம்பி)
077 6374301

### இராசையா சிவசுப்பிரமணியம்

பத்தர் (தெய்வேந்திரம்)




கொக்குவில் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை மீனாட்சியம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவசுப்பிரமணியம் பத்தர் நேற்று (08.11. 2016) செவ்வாய்க்கிழமை கால மானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராசையா தம்பதிகளின் ஏக புத்திரனும் சங்கத்தானை மீனாட்சியம்மன் கோயிலடியைச் சேர்ந்த ஞானசேகரம்-சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சோதிராணியின் பாசமிகு கணவரும் சிவதாஸ், நிசாந்தன், வரதன், இந்துகா, லீலாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகன்யாவின் அன்பு மாமனாரும் சஞ்சனா, ருசாந்தன் ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2016) புதன்கிழமை சங்கத்தானை இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீனாட்சி அம்மன் கோயிலடி,
சங்கத்தானை.
077 9331712, 077 7471194

தகவல்:
குடும்பத்தினர்.

(C 23343) (16,17,19)

### சின்னத்தம்பி யோகராசா



தோற்றம் 21.06.1949 மறைவு 08.11.2016

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் நாவற்காடு, அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி யோகராசா நேற்று (08.11. 2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமுத்து-சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோராணியின் பாசமிகு கணவரும் சசிகரன் (ஆசிரியர், மாறை/ஹிழந்தாவ தமிழ் மகா வித்தியாலயம்), கிரிஜா (மாவட்ட உதவிப்பதிவாளர், வலி தெற்கு பிரதேச செயலகம் உடுவில்), சுதாஜினி (பொருளியல்துறை மூன்றாம் வருடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் இன்று (09.11.2016) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறை பிரதான வீதி,
நாவற்காடு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
யோ.சசிகரன் (மகன்)
077 4162856

(C 23341) (16,17,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு

# கேள்வி அறிவித்தல் - 2017

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2017 இலிருந்து 31.12.2017 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம்வழங்கும் காலம் :- 09.11.2016 முற்பகல் 9.00 மணிதொடக்கம் 2016.11.23 நண்பகல் 12.00 மணிவரை (அலுவலக நாள்களில் மட்டும்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:- 2016.11.23 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விதிறக்கப்படும் திகதி:- 2016.11.23 பி.ப 01.00 மணி

| இல | குத்தகைவகை | மீளளிக்கமுடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்கக் கூடிய கேள்விவைப்புப் பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 01. | புதுக்குடியிருப்புபொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டிபாதுகாப்புநிலையமும் (விற்பனைநிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 20,000.00 | 4,631,000.00 |
| 02. | புதுக்குடியிருப்புபொதுச்சந்தைமாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 1,651,100.00 |
| 03. | புதுக்குடியிருப்புபொதுச்சந்தைகோழிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 1,981,100.00 |
| 04. | உடையார்கட்டுபொதுச்சந்தை (விற்பனைநிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 10,000.00 | 476,000.00 |
| 05. | உடையார்கட்டுபொதுச்சந்தைமாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 633,050.00 |
| 06. | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 136,400.00 |
| 07. | றெட்பானா பொதுச்சந்தை | 1,000.00 | 1,500.00 | 45,100.00 |
| 08. | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 15,000.00 | 1,716,000.00 |
| 09. | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 495,550.00 |
| 10. | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 282,750.00 |
| 11. | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 196,350.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 01. | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனைநிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 5,000.00 | 145,750.00 |
| 02. | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 111,650.00 |
| 03. | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 56,650.00 |
| | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனைநிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 10,000.00 | **385,000.00** |
| | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 149,600.00 |
| | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 501,875.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 01. | திருமுறிகண்டி கட்டணகழிப்பறை | 1,000.00 | 5,000.00 | 90,750.00 |
| 02. | மாங்குளம் கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 122,650.00 |

நிபந்தனைகள்.

- கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை **செயலாளர் ,பிரதேசசபை ,புதுக்குடியிருப்பு** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் **கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு** பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், முல்லைத்தீவு** என்றமுகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றிலொரு பகுதியை**2016.11.28 ஆம்** திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ளவேண்டும். மேலதிக விவரத்தினைதலைமைஅலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- கேள்விப்பத்திரத்தினை பெறவிரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசியஅடையாளஅட்டையின் பிரதியுடன் தாம் வதியும் வதிவிடத்தின் வதிவிடசான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- வியாபாரம் நடைபெறும் போதுபொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினைப் பயன்படுத்தல் வேண்டும்.
- மரக்கறிச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில்(1Km சுற்றுவட்டாரத்துள்) நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது.
- பொதுச்சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும்சந்தைப்பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணம் அறவிடலாம். மீன்,மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் இடத்திற்கு(4'X4') ரூபா 40.00இற்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக)அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவிதகட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 5.00உம் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00உம் அறவிடலாம். அதற்குமேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
- இறைச்சிவகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது சபையினால் தீர்மானிக்கப்படும்.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடை வாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
- சந்தைவளவின் உட்புறமாக உள்ளகடைகளுக்கு எந்தவிதமான வரியும் அறவிடக்கூடாது.
- ஏற்கனவே ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தவறுநர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதில் பங்குபற்ற இயலாது.
- சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவைஏற்படின் மாற்றப்படும்.
- மேலதிகவிவரங்களைஅலுவலகநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.ந.ஜெயராஜா,
செயலாளர்,
பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
2016.11.09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர்...

உயிரோட்டமாக அனைத்துத் தமிழ் மக்களும் நினைவு கூர வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அறைகூவல் விடுத்துள்ளார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து, தாயக விடிவுக்காகக் களமாடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரமறவர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் எதிர்வரும் 21ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரையில் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதனை உணர்வெழுச்சியுடன் நினைவு கூருமாறு அழைப்பு விடுத்துள்ளார் எம்.கே.சிவாஜிலிங்கம்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் விடிவுக்காகவும் விடுதலைக்காகவும் ஆயுதப் போராட்டத்தில் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த, போராடி மடிந்த எமது மாவீரர்களுக்காக எதிர் வரும் 21ஆம் திகதிமாவீரர்தினத்தை அனைத்துத் தமிழ் மக்களும் நினைவு கூர வேண்டும்.

எமது தமிழ் மக்கள் விடுதலையுடன் வாழ வேண்டும் என்பதற்காக பல்லாயிரக் கணக்கான போராட்ட வீரர்கள் கடந்த காலத்தில் வீரச் சாவடைந்திருக்கின்றர். ஆகவே அந்த வீரமறவர்களை ஒவ்வொரு மக்களும் நினைவு கூர வேண்டும்.

புலம் பெயர் தேசங்களிலும் தமிழகத்திலும் எந்த விதமான அச்சமுமின்றி நினைவு கூர்ந்து வருகின்றனர். இலங்கை அரசு, சிங்கள கிளர்ச்சியாளர்களான மக்கள் விடுதலைமுன்னணியின் மறைந்த தலைவர் ரோகணவுக்கும் உயிரிழந்த ஆயிரக்கணக்கான தோழர்களுக்கும் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை தினம் என்று கார்த்திகை மாதம் 13ஆம்திகதியை நினைவு கூர முடியும் என்றால் ஏன் எமது மக்களின் விடுதலைக் காகப் பல ஆண்டுகளாகப்போராடிய எமது போராட்ட வீரர்களின் மாவீரர் தினத்தை நினைவு கூர முடியாது.

எமது போராட்ட வரலாற்றிலே எமக்காகக் களமாடி இன்னுயிர்களை நீத்த மாவீரர்களுக்கும் போரின்போது உயிரிழந்தபொதுமக்களுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் மாவீரர் தினம் அமைய வேண்டும். அனைத்து மக்களும் எதிர்வரும் 21 ஆம் திகதியிலிருந்துஇறுதி நாளான 27 ஆம் திகதி பிரகனப்படுத்தப்பட்ட மாவீரர் நாளை தமது வீடுகளிலோ அல்லதுசமயத்தலங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ உணர்வுபூர்வமாக நினைவு கூர வேண்டும்- என்றார். (த-5-8)

தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு
எம்மிடம் நல்லினத் தென்னம்பிள்ளைகளும், குறைந்த காலத்தில் பயன் தரக்கூடிய தென்னம் நாற்றுக்களும் விற்பனைக்கு உண்டு.
077 659 2044

பெயர் மாற்றம்
பலாலி தெற்கைச் சேர்ந்த சோ.தேவதாசன் சர்மா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சோ.தேவதாசன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
சோ.தேவதாசன்.

காணி விற்பனைக்கு உண்டு
சாவகச்சேரி நகரசபைக் காரியாலயத்துக்கு முன்புறமாகச் சந்தை சுற்று வட்ட வீதியில் நில. பர. 2 குழி 10 விஸ்தீரண வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு.
077 634 1309

Walk in interview
மார்க்கட்டிங் (Marketing) துறையில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பேச்சாற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். தகுதி. அனுபவம் அவசியமில்லை.
வயதெல்லை : 18-30
வியாழக்கிழமை: 10th Nov 2016 நேரில் வரவும்.
நேரம்: 10am to 4pm
Tel : 021 221 7997
Translations
We offer translation services(Tamil to English/ English to Tamil)
Tel : 021 221 7997 Mob: 077 558 7274
Email : norokpo@gmail.com

வாடகைத்தாய் தேவை
30 வயதுக்குக் குறைவான பெண் IUF சிகிச்சைமுறை மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.
076 6341028

வாடகைக்குத் தேவை
யாழ் நகருக்கு அண்மையில் உள்ளவாறு வீடு வாடகைக்குத் தேவை. தளபாடம் மற்றும் ஏனைய வசதிகள் விரும்பத்தக்கது.
077 158 1811

விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)
மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)
சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)
றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

# கிருமிநாசினிகள் விற்பதற்கு அடுத்த ஆண்டு முதல் கட்டுப்பாடு

## வவுனியா ஓமந்தை விவசாய போதனாசிரியர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.9
அடுத்த ஆண்டு முதல் விவசாய போதனாசிரியர்களின் அனுமதியின்றி மருந்து கடைகளில் எந்தவொரு விவசாய கிருமிநாசினி வகைகளும் விநியோகிக்கப்படமாட்டாது.

இவ்வாறு வவுனியா ஓமந்தை விவசாய போதனாசிரியர் வி.டிலுக்சா தெரிவித்தார்

ஓமந்தை கிராம அலுவலகத்தில் கிராம அலுவலர் செ.அனுசியாதலைமையில் நேற்று தேசிய உணவு நிகழ்சித் திட்ட நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாய உற்பத்தியில் இரசாயனங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். ஓமந்தை மருதங்குள பிரதேசங்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகள். உயிர்வாழ்வதற்குத் தான், நாம் உண்பதாக கூறிக்கொண்டு அதனை நாம் நஞ்சாக மாற்றிச் சாப்பிடுவதால் பிரியோசனமே இல்லை. உங்கள் சிறுவர்களுக்கும் அதனை கொடுப்பது அந்த பிள்ளைகளை நீங்களே கொல்வதாக அமையும்.

இரசயான பதார்த்தங்கள் கலக்கப்பட்ட உணவுகளை அருந்துவதால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. முன்னைய காலத்தில் எல்லோரும் கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள். இரசயான முறைகளை அவர்கள் கையாளவில்லை. நீண்ட ஆயுளுடன் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு நோய்கள் மிகவும் அரிதாகவே இருந்தது.

இன்று வாயால் உச்சரிப்பதற்கு கஷ்டமான இரசாயன மருந்துகள் வந்துள்ளன. அவை கடைகளில் விற்பனை செய்யப்படுகிறன. அவற்றை விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். கடைகளில் விவசாயிகள் கேட்கும் மருந்து வகைகள் தாராளமாக விநியோகிக்கப்படுகின்றன. அடுத்த ஆண்டு முதல் விவசாய போதனாசிரியரின் அனுமதியின்றி மருந்துக் கடைகளில் எந்தவொரு இரசாயன மருந்து வகைகளும் விநியோகிக்கப் படமாட்டாது என விவசாய அமைச்சு அறிவித்தல் விடவுள்ளது. இது நடைமுறைக்கு வரும் பட்சத்தில் விவசாயத்தில் இரசாயன மருந்துகள் பயன்படுத்துவது கட்டுப்பாட்டுக்குள் வரும் என்று நம்புகின்றோம்.

கோதுமை மா பயன்படுத்துவதை இயன்றவரை தவிருங்கள். எமது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி மாவை உணவுத் தேவைக்காக பயன்படுத்துங்கள்.

இதன் மூலம் நீரிழிவு நோய் ஏற்படுவதை இயன்றவரை தவிர்க்கலாம். இன்று வவுனியா மாவட்டத்தில குரக்கன் உற்பத்தி செய்வது மிகவும் அரிதாகிவிட்டது.

அதில் உள்ள போசாக்கை எவரும் உணர்ந்து கொள்வதில்லை. இதனை உற்பத்தி செய்யுங்கள் சந்தை வாய்ப்பு அதிகம் உள்ளது. இந்த குரக்கன் மா நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும். இதனை பயன்படுத்துபவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படாது-என்றார். (ற-21,402)

### மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு நிதி உதவி

வவுனியா, நவ.9
வவுனியா கள்ளிக்குளத்தில் மீள் குடியமர்ந்த 8 குடும்பத்தினருக்கு வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவால் 8 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

வவுனியா, கள்ளிக்குளம் மீள் குடியேற்றக் கிராமத்தில் குடியமர்ந்த எட்டு குடும்பங்களுக்கு வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவால் ஒரு குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. குறித்த எட்டுக் குடும்பங்களும் இடம்பெயர்ந்து வேப்பங்குளம் பகுதியில் உறவினர்களின் வீடுகளில் வசித்து வந்த நிலையில் வவுனியா மாவட்ட செயலாளர் கோரிக்கைக்கு அமைய கள்ளிக்குளத்தில் குடி யமர்ந்தனர் என வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா தெரிவித்தார். (ற-21)

# விவசாயிகள் தமது பிள்ளைகளை கல்வியில் ஊக்குவிக்கவேண்டும்

## வவு. கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வவுனியா, நவ.9
விவசாயிகள் தமது பிள்ளைகளை எவ்வளவு தூரம் விவசாயத்தில் ஈடுபடுத்துகின்றார்களோ அதைவிட மிக முக்கியமாக கல்வியிலும் ஈடுபடுத்தவேண்டும். இவ்வாறு வவுனியா மாவட்ட கமநல உதவி ஆணையாளர் ஆர். விஜயகுமார் தெரிவித்தார். வவுனியா ஓமந்தை கமநல சேவைகள் திணைக்களத்தில் நேற்று நடத்தப்பட்ட புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அதிகாரிகள் அரசியலால் தெரிவு செய்யப்படுபவர்கள் அல்ல. கல்வியால் தெரிவு செய்யப்படுகின்றார்கள். பல நிர்வாக ரீதியில் முடிவுகள் எடுப்பவர்கள் அதிகாரிகளே. அவர்கள் கல்வியின் மூலமாகவே முன்னுக்கு வருகின்றார்கள். பிரதேச செயலாளர், மாவட்டச்செயலாளர், அமைச்சின் செயலாளர் என்று சகலரும் கல்வியின் மூலமாகவே முன்னுக்கு வருகின்றார்கள்.

அரசியல் ரீதியாக முடிவுகள் எடுக்கப்பட்டாலும், கடைசியில் அந்த முடிவுகள் அதிகாரிகளால்தான் மேற்கொள்ளப்படுகின்றது. நிர்வாக ரீதியிலான பல முடிவுகளை எடுப்பவர்கள் அதிகாரிகளாகத்தான் இருக்கின்றார்கள்.

போரால் ஓமந்தை, கனகராயன்குளம், நெடுங்கேணி போன்ற பிரதேசங்கள் கடுமையான பாதிப்புக்களைச் சந்தித்தது. பல இடப்பெயர்வுகளைச் சந்தித்துள்ளோம். தற்போது அடிப்படையில் எமது கட்டமைப்புக்களை மாற்றிக்கொண்டு வருகின்றோம். எங்களிடம் இருக்கின்ற ஒரே ஆயுதம் கல்வி. கல்வியின் மூலமாக சிறந்த ஒரு இடத்தை சமூகத்தில் ஏய்திடமுடியும்.

விவசாயிகள் தமது பிள்ளைகளை எவ்வளவு தூரம் விவசாயத்தில் ஈடுபடுத்துகின்றார்களோ அதைவிட மிக முக்கியமாக கல்வியிலும் ஈடுபடுத்த வேண்டும். அதன் அடிப்படையாகவே இந்த புலமைப்பரிசில் திட்டம் திகழ்கின்றது. இந்தத் திட்டம் எதிர்மறையாக மற்றும் நேர்மறையாக விமர்சனங்களைக் கொண்டிருந்தாலும் இன்று கல்வியில் சமூகத்தில் ஒரு அடைவு மட்டத்தை மதிப்பீடு செய்யக்கூடியது இதுவே.

பிள்ளைகளினுடைய கல்வியை ஊக்குவிக்க வேண்டும்.

கல்வியின் மூலம் அவர்களுடைய வாழ்வாதாரம் சிறக்க வேண்டும். எதிர்காலத்தில் அவர்கள் நல்லநிலைக்கு உயரவேண்டும். இவர்களைப் போன்று இந்த கமநல சேவைகள் திணைக் களத்துக் குட்பட்ட ஏனைய மாணவர்களும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அவர்களுடையகல்வியும் வளர்ச்சியடைய வேண்டும்.

எதிர்காலத்தில் சமூகத்தை முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்- என்றார். (ற-21)

## நூல் வெளியீடு

வல்வை கி. செ.செல்லத்துரை எழுதிய மனப்பட்ட மனிதர்கள் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வல்வெட்டித்துறை அ.த.க. பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ. த. ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜனும் பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானமும் கலந்துகொள்ளவுள்ளனர். நூலின் வாழ்த்துரையை ஈழத்து முதல் பெண் விமானி துரை அர்ச்சனாவும் முன்னுரையை கம்பிகள் மொழி பிறேமும், நூலின் ஆய்வுரையை அப்பாத்துரை மாஸ்ரரும் நிகழ்த்துவர். (ற-108)

வீடுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு உண்டு
சடச்சப்பை கொல்லங்கலட்டி எனும் இடத்தில் நான்கு அரைப் (4 1/2) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 067 6957

கொழும்பில் தொடர்மாடி குடியிருப்புக்கள்
சகலவித தளபாடங்களுடன் (குளிரூட்டப்பட்டவை | A/C)


HOTLINE 011 480 1818 / 077 354 0632 / 077 633 2580

மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்


மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தில் வசித்துவருபவருமாகிய
திருமதி
சரோஜினிதேவி கனகரத்தினம்
அவர்கள்
மியன்மாரில் (பர்மா) 15.10.2016 அன்று நடைபெற்ற இந்தியா நந்தவனம் பவுண்டேசன் மற்றும் மியன்மார் தமிழ் கல்வி வளர்ச்சி மையம் இணைந்து நடத்திய மியன்மா இலக்கியப் பெருவிழாவில் இலக்கியம் மற்றும் சமூக சேவைகளைப் பாராட்டி **"கல்விச் செம்மல்"** விருது வழங்கி சிறப்புப்பெற்றுள்ளார். இவரது தமிழ் வளர்க்கும் பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.
குடும்பத்தினர்
உறவினர்கள், நண்பர்கள்.

## திருத்தம்
## மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
## வடக்கு மாகாணம்

**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு - (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (II)**

மேற்படி ஆட்சேர்ப்புப் பரீட்சை தொடர்பாக 2016.08.04ஆம் திகதி வியாழக்கிழமை 'தினக்குரல், உதயன், வலம்புரி' ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட விளம்பரம் சார்பாக.

வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சைக்குரிய விளம்பரத்தின் பந்தி 04.5 ஆனது பின்வருமாறு திருத்தப்படுகிறது.

* 18.11.2016ஆம் திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
* விண்ணப்ப முடிவு திகதியானது 18.11.2016ஆம் திகதி வரை நீடிக்கப்படுவதுடன் நியமனத் திகதியன்று 45 வயதுக்கு மேற்படாது இருத்தல் கவனத்தில் கொள்ளப்படும்.

மேலும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சை தொடர்பான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ரூ.வரதலிங்கம்,
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ்த் தேசிய முன்னணி அலுவலகத்தில்

# வாள்வெட்டு வழக்கின் சந்தேகநபரே கைது

யாழ்ப்பாணம், நவ. 9

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட அலெக்ஸ் அரவிந்தன் வாள்வெட்டுக் குற்றச்சாட்டு வழக்கில் ஏற்கனவே கைதாகியவர் என்று தெரியவருகிறது. அந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

இவரது கைது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்த முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார், எங்கள் கட்சியின் செயற்பாட்டாளர்களைக் கைது செய்து அவர்களை ஆவா குழுவோடு தொடர்புபடுத்துகிறார்களா என்ற சந்தேகம் எழுகிறது என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை, சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அந்தச் சம்பவத்தின் பின்னர் வன்முறைகளில் இருந்து ஒதுங்கிய அவர் தனியார் கல்வி நிலையம் ஒன்றின் ஊடாக வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தின் தொலைக் கல்வி ஊடாகச் சட்டம் பயின்று வந்தார் என்றும் கூறப்படுகிறது. (உ)

### யாழ். நீதிமன்றம் மீதான தாக்குதல்

# சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பகிர்வை முன்வைக்க நீதிவான் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம் நவ. 9

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைக்குப் பின்னர், யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி தாக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை விரைவுபடுத்திக் குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.நீதிவான் மன்று பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டது.

தாக்குதல் நடந்து ஒரு வருடத்தைக் கடந்துள்ள நிலையில் இதுவரை சந்தேக நபர்களுக்கு எதிராக எந்தவித குற்றப்பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டிருக்காததனைச் சுட்டிக்காட்டிய நீதிவான் சி. சதீஸ்தரன் வழக்கை விரைவுபடுத்துமாறு உத்தரவிட்டார்.

கடந்த வருடம் மே மாதம் 20 ஆம் திகதி யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி தாக்கப்பட்டது. தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 45 சந்தேகநபர்கள் தொடர்பான வழக்கை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார்.

புங்குடுதீவில் மாணவி வித்தியாவின் படுகொலையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் இடம்பெற்றன. அது பின்னர் வன்முறையாக மாறியதுடன், அதன் விளைவாக யாழ்ப்பாண நீதிமன்ற கட்டட தொகுதியும் ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலுக்குள்ளானது. யாழ். நீதிமன்ற தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சம்பவம் இடம்பெற்றதினமன்று நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 45 சந்தேகநபர்களுக்கு எதிராக இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் சட்டவிரோதக் கூட்டம் கூடியமை, சிறு காயங்களை ஏற்படுத்தியமை, கடுங்காயங்களை ஏற்படுத்தியமை, அத்துமீறி உட்பிரவேசித்தமை போன்ற சட்டப்பிரிவுகளின் கீழும், பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தியமை என்ற சட்டப்பிரிவின் கீழும் பொலிஸாரால் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. நேற்று இந்த வழக்குகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதன்போதே குற்றப்பகிர்வுப் பத்திரத்தை தாக்கல் செய்ய பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டது. (வ-4,103)

# வன்னிப் பகுதியில் இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம்,நவ.9

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க்குறிப் பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

கிளிநொச்சி பிரதேசத்தில் டொன் பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வட காடு, பாலிநகர், அம்பாள்புரம், கொள்ளவிளாங்குளம், ஐம்பது வீட்டுத் திட்டம், பாண்டியன் குளம், நட்டாங்கண்டல், கரும் புள்ளியான், தென்னியங் குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை, ஆலங்குளம், துணுக்காய், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பனிக்கன்குளம், மாங்குளம், நீதிபுரம், ஒலுமடு டயலொக் தொலைத்தொடர்பு கோபுரம் அகிய இடங்களிலும்– வவுனியா பிரதேசத்தில் பெரியார்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் உமண கரி, வங்காலை, தோமஸ்புரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், நறுவிலிக்குளம், சிலா வத்துறையிலிருந்து அரிப்பு வரை, சவேரியார்குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என்று அவெர் தெரிவித்தார். (வ-10)

# சிகை அலங்கரிப்பு நிலையங்களை இராணுவத்தினர் மூடவேண்டும்

## ஒரு மாதகால அவகாசம் வழங்கினர் வடக்கு சிகை அலங்கரிப்பாளர்கள்

வவுனியா, நவ.9

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் இராணுவத்தினர் நடத்தி வரும் சிகை அலங்கார நிலையங்கள் மூடப்படவேண்டும். இதற்காக ஒரு மாத கால அவகாசம் அவர்களுக்கு வழங்குகின்றோம். இவ்வாறு வடக்கு மாகாண சிகை அலங்காரிப்பாளர்கள் சங்கம் நேற்று தீர்மானம் நிறைவேற்றியது.

வடக்கு மாகாண சிகை அலங்கரிப்பாளர் சங்க பொதுக் கூட்டம் வவுனியா முத்தையா மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது என்று வடக்கு மாகாண சிகை அலங்கார சங்கத்தின் தலைவர் கே. நாகராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

வவுனியா முத்தையா மண்டபத்தில் நேற்று வடக்கு மாகாண சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினரின் கூட்டம் இடம்பெற்றது. வவுனியா – பம்பைமடு, மாந்தை மேற்கு, கிளிநொச்சி, பூநகரி, கண்டாவளை, ஓமந்தை, நாம்பன்குளம், பள்ளமடு ஆகிய இடங்களில் இராணுவத்தினர் சிகை அலங்கார நிலையங்களை அமைத்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் எமது சங்க உறுப்பினர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் குறைந்த கட்டணத்தில் சிகை அலங்கரிப்புத்தொழிலில் ஈடுபடுவதால், எமது அங்கத்தவர்களின் வாழ்வாதாரத் தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியும், இது வரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை – என்றார். இதேவேளை, நேற்றைய பொதுக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன் னார் மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களில் இருந்து வந்திருந்த சிகை அலங்கரிப் பாளர்கள் கலந்துகொண்டனர். (வ-5)

# ஞானசார தேரருக்கு எதிராக 2 முறைப்பாடுகள்

ஆர்ப்பாட்டம் செய்வதற்காக முஸ்லிம்கள் வந்தால் அவர்களை நெருப்புவைத்துக்கொல்லுவோம், அவர்கள் மீது தற்கொலை தாக்குதல் நடத்துவோம் என்று மிரட்டல் விடுத்த ஞானசார தேரர் மீது தவ்ஹீத் ஜமாத் சார்பில் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைக்காக முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் அரசைக் கண்டித்து தவ்ஹீத் ஜமாத் கடந்த 3 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தது.

ஆர்ப்பாட்டத்தைத் தடை செய்யுமாறு கோரி ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பொது பல சேனாவின் செயலாளர் ஞானசார தேரர், அல்லாஹ்வுக்கு இரண்டா? மூன்றா? என்றும் இவர்கள் எங்கிருந்து பிறந்தவர்களோ தெரியாது எனவும் பேசியிருந்தார். அல்லாஹ்வைக் கேவலப்படுத்தும் விதமாக கருத்து வெளியிட்ட ஞானசார தேரர் மீதும், ஆர்ப்பாட்டம் செய்வதற்காக முஸ்லிம்கள் வந்தால் அவர்களை நெருப்பு வைத்துக் கொல்லுவோம், அவர்கள் மீது தற்கொலை தாக்குதல் நடத்துவோம், என்று பேசியவர் மீதும் தனித்தனியான இரண்டு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-5)

# வெளி மாவட்ட மீனவர்களால் கொக்கிளாய் மீனவர் பாதிப்பு

முல்லைத்தீவு, நவ.9

புல்மோட்டை மீனவர்கள் எல்லை தாண்டி அத்துமீறிச் செய்யும் தடைசெய்யப்பட்ட தொழில்களால் தொடர்ந்தும் எமது சிறு வலைகளும் குல்லா தொழில்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கொக்கிளாய் கருநாட்டுக்கேணி கொக்குத்தொடுவாய் மீனவ மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

களப்பு பகுதியில் தொழிலில் ஈடுபட முடியாத நிலை பற்றி மீனவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

காலங்காலமாக களப்பு முகத்துவாரம் மற்றும் பெருங்கடல் என்று தொழில் செய்த நாம் முகத்துவாரத்தையும் பெருங்கடலையும் இழந்து களப்பே தஞ்சமென வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றோ அந்தக் களப்பும் எம்மிடமிருந்து பறிக்கப்படும் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம். அனுமதிக்கப்பட்ட சிறிய வலைகளை மட்டும் பயன்படுத்தி எம் வயிற்றுப்பசியை போக்கிய நாம் 2016ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 25ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கொக்கிளாய் களப்புபற்றியகூட்டத்தீர்மானத்தை தொடர்ந்து, அங்கும் தொழில் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

தடைசெய்யப்பட்ட இயந்திரப் படகுகளும் கூட்டுவலைகளும் முக்கூட்டு வலைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், மீறுவோரது உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நாம் முன்னெடுத்தோம். ஆனால் இன்றும் இந்தப் பிரச்சினை எம்மை விட்டு நீங்கியதாக இல்லை. மாறாக புல்மோட்டையை சேர்ந்த மீனவர்களால் தொடர்ச்சியான பலதரப்பட்ட பாதிப்புக்களுக்கு நாம் உள்ளாகி வருகின்றோம்.

தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்படும் நிலையையும் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள எம் குடும்பங்களின் நிலைகளையும் எமக்கு பொறுப்பானவர்கள் கவனத்தில் எடுக்கமாட்டார்களா? பேச நாதியற்று பேசிய மொழி புரியாமல் எமது மாவட்டத்திலேயே கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி முதல் நாம் ஊமைகளாக்கப்பட்டுள்ளோம்.

பாரபட்சமாக செயற்படும் உயர் அதிகாரிகளையும் இவர்களின் கீழ் இங்கே நீதியாக இயங்க முடியாத அதிகாரிகளையும் காணும்போது, அதனை ஏற்றுக் கொள்ள முடியாமலும் தவிக்கின்றோம். ஏனைய இன மக்களுக்கு ஒரு நீதி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய எமக்கு இன்னொரு நீதியா? எமக்கில்லாத அவகாசமும் களப்பும் துறைகளும் அவர்களுக்கு எப்படி? ஏன் இந்த பாரபட்சமான களப்பின் நீரியல் வளத்தில் அக்கறையில்லாத தீர்மானம்?

மீன்பிடித் தொழிலையே வாழ்வாதாரமாக கொண்டிருந்த நாம் இன்றைய உணவுக்கே வழி இல்லாது தவிக்க தொடங்கியுள்ளதுடன் எம் குழந்தைகளின் கல்வி மற்றும் அடிப்படை வசதிகள் போன்றவற்றை முழுமைசெய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். உறவுகளை இழந்தோம் உடமைகளை இழந்தோம். அடக்கப்பட்டோம், அநாதை களாக்கப் பட்டோம். இப்போது எமது களப்பில் கூட ஏனைய மாவட்ட மீனவர்களால் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் மற்றும் எம்மைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையிலும் நாம் தாக் கப்படுகின்றோம் என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-21,101)

# கொக்குவிலில் சந்தேகத்தில் ஐவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 9

சந்தேகத்தின் பேரில் 5 பேரை நேற்றுமாலை கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.காங்கேசன்துறை வீதி கொக்குவிலில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகத்துக்கு இடமாக நின்றிருந்த அவர்களிடம் பொலிஸார் பெயர், விவரங்கள் உள்ளிட்ட விடயங்களைக் கேட்ட போது 5 பேரும் உரிய பதில் வழங்கியிருக்கவில்லை. பொலிஸாரின் சந்தேகங்களை அவர்கள் தீர்க்கவில்லை. அதனால் மேலதிக விசாரணைக்காக சந்தேகத்தின் பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட தமிழருக்கும் இராணுவத்துக்கு வழங்கும் உரிமைகளை வழங்குங்கள்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

வவுனியா, நவ.9
அழிவுகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நவீனரக ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதலில் ஈடுபட்ட அரச தரப்புக்கே இந்தளவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதெனில், அதைவிடக் குறைவான பலத்துடன் போராடிய தமிழ்த் தரப் புக்கு எந்தளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்பதை நன்கறிவீர்கள். இலங்கை இராணுவத்தில் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் சகல உரிமைகளையும், பெற்றோர், உறவினர்களின் துணையுடன் வாழும் தமிழ்த் தரப்புக்கும் (மாற்றுத் திறனாளிகள்) வழங்கி நீதியை நிலைநாட்டுவீர்கள் என்று தமிழர்கள் சார்பில் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்தார்.

போரால் மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்ட இலங்கை இராணுவத்தினருக்கான ஓய்வூதியத் தொகை ஜனாதிபதியால் அதிகரிக்கப்பட்டது. அது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார். அதில் உள்ளதாவது–

இராணுவத்தினர் போன்று தமிழர் தரப்பில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வீதிக்கு வந்து தமது வாழ்வாதாரத்துக்காக போராடக்கூடிய ஏதுவான நிலைமையில் கூட இல்லை. அதற்குக் கூட பிறிதொரு நபரின் உதவியையே அவர்கள் நாடி நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையில் உள்ளார்கள்.

அரசு தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்திய ஆயுதங்கள், தளபாடங்கள் போன்ற அனைத்துக்கும் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துவதில் தமிழ் மக்களும் விரும்பியோ விரும்பாமலோ பங்காளி களாக்கப்பட்டுள்ளனர். போர் புரிந்த இராணுவத்தினருக்கு ஒரு நீதியும் பாதிக் கப்பட்ட தமிழ்த் தரப்புக்கும் தமிழ் பொது மக்களுக்கும் அநீதியும் இழைக்கப்பட்டுள்ளதை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

மனிதாபிமானத்தைக் கருத்திற்கொண்டு இத்தகையவர்களின் மருத்துவ சிகிச்சைகளை கிரமமாக வழங்கி பாராமரிப்பதற்கு பொதுவான பராமரிப்பு நிலையமொன்றை வன்னி பிரதேசத்தில் அமைப்பதற்குரிய நடவடிக்கையை தாங்கள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிரந்தரமான மாதாந்த கொடுப்பனவொன்றை வாழ்வாதர செலவினங்களுடன் ஒப்பிட்டு நியாமானதாக வழங்கு வதற்குரிய நடவடிக்கையையும் துரித மாக எடுக்கவேண்டியது நீதியான செய லாகும்.– என்றுள்ளது.

(ற-21)

# ஆலயக் காணியைத் தனியார் உரிமை கோரியதால் குழப்பம்



கிளிநொச்சி, நவ.9
கிளிநொச்சி, தொண்டமான் நகரில் உள்ள உதிரவேங்கை ஆலயக் காணியைத் தனியாருக்கு வழங்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படவிருந்த நில அளவை முயற்சி அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பால் தடுக்கப்பட்டது.

உதிரவேங்கை வைரவர் ஆலயத்துக்குச் சொந்தமான காணி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு வழங்கப்பட்டது. அதற்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆலய நிர்வாகத்தினர் குறித்த காணி ஆலயத்துக்குச் சொந்தமானது என்று தெரிவித்து கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். விசாரணைகளின் பின்னர் காணி ஆலயத்துக்குச் சொந்தமானது என்று நீதிமன்று தீர்ப்பளித்தது.

தற்போது குறித்த காணியில் அரை ஏக்கர் நிலம் தனக்குச் சொந்தமானது என்று தெரிவித்துப் பெண் ஒருவர் நில அளவைத் திணைக்களத்தின் உதவியுடன் நேற்றுக் காணிக்குள் பிரவேசித்துள்ளார். நில அளவை அதிகாரிகள் காணியை அளவீடு செய்ய முற்பட்டனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த விளையாட்டுக் கழகத்தினர், பொதுமக்கள் அங்கு கூடினர். நில அளவை செய்வதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்தக் காணி உதிரவேங்கை வைரவர் ஆலயத்துக்குச் செந்தமான காணி. பல ஆண்டுகளாக ஆலயமும், ஞான வைரவர் விளையாட்டுக் கழகமும் பயன்படுத்தி வந்த நிலையில் வெளிநாட்டில் இருந்து தற்போது வந்து தங்களுடையது என்று உரிமை கோருவது நியாயமற்றது. அதற்கு நாம் அனுமதியளிக்க முடியாது.– என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதிக்கு பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர். எதிர்ப்பை அடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் நில அளவை முயற்சியை இடைநிறுத்தி அங்கிருந்து அகன்றனர். (ற-21,35)



வவுனியாவில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் சமிக்ஞை விளக்குப் பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிரந்தர நியமனத்தையும், ஊதிய உயர்வையும் வழங்குமாறு கோரி ரயில் கடவைக் காப்பாளர்கள் போராட்டங்கள் நடத்தி வரும் நிலையில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக தாண்டிக்குளம் ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் சமிக்ஞை விளக்குப் பொருத்தப்பட்டது. (ற-402)

# கிணற்றில் தவறி விழுந்து பெண் சாவு

கிணற்றில் தவறி விழுந்து குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். புத்தூர் குமாரசாமி வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் விமலாதேவி (வயது–37) என்பவரே உயிரிழந்தார்.

விசாரணைகளின் பின்னர் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)




# கட்டடத் தொழிலாளியிடம் பணம், பொருள் வழிப்பறி

தென்மராட்சி, நவ.9
சமையல் பொருள்களுடன் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தொழிலாளியை மறித்த இனந்தெரியாத நபர்கள் அவரிடமிருந்த சமையல் பொருள்கள், பணம் என்வற்றைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி, தனங்களப்பு வீதியில் நடந்துள்ளது.

கட்டடப் பணிக்காகத் தினமும் சாவகச்சேரி வரும் குறித்த தொழிலாளி தனக்குக் கிடைத்த ஒரு வார வேதனத்தில் வீட்டுப் பாவனைக்கான அரிசி, மா, சீனி போன்ற பொருள்களைக் கொள்வனவு செய்து கொண்டு வீடு சென்றுள்ளார். வீதியில் அவரை மறித்த நாகரிகமாக உடையணிந்த இருவர் அவரிடமிருந்த பொருள்களையும், பணத்தையும் அபகரித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு உற்பத்தி விற்பனை ஒருவருக்கு 14 வருடச் சிறை

பதுளை, நவ.09
கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பண்டாரவளை நீதிவான் மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு வருக்கு 14 வருடச் சிறைத் தண்டனையும், இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா அபராதமும் விதித்து நீதிபதி மொகமத் ஹம்சா தீர்ப்பளித்தார்.
இவர் மீது ஏற்கனவே, கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்தமை போன்ற 14 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தபோதிலும், அந்த நபர் தலைமறைவாக இருந்து வந்துள்ளார்.
பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
இவர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது 14 குற்றச்சாட்டுக்களுக்கு 14 வருடச் சிறைத் தண்டனையும், இரண்டு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் ரூபா அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். (த-ய-41)

# பிள்ளையானின் கட்சி உறுப்பினர்களுக்கு மகிந்த ஆட்சியில் காணி

### நீண்டகாலக் குத்தகையில் வழங்கப்பட்டதாகத் தகவல்


மட்டக்களப்பு, நவ.09
கடந்த ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு- ஏறாவூர்ப் பற்று பிரதேசத்தில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உறுப்பினர்களுக்கு தலா பத்து ஏக்கர் வீதம் நீண்டகாலக் குத்தகைக்குக் காணிகள் வழங்கப்பட்டுள்ளதால் தற்போது மக்கள் பயன்பாட்டுக்கான நிலப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக ஏறாவூர்ப் பற்று (செங்கலடி) பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.
ஏறாவூர்ப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கிராமிய பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர்அலி தலைமையில் நேற்று நடைபெற்றது.
இதன்போது, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் தமிழ்-முஸ்லிம் எல்லைப் பகுதியிலுள்ள காணிகள் கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர்களுக்கு தலா பத்து ஏக்கர் வீதம் நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் தற்போது நிலப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மாகாண சபை உறுப்பினர் சுபைர் குற்றச்சாட்டை முன்வைத்தார். (த-ய-47)

## பரீட்சையில் முறைகேடுகள் விசாரணை அறிக்கை தயார்

### கிழக்கு மாகாண சபையின் அமர்வில் சமர்ப்பிக்க ஏற்பாடு

மட்டக்களப்பு, நவ.09
கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவினால் நடத்தப்பட்ட பரீட்சையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான விசாரணை அறிக்கை எதிர்வரும் வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளது. மாகாண சபை சிறப்பு அமர்வில் சமர்ப்பிக் கப்படவுள்ளதாக கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் குழுத் தலைவருமான ஆர்.எம். அன்வர் தெரி வித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கடந்த 2016.10.22 அன்று கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டது.
இதில் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரிப்பதற்காக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட்டினால் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணியை உள்ளடக்கிய சிறப்புக் குழுவொன்று நியமிக்கப் பட்டது.
அந்தக் குழு தனது விசாரணை அறிக்கையை எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாகாணசபை விசேட அமர்வில் சமர்ப்பிக்கவுள்ளது- என்றார். (த-ய-46)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் சிவப்பிரகாசம் கருணாகரன்**
(ஓய்வு பெற்ற லிகிதர்)

பிறப்பு 21.06.1945 — இறப்பு 10.10.2016

கடந்த 10.10.2016 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சிவப்பிரகாசம் கருணாகரன் அவர்கள் முதல் மகனாகப் பிறந்து கல்வியிலும். விளையாட்டிலும் முதல்வனாய் திகழ்ந்து நீதி. நேர்மையின் உறைவிடமாய் வாழ்ந்த அன்பு மகனாய், கணவராய், அண்ணனாய், தம்பியாய், மைத்துனனாய்.மாமனாய், மருமகனாய், பெரியப்பாவாய், பேரனுமாய் " குற்றம் காணில் கடிந்துரைத்து நல் வாழ்க்கைக்கு வழிகாட்டி கடமை தவறாது வாழ்ந்த கர்மயோகி" அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
நோயுற்ற போது Green Memoria & வைத்தியசாலை மானிப்பாய், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் இருந்த போது உதவி செய்த வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் எல்லோருக்கும், மரணச் செய்தி கேட்டு வந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, இணையதளம், மூலமாக ஆறுதல் கூறிய உறவினர்கள்.நண்பர்கள். அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.11.2016) புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 10.11.2016 வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வருஷப்புலம்,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
071 286 8644 (மனைவி)

## மலையகத் தொழிலாளர் நேற்று ஆர்ப்பாட்டம்



நுவரெலியா, நவ.09
நுவரெலியா - ஹற்றன் பிரதேசத்தில் 3 தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
தேயிலைக் கொழுந்து நிறுவைக் காகத் தோட்ட நிர்வாகத்தால் கொண்டு வரப்பட்டுள்ள நவீன தராசு முறைமையை ஆட் சேபித்தே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
நவீன தராசு நிறுவையை முறை யாகக் காட்டுவதில்லை என்றும், தரமான தராசு ஒன்றைக் கொண்டுவரு மாறும் மக்கள் நிர்வாகத்தை கோரினர்.
இந்த நிலையில் அங்கு வருகைதந்த தொழிலாளர் தேசிய சங்கப் பிரதிநிதிகள் தோட்ட அதிகாரியிடம் பேச்சு நடத்தினர்.
இதன்போது, பெருந்தோட்டக் கம்பனியின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவந்து தீர்வு பெற்றுத் தருவதாக தோட்ட அதிகாரி தெரிவித்துள்ளார். (த-ய-43)

## தமிழர் தரப்பு ஒத்துழைத்தால் பொத்துவிலுக்கு கல்வி வலயம்

### அமைச்சர் பைசால் காசிம் தெரிவிப்பு

அம்பாறை, நவ.09
தமிழ் தரப்பினர் விரும்பாதவரை பொத்துவிலுக்குத் தனியான கல்வி வலயம் ஒருபோதும் கிடைக்கவே கிடைக்காது.
அதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தரவேண்டும் என சுகாதார பிரதியமைச்சர் பைசால் காசிம் தெரிவித்தார்.
அம்பாறை - பொத்துவில் அல் கலாம் மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற தொழிநுட்ப ஆய்வு கூடத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
பொத்துவிலுக்குத் தனியானகல்விவலயம்கொடுப் [illegible] கல் [illegible] இன்னுமொரு கல்வி வலயம் தரவேண்டும் என்று தமிழர் தரப்பினர் கோருகின்றனர்.
தமிழ்த் தரப்பினர் விரும்பாதவரை பொத்துவிலுக்குத் தனியான கல்வி வலயம் ஒருபோதும் கிடைக்கவே கிடைக்காது.
இன்று முஸ்லிம், தமிழ் மக்களிடையே இருக்கின்ற நல்ல உறவுகளை சீர்குலைக்கும் முயற்சியில் ஒருகுழுவினர் செயற்பட்டு வருகின்றனர். அவர்களின் சதி முயற்சிகளுக்கு நாம் ஆளாகாமல் எமது சிறுபான்மை சமூகங்களுக்குள் உள்ள நல்ல உறவுகளைப் பேணிப் பாதுகாத்து வரவேண்டும்.
நாம் ஒற்றுமையாக இருக்கும் வரை எமது சமூகங்களுக்குக் கிடைக்கவேண்டிய சகல அதிகாரங்களும் கிடைக்கும். இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமே இல்லை- என்றார். (த-ய-48)

## வீதி விபத்தில் இளைஞர் சாவு

மட்டக்களப்பு, நவ.09
அம்பாறை - அக்கரைப்பற்று நகரில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டர் சைக்கிளும் சைக்கிளும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற இந்த விபத்தில் பாலமுனையைச் சேர்ந்த எம். முஹம்மத் அன்வர் (வயது-25) என்பவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசார ணைகளில் ஈடுபட்டுள்ளனர். (த-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமாதானத்துக்கு எதிராக செயற்படும் சில கட்சிகள்

## கோடீஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

எருவில், நவ.09

நாட்டில் உள்ள பெரும்பான்மை அரசியல் கட்சிகள் ஒருமித்த குரலிலே நாட்டுக்குத் தேவையான சமாதானத்தை வேண்டி நிற்கையில், அதற்கு மாறாக ஒரு சில கட்சிகள் சமாதானத்தை எதிர்த்து நிற்கின்றன என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

கல்முனை பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் தெரிவித்ததாவது:

இன்று நல்லாட்சியில் அமைச்சர்கள் அனைத்து இடங்களுக்கும் வந்து போகின்றார்கள். இன்று அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த குரலிலே சமாதானத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், சில அரசியல் கட்சிகள் அதற்கு மாறாகச் செயற்பட்டு வருகின்றன.

எமது மக்களுக்கான உரிமை, நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பது தேசிய மட்டத்திலும், பன்னாட்டு மட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். 30 வருடகாலப் போரினால் மக்கள் அனைத்தும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான தேவைகள் இன்னும் முழுமைப்படுத்தப்படாத நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களது அனைத்து தேவைகளையும் இன்று ஆட்சியில் உள்ள அரசு முழுமை செய்து கொடுக்கவேண்டும் - என்றார். (த-ய)

## ஐ.தே.க. உறுப்பினருடன் உரையாடிய மகேந்திரன்

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான கோப் அறிக்கை இறுதி செய்யப்பட்டுக் கொண்டிருந்த சமயம், அங்கிருந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தொலைபேசி அழைப்பு எடுத்து உரையாடினார் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் கோப் குழுவின் அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டதன் பின்னரான நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

கோப் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் மத்திய வங்கியின் மோசடியுடன் தொடர்புபட்ட அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. குறிப்பாக, அந்தக் கட்சியைச் சேர்ந்த அஜித் பெரேரா, ஹர்சடிசில்வா, ஹர்சனராஜகருணா மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகியோர் அர்ஜுன் மகேந்திரனைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர் என்பதை நான் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன்.

மத்திய வங்கி மோசடி தொடர்பான கோப் அறிக்கை இறுதி செய்யப்பட்ட அந்தக் கடைசி நேரத்தில் - கோப் குழு உறுப்பினர் அனைவரும் இருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நால்வரில் ஒருவருக்கு அர்ஜுன் மகேந்திரனிடம் இருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அப்போது நான் அருகில் இருந்தேன். அவர் ஏன் இவருக்குத் தொலைபேசி அழைப்பு எடுக்க வேண்டும்? அவர்கள் இவருடன் நெருக்கமான தொடர் பைப் பேணுகின்றனர் என்பதும், அவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்கின்றனர் என்பதும் இதன் மூலம் தெளிவாகின்றது - என்றார். (த)

## நிதியமைச்சரின் சொகுசு வீட்டுக்கு வாடகை செலுத்தும் அலோசியஸ்

### மகிந்த அணியினர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ 9

நிதி அமைச்சர் தங்கி இருக்கும் ஆடம்பரக் கட்டடத்துக்கு மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்ட பெர்பச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் ஆலோசியஸ் தான் வாடகை செலுத்துகின்றார் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கம தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது ஆட்சியில் நாம் ஊழல் புரிந்தோம் என்று எம் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி எம்மைக் கைதுசெய்கின்றனர். இந்த அரசு புரிந்துகொண்டு செல்லும் ஊழல், மோசடிகளை மறைப்பதற்காகவே இப்படி எம்மைக் கைது செய்கின்றனர்.

ஆனால், இந்த அரசில் இடம்பெறும் ஊழல்கள் இப்போது மெல்ல மெல்லக் கசியத் தொடங்கியுள்ளன. மத்திய வங்கி மோசடி பெரும் மோசடியாகும். அந்த மோசடியுடன் தொடர்புபட்ட பெர்பச்சு வல் ட்ரெஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் ஆலோசியஸ் தான் நிதி அமைச்சர் தங்கி இருக்கும் ஆடம்பரக் கட்டடத்துக்கு வாடகை செலுத்துகின்றார். இதன்மூலம் எவர் திருடர் கள் என்பதைவிளங்கிக்கொள்ளலாம். இவ்வாறு ஊழலுடன் தொடர்புபட்ட 10 அமைச்சர்களின் பெயர்களை நாம் விரைவில் வெளிப்படுத்த இருக்கின்றோம். இந்த அரசின் அனைத்து மோசடிகளையும் நாம் இந்த நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவோம் - என்றார். (த)

## எரிசாராய உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு

மட்டக்களப்பு, நவ.09

மட்டக்களப்பு - கல்குடா, வெம்பு பிரதேசத்தில் எரிசாராய உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழக்கக்கூடாது என கோறளைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

குறித்த பகுதியில் எரிசாராய உற்பத்தி நிலையம் அமைக்கக் கூடாது என மக்களும், பிரதேச அரசியல்வாதிகளும் இணைந்து ஒட்டு மொத்தமாக தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இது தொடர்பாக கிழக்கு மாகாண சபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனடிப்படையில் மக்கள் எதிர்க்கும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார். (த-ய-47)


# மரண அறிவித்தல்

## வயிரமுத்து தருமதுரை

(உப தலைவர் - ஊரெழு கிழக்கு, நாவலம்பதி ஞான வைரவர் ஆலயம், உரிமையாளர் - லகின்சன் சிற்றூர்தி -764)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து தருமதுரை கடந்த 06.11.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரமுத்து - நன்னிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பசுபதி - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவமணியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற தர்மேஸ்வரி மற்றும் சுதாகரன் (ஜேர்மனி), சுதர்சன்(லண்டன்), சுதா, சுமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரராசா, விதுலா (ஜேர்மனி), கீர்த்தனா (லண்டன்), ஜெகன் (பிரான்ஸ்), நதியா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, இராசதுரை, இராசமலர், சிவலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திரவியம், இராசாத்தி மற்றும் தங்கராசா, தவராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராசேந்திரம், மகேந்திரம், தெய்வேந்திரம், புவனேந்திரம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சந்திரன் மற்றும் குணேந்திரம் (சுவிஸ்), சந்திராதேவி, சறோஜாதேவி, காலஞ்சென்றவர்களான கதிரவேலு, தவமலர், நடராசா மற்றும் கனகமணி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தங்கவேல் (கொலன்ட்), காலஞ்சென்ற சந்திரமதி மற்றும் சந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசை மைத்துனரும், தயாநிதி, சிவனேஸ்வரி, யோகமலர், கனகேஸ்வரி(பிரான்ஸ்), மலர்ராணி, வனிதா (சுவிஸ்), சிவராசா, இராசையா ஆகியோரின் அன்புச் சகலனும், லகின்சன், சுவிற்றி (ஜேர்மனி), சுவானி(ஜேர்மனி), சபீஸ் (லண்டன்), ஜென்சிகா, சுஜானிகா, துஷாரா ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2016) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு, ஊரெழு.

தகவல்: குடும்பத்தினர்

தொ.பே.இல. 077 523 6750

(J/5985)
(11,18,21)


## மியூசியஸ் கல்லூரி தீ; 40 கோடி ரூபா நட்டம்

கொழும்பு, நவ. 9

கொழும்பு, மியூசியஸ் கல்லூரி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட திடீர்த் தீ விபத்தால் ஏற்பட்டுள்ள நட்டம் 40 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்தது.

இந்தத் தீவிபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் பற்றியும்- ஏற்பட்டுள்ள நட்டம் பற்றியும் ஆராய்வதற்காக அரச பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகளும் கறுவாத் தோட்டப் பொலிஸாரும் அங்கு சென்றனர் எனவும், தீ விபத்துக்கு மின் ஒழுக்கு காரணமா? அல்லது வேறு சதி முயற்சிகள் காரணமா? என்பதைத் தீர்மானிக்கும் தீவிர பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்லூரி நிர்வாகம் தெரிவித்தது.

திடீரென ஏற்பட்ட இந்தத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குக் கொழும்பு தீயணைப்புப் படையினரின் பத்து தீயணைப்பு இயந்திரங்கள் கடுமையாகப் போராடியிருப்பதாகவும், இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கறுவாத்தோட்டப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லதொரு கருத்து உடன் நிறைவேற்றுங்கள்

கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நசீர் அகமட் சிறந்ததொரு கருத்தை முன்வைத்துள்ளார். அனைவரும் மனங்கொள்ள வேண்டிய கருத்து அது.

"மாணவர்களை வீதியோரங்களில் நீண்ட நேரம் காத்திருக்க வைத்து, அரசியல்வாதிகளுக்கு மலர் மாலை அணிவித்து, ஆரத்தி எடுத்து அழைத்து வருவதையும், பட்டாசு கொளுத்திச் சூழலை மாசுபடுத்துவதையும் தடை செய்யும் தீர்மானம் ஒன்றைக் கிழக்கு மாகாண சபையில் கொண்டுவரும் யோசனை உள்ளது" என்று தெரிவித்திருக்கிறார் கிழக்கு முதலமைச்சர்.

உண்மையில் அந்தக் கொடுமை சொல்லி மாளாது. இலங்கையின் அரசியல் பண்பாடு என்பது, அரசியல்வாதிகள் குறித்த நேரத்தில் நிகழ்ச்சிக்கு வருவதில்லை என்பதாகவே அமைந்திருக்கிறது. இந்த லட்சணத்தில் பாடசாலைச் சிறுவர்கள், அவர்களின் வருகைக்காக நீண்ட நேரம் கால்கடுக்கக் காத்திருப்பது வேதனையிலும் வேதனை. இதில் கொடுமையிலும் கொடுமை என்னவென்றால், முன்பள்ளிகளின் பிஞ்சுக் குழந்தைகளும் கூட இவ்வாறு நடத்தப்படுவதுதான். அரசியல்வாதிகளை வரவேற்பதற்கு, இதுபோன்று ஆசிரியர்களும் அதிகாரிகளும் கால்கடுக்க நின்று பார்த்ததில்லை.

பாடசாலைகளில் அரசியல் நீக்கம் செய்து, மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று சொல்லும் பாடசாலைகளும் பாடசாலைச் சமூகங்களும் அரசியல்வாதிகளை வரவேற்பதற்கும் அவர்களை மகிழ்விப்பதற்கும் மட்டும் மாணவர்களைப் பயன்படுத்துவது எந்த வகையிலும் நியாயமானது அல்ல.

இதனைத்தான் கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவரது உணர்வுகள் மெச்சத்தக்கவை. ஓர் அரசியல்வாதியாக இருந்தபோதும், இதுவிடயத்தில் அவர் மாணவர்கள் சார்பில் நேர்மையோடு சிந்தித்திருப்பது பாராட்டப்பட வேண்டியது.

உண்மையில் பாடசாலைகளிலும் கல்விச் சாலைகளிலும் மாணவர்களுக்கு அரசியல் அறிவு புகட்டப்பட வேண்டும். இங்கு அரசியல் அறிவு என்பது, கட்சி அரசியல் அல்ல. எல்லா மாணவர்களுக்கும் அரசியல் அறிவு அவசியம். அதுவே அவர்கள் எதிர்காலத்தில் அரசியலைப் புரிந்துகொள்வதற்கும், சிறந்த அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மிகச் சிறந்த அரசியல்வாதிகளாகவும் அரசியல் தலைவர்களாகவும் உருவாவதற்கும் உதவும்.

ஆனால், கல்விச்சாலைகள் அதனை அனுமதிப்பதில்லை. மாணவர்களுக்கு அரசியலறிவூட்டுவது கட்சி அரசியலினுள் அவர்களைத் தள்ளிவிடுவதாகிவிடும் என்ற அச்சம் காரணமாக எல்லாப் பாடசாலைகளும் அரசியல் நீக்கம் செய்யப்பட்டுள்ளன. அது இன்னும் வளர்ந்து இன்று, பல்கலைக்கழகங்களில்கூட அரசியல் நீக்கத்திற்கு முயற்சிக்கப்படுகிறது. அதேநேரத்தில், அரசியல்வாதிகளுக்குப் பணிந்துபோவதற்குத்தான் பாடசாலைகளில் நடக்கும் நிகழ்வுகள் சொல்லிக் கொடுக்கின்றன. இந்தப் போக்கு மாற்றப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணம் அதற்கான முன்னுதாரணத்தை உருவாக்குவது வரவேற்கக்கப்பட வேண்டியது. விரைவில் இது தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றி, அதனைச் சட்டமாக்கி நடைமுறைப்படுத்துவதையும் கிழக்கு முதலமைச்சர் விரைவுபடுத்தவேண்டும். வடக்கு மாகாண சபையும் அந்த உதாரணத்தைப் பின்பற்றுவது சிறப்பானதாக இருக்கும்.

அதேபோன்று, நிகழ்வுகளில் அலங்காரப் பதுமைகளாகப் பெண்களைப் பயன்படுத்துவதை நிறுத்தவும் சட்டம்கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். அண்மையில், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நடந்த மரம் நடுகை நிகழ்வில், நாடா வெட்டும் இடத்தில் அனைவரும் ஆண்களாக இருக்க, ஒரேயொரு பெண் மட்டும் கத்தரிக்கோல் வைத்த தட்டை ஏந்தி நிற்கிறார். இதுபோன்ற வேலைகள் பெண்களுக்கே உரித்தானவை மற்றும் பெண்கள் அழகுப் பதுமைகள் என்கிற பொதுப் புத்தியின் அபத்தம் அது. அதையும் மாற்ற வேண்டும். கிழக்கு முதலமைச்சர் அதற்கும் நடவடிக்கை எடுத்தால், இன்னமும் நன்றாக இருக்கும்.

# பெரிய குற்றங்களைப் புறக்கணித்து சிறிய குற்றங்களே துழாவப்படுகின்றன

## விசாரணைகள் தாமதமாவது குறித்து அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

பொது நிறுவனங்களின்செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் ஹந்துன் நெத்தி தலைமையிலான கோப் குழுவின் அறிக்கையானது, மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலைக் கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

> கடந்தவாரம் செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பல அமைச்சர்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகள் மிக மந்தகதியில் இடம்பெற்று வருவதாக ஜனாதிபதியிடம் முறையிட்டனர். கோப் குழுவின் அறிக்கை வெளிவந்ததையடுத்து அதன் அடிப்படையிலான கலந்துரையாடல் சுமார் ஒரு மணி நேரம் அமைச்சரவையில் இடம்பெற்றது.


இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்குப் பதில அளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மத்திய வங்கி பிணைமுறிப் பிரச்சினை தொடர்பாக சுயேட்சையான விசாரணையொன்று நடைபெறுவதைத் தாம் விரும்புவதாகக் கூறினார்.

கடந்தவாரம் செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பல அமைச்சர்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக ஜனாதிபதியிடம் முறையிட்டனர். கோப் குழுவின் அறிக்கை வெளிவந்ததையடுத்து அதன் அடிப்படையிலான கலந்துரையாடல் சுமார் ஒரு மணிநேரம் அமைச்சரவையில் இடம்பெற்றது.

அந்த அறிக்கை பகிரங்கமாகியுள்ள நிலையில், முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், பிணை முறி வழங்கலில் தலையீடு செய்துள்ளார் அல்லது அழுத்தங்கள் பிரயோகித்துள்ளார் என்பதற்கு கணிசமான அளவில் சந்தேகம் உள்ளது என்பதை அது வெளிப்படுத்தியுள்ளது. 'பேர் பேச்சுவல் ட்ரெஸறீஸ்' நிறுவனமானது, இந்த பிணைமுறி விற்பனையில் பெருமளவில் நிதி வருமானங்களைப் பெற்றுக் கொண்டுள்ளதையும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இந்த நிறுவனத்தில் அர்ஜுன் மகேந்திரனின் மருமகன் அர்ஜுன் அலோசியஸ் முன்னர் தொடர்பு கொண்டிருந்துள்ளார். ஊழல் விசாரணைகள் மந்த கதியில் நடைபெறுகின்றன என்பது பற்றிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்த அமைச்சர்களில் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் ஒருவராவார். பிணைமுறி தொடர்பான பிரச்சினைகள் தீர்ந்து விட்டதாக அமைச்சர் அமைதி அடைந்துவிடக்கூடாது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றை கூட்டு எதிர்க்கட்சியினர் கொண்டுவரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இவ்வாறு அரசை சங்கடத்தில் ஆழ்த்துவதற்கான நடவடிக்கைகளை நாம் எதிர்த்து தோற்கடிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அமைச்சர், அரசு ஜனாதிபதித் தேர்தலின் போதும், பின்னர் பொதுத் தேர்தலின்போதும் அளித்த பிரதான வாக்குறுதிகளை மறந்து செயற்படுமானால், மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையை இழந்து விடுவார்கள் என்பதை அமைச்சர்கள் மறந்து விடலாகாது - என்றார். மிகப் பாரதூரமான குற்றச்செயல்களை புறக்கணித்துவிட்டு, சிறு குற்றங்களை துழாவிக் கொண்டிருப்பதனால் பயன் ஏதுமில்லை - என்றார் அமைச்சர். இந்த விடயம் ஜனாதிபதி நடத்திய நேர்காணலின்போதும் அவரால் வலியுறுத்தப்பட்டது.

### ஜனாதிபதி விடுத்த எச்சரிக்கை

பெரும் குற்றங்களைப் புரிந்துள்ளவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாவிட்டால், தமது அரசியல் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்க வேண்டியிருக்கும் என்றும் ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்தார். அவ்வாறு அழுத்தமான கருத்துக்களை வெளியிட்டவர் இன்னொரு அமைச்சரான ராஜித சேனாரத்ன ஆவார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் இடம்பெற்ற பல பெரிய ஊழல் சம்பவங்கள், ஒன்றில் இன்னமும் விசாரணைக்கு எடுக்கப்படாமல் இருக்கின்றன அல்லது முடிவுறாமல் இருக்கின்றன என்று அவர் தெரிவித்தார். இலஞ்ச




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழல் விசாரணைக்குழு முன் தோன்றும்படியான ஓர் அழைப்பிலுள்ளவரான அமைச்சர் சேனாரத்ன, மத்திய வங்கி தொடர்பான கிரேக்க பிணைமுறி, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஹெட்ஜிங் ஊழல் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் காட்டினர். பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழலில் ஏற்பட்டுள்ள இழப்பானது பில்லியன் கணக்கில் இருக்கலாம் என்று அவர் தெரிவித்தார். சிறிய அல்லது பாரதூரமற்ற வழக்குகளிலேயே விசாரணை ஆணைக்குழுக்கள் ஈடுபடுகின்றன. அதேநேரம் பாரதூரமான குற்றங்கள் ஓரங்கட்டப்படுகின்றன என்ற அமைச்சர் ரணவக்கவின் கருத்தை சேனாரத்னவும் ஆமோதித்தார்.



**அவர்கள் ஒருவிரலைக் காட்டினால் 25 விரல்கள் அவர்களைக் காட்டும்**

அடுத்தநாள் புதன்கிழமை அமைச்சர் சேனாரத்ன பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது அறிவிக்கப்பட்டுள்ளமை போன்று, பிரதம மந்திரி மீதான நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கூட்டு எதிர்க்கட்சியினரால் சபையில் கொண்டு வரப்படுவதை அரசு எதிர்பார்த்திருக்கிறது. தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு ஐ.தே.க. மற்றும் சிறிலங்கா சு.கட்சிகளைச் சேர்ந்த சகல உறுப்பினர்களும் ஒன்றாக நிற்பார்கள் என்று அமைச்சர் கூறினார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருபவர்கள் மீதே அது மீளப்பாய்வதாக இருக்கும். அரசை நோக்கி ஒருவிரல் நீட்டப்படுமானால் 25 விரல்கள் அவர்களை நோக்கி நீட்டப்படுவதாய் இருக்கும் - என்றார்.

கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி கருத்துக் கூறுகையில் தாங்கள் இன்னமும் பிரதமர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது குறித்துத் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை- என்றார். கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் புதன்கிழமை (8ஆம் திகதி) இது பற்றி விவாதிப்போம், பின்னர் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் தீர்மானிப்போம் - என்றார்.

மகிந்த ராஜபக்சவை ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பார்களா என்பது தெரியவில்லை. ஏனென்றால், மத்திய வங்கி பிணைமுறி பிரச்சினையில் பிரதம மந்திரி மட்டும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. முழு அரசுமே பொறுப்பேற்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ச தெரிவித்திருக்கிறார்.

ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான காபிர் ஹாசிம் அமைச்சரவைக் கூட்டத்தில்பேசியபோது, பிணைமுறி தொடர்பானவர்கள் மட்டுமல்ல, குற்றம் புரிந்துள்ள அனைவர் மீதும் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினார். கோப் குழு உறுப்பினராக இருந்துள்ள அமைச்சர் தயாசிறி ஜயசேகர பிணை முறி ஊழலில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். சில விசாரணைகள் வெளிநாடுகளில் நடத்தப்பட வேண்டியிருப்பதால் காலதாமதம் தவிர்க்க முடியா மல் இருக்கிறது என்று வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். ராஜபக்ச குடும்பத்தினரின் பணம் வெளிநாடுகளில் குவித்து வைக்கப்பட்டிருப்பதாக தாம் தனிப்பட்ட முறையில் நம்புவதாக மங்கள சமரவீர தெரிவித்தார்.

மிக உச்ச ஊழல் விவகாரங்கள் குறித்த விசாரணைகள் மிக தாமதமாகின்றன என்று கருதும் சில அமைச்சர்களைப் போலவே இந்தத் தாமதங்களால் பொதுமக்களும் அதிருப்தியில் இருக்கிறார்கள் என்பதாக ஜனாதிபதியும் அபிப்பிராயம் கொண்டுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் அரசியல் தலைவர்களின் தலையீடு இருப்பதாக விசாரணையாளர்கள் சிலர் முறைப் பாடுகள் தெரிவித்திருந்தார்கள் என் பதில் சந்தேக மில்லை.

இந்த நிலைமையும் சில விசாரணை கள் தாமதமாவதற்கு காரணம் என்று விசாரணையாளர்கள் தெரிவிப்பதாக ஜனாதிபதியுடன் நெருக்கமான சில அசைச்சர்களும் தெரிவித்திருக்கிறார்கள்.

சாராம்சத்தில் இந்த அமைச்சர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், விசாரணையாளர்களை விசாரணைக்குட்படுத்த வேண்டிய நிலைமை ஒன்று இருக்கிறது என்பதுதான். இதில் உள்ள இன்னொரு குறைபாடு, விசாரணைகள் மீதான முறையான அரச கண்காணிப்பு பொறி முறையொன்று இல்லாதிருப்பதாகும். மேலும் சரியான காரணத்தைக் கண்டுபிடித்து செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கான காலம் இன்னமும் இருக்கின்றது. விசாரணைகள் எவ்வாறாயினும் தலையீடுகள் இன்றி மேற்கொள்ளப்பட வேண் டும் என்பதே பொதுவான கருத்து.

> நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருபவர்கள் மீதே அது மீளப்பாய்வதாக இருக்கும். அரசை நோக்கி ஒரு விரல் நீட்டப்படுமானால் 25 விரல்கள் அவர்களை நோக்கி நீட்டப்படுவதாய் இருக்கும் - என்றார் அமைச்சர் ராஜித சேனாரத்ன. கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, நம்பிக்கையில்லாத்தீர்மானம்பற்றி கருத்துக் கூறுகையில் தாங்கள் இன்னமும் பிரதமர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது குறித்துத் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை- என்றார்.

# உரிய நிர்வாகத் தரப்பு கவனம் செலுத்திச் செயற்படுமா?

நான் கீழே குறிப்பிடும் சம்பவம், கடந்த 3.11.2016 வியாழக்கிழமையன்று காலை 7.45 க்கும் 8மணிக்குமிடையில் இடம் பெற்றதொன்று. மேற்குறிப்பிட்ட நேர இடைவெளிக்குள் கொடிகாமம் ஏ–9 வீதியிலுள்ள பஸ் தரிப்பிடமொன்றில் யாழ்ப்பாணம் செல்வதற்காக நானும் வேறு பயணிகளும் அரசதுறை பஸ்ஸுக்காகக் காத்திருந் தோம். தொலை தூர சேவைகளில் ஈடுபடும் இரு பஸ் வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக குறித்த பஸ் தரிப்பிடத்தில் வந்து நின்றன. யாழ்ப்பாணம் – அக்கரைப்பற்று சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்றிலிருந்து இறங்க வேண்டிய பயணிகள் இறங்கி முடிந்ததும், நான் குறித்த பஸ்ஸில் ஏறமுற்பட்டபோது, பஸ்ஸின் நடத்துநர் பஸ்ஸினுள் நின்றபடியே பருவகாலப் பயணச்சீட்டுக்கள் வைத்திருப்போர் பஸ்ஸில் ஏற வேண்டாமென உரத்துக் கூறினார். நானும் அதே காலை வேளையில், தூர இடங்களிலிருந்து வந்த பஸ் வண்டிகளில் பல நாள்கள் எனது பருவகாலப் பயணச்சீட்டைக் காட்டி குறித்த பஸ் தரிப்பிடத்திலிருந்து யாழ்நகருக்குப் பயணித்துள்ளேன். அப்படியிருக்க எதற்காக குறிப்பிட்ட அந்த அக்கரைப்பற்று பஸ்ஸின் நடத்துநர் என்னைக்குறித்த பஸ்ஸில் எனது பருவகால பயணச் சீட்டைப் பயன்படுத்திப் பயணம் செய்ய அனுமதி மறுத்தார் என்பது இன்று வரை எனது மனதைக் குடைந்து கொண்டே இருக்கிறது. யாழ். பிராந்திய இ.போ.ச நிர்வா கத் தரப்பினரில் எவராவது எனது இந்தச் சந்தேகத்தைப் போக்கி உதவுவீர்களா?

குறிப்பிட்ட அதே பஸ்ஸில் ஒழுங்கு முறைப்படி, பிற்புற வாசலூடாக ஏற முயன்ற மாணவரொருவரை, பலரின் முன்னிலையில் அவமதிக்கும் விதத்தில் 'சீசன் தானே?' என்று கூறி பலோற்காரமாக தள்ளி வீழ்த்துவது போன்று பஸ்ஸிலிருந்து வெளியேற்றிய அதே நடத்துநர், வேறு சில மாணவிகள் தத்தமது பருவகால பயணச்சீட்டுக்களுடன் அதே பஸ்ஸில் ஏறிப் பயணிக்க அனுமதித்தமை (தினமும் பயணம் செய்பவர்களாதலால் குறித்த மாணவிகள் பருவகாலப் பயணச்சீட்டைப் பயன்படுத்தியே பயணம் செய்பவர் கள் என்பதை நான் நன்கறிவேன்) எந்த விதத்திலும் போக்குவரத்துச் சபையிடமிருந்து ஊதியம் பெறும் அந்த நடத்துநர், சபையின் சட்டதிட்ட ஒழுங்குகளை உதாசீனம் செய்து தான்தோன்றித்தனமாக நடந்து கொள்கிறார் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

குறிப்பிட்ட என்.பி–8851 என்ற இலக்கமுடைய அந்த பஸ்ஸின் நடத்துநரது மேலாண்மைப் போக்குக் குறித்து போக்குவரத்துச் சபை நிர்வாகம் கவனம் செலுத்திச் செயற்படும் என நம்புகிறேன்.

**அ.கௌதமன். கொடிகாமம்.**

# சங்கானை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதிக்கு தெரு விளக்கு பொருத்தப்படுமா?

சங்கானை அரசினர் வைத்தியசாலை இன்று வலி.மேற்கு, வலி. தென் மேற்கு ஆகிய பிரதேச மக்களுக்குரிய வைத்திய சேவையை வழங்கி வருகின்றது. தர அடிப்படையில் குறைந்த நிலையில் இருந்தாலும், சேவை அடிப்படையில் முக்கிய நிலையிலேயே பார்க்கப்படுகின்றது. சமீபத்தில் இந்த வைத்தியசாலையில் இடர் முகாமைத்துவப் பிரிவால் விபத்து ஒத்திகை ஒன்று நடத்தப்பட்டபோது, ஓர் பெரிய விபத்தை ஓரளவுக்கு சமாளிக்கும் அளவுக்கு வைத்தியசாலை நிலவரம் இருந்தாலும், வைத்தியசாலைக்குச் செல்லும் வீதிகளின் நிலை, போக்குவரத்து வசதிகள் என்பவை மிகப் பெரிய குறைபாடாக உள்ளன என மதிப்பீட்டாளராகக் கடமை புரிந்த காரைநகர் பிரதேச செயலர் திருமதி பாபு தெரிவித்தார். இந்த வைத்தியசாலைக்கு சங்கானை நகரில் இருந்து இரவு வேளையில் செல்லும் நோயாளர்கள், அங்கு சென்றடைவதில் பெரும் அவதிப்படுகின்றார்கள். அதற்கு முக்கிய காரணமாக வீதி விளக்குகள் இல்லாமையை பொதுமக்கள் எம்மிடம் சுட்டிக்காட்டி வருகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனது முயற்சியில் வலி. மேற்கில் வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளதாக நாம் அறிகின்றோம். எனவே வலிமேற்கு பிரதேச சபை இந்த விடயத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, குறித்த பகுதிக்குரிய வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

**கு.குணஸ்ரீ. தலைவர். சங்கானை பட்டின அபிவிருத்திச்சபை.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook
Twitter : l

# மகாத்மா காந்தியின் பேரன் கானுபாய் காந்தி சாவு



மகாத்மா காந்தியின் பேரனான கானுபாய் காந்திதனது 87 ஆவது வயதில் நேற்று சாவடைந்தார். இவரது இறப்புக்கு இந்தியப் பிரதமர் மோடி தனது இரங்கலைத் தெரிவித்தார்.

மகாத்மா காந்தியின் மூத்த மகன் ராம்தாஸ் காந்திக்கு பிறந்த வர் கானுபாய். கானுபாய் காந்தி உடல்நலக்குறைவு காரணமாக குஜராத் மாநிலத்தின் சூரத் நகரில் உள்ள அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் தனது 87 ஆவது வயதில் அவர் நேற்று சாவடைந்தார்.

மகாத்மா காந்தியின் பேரன் கானுபாய் காந்தியின் மறைவு என்னை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவருடனான பல்வேறு உரையாடல்களை நான் நினைவு கூர்ந்து பார்க்கிறேன். அவரது ஆத்மா சாந்தியடையட்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது இரங்கலைத் தெரிவித்தார். (ம)

# ஹமாம் அல்
# மீட்கப்பட்டது

## தலை துண்டாடப்பட்ட 100



பக்தாத், நவ. 9

மோசூல் நகரில் அமைந்துள்ள மிகப்பெரும் கிராமமான ஹமாம் அல் அலில், ஈராக் படையால் முழுவதுமாகக் கைப்பற்றப்பட்டது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக்கைப்பற்றி, அவற்றை ஓர் தனிநாடாக பிரகடனம் செய்து- அங்கு தனது கொடூரத்தனமான ஆட்சியை அரங்கேற்றி வந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட் அமைப்பு). ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பெரும் பலமாகவும் தலைமையகமாகவும் ஈராக்கின் மோசூல் நகரே விளங்கியது. இதனால் நீண்ட காலத் திட்டத்துக்குப் பின்னர், அந்த நகரை மீட்கும் போரில் களமிறங்கியது ஈராக். அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளும் துருக்கியும் தமது ஆதரவை ஈராக்குக்கு வழங்கின. 35 ஆயிரம் ஈராக் இராணுவச் சிப்பாய்கள் உள்ளடங்கலாக மொத்தம் 90ஆயிரம்சிப்பாய்கள்மோசூலை மீட்கும் பணியில் தீவிரமாக உள்ளனர். இராணுவச் சிப்பாய்களை விட மோசூலின் பூகோள நிலைகளை நன்று அறிந்த குர்தீஷ் ஆயுதக் குழுவும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை இல்லாது செய்வதில் முனைப்பாக உள்ளது. மொத்தத்தில் மோசூல் முழுவதும் சுற்றிவளைக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக இடம்பெற்ற போரில் கிட்டத்தட்ட 20 கிராமங்கள் மீட்கப்பட்டன. மோசூலின் மிகப்பெரும் கிராமங்களில் ஒன்றான ஹமாம் அல் அலில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. ஹமாம் அல் அலில் கிராமத்தில்

# அகதிகள் முகாம்களுக்குப் பெண் அதிகாரிகள் நியமனம்

## பாலியல் குற்றச்சாட்டுக்களின் எதிரொலி

அபுஜா, நவ. 9

நைஜீரியாவில் போர்னோ பகுதியில் அமைந்துள்ள அகதிகள் முகாம்களுக்கு 100 பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

போகோஹறம் அமைப்பில் இருந்து தப்பிவந்து, அகதிகள் முகாமில் வசிக்கும் பெண்கள் அரச அதிகாரிகளால் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டனர் என மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்ததுடன் அதற்குரிய ஆவணங்களையும் சமர்ப்பித்தது. இதற்கு பல தரப்புக்களில் இருந்தும் எதிர்ப்புக்கள் வலுத்திருந்தன. நைஜீரிய அரசு குறித்த விடயம் தொடர்பில் முழுமையாக விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்தது. இதனையடுத்து குறித்த முகாம்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் 100 பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் என நைஜீரிய அரசு அறிவித்தது. (ம-எ)






ஆஸ்திரேலியாவில் பிரிஸ்பெய்ன் பொலிஸார் மேற்கொண்ட வாகனச் சோதனையின்போது பையினுள் வைத்து கடத்தப்பட்ட 6 மாதமான கோலா கரடி கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது. கரடியைக் கடத்தியவர் ஓர் பெண் எனவும், அவர் மீது விசாரணைகள் இடம்பெற்றுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-எ)

# விமானத்தில் பாம்பு; அலறினர் பயணிகள்

மெக்ஸிக்கோ, நவ. 9

மெக்ஸிக்கோ பயணிகள் விமானத்தில் பாம்பு இருந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரொறியன் பகுதியில் இருந்து வட மெக்ஸிக்கோ பகுதிக்கு பயணித்துக்கொண்டிருந்த ஓர் விமானத்தில் பச்சை நிற பாம்பு இருப்பது தெரியவந்தது. இதனை அவதானித்த பயணிகள் விமானத்தை அவசரமாகத் தரையிறக்க வற்புறுத்தினர். இதனால் விமானத்தில் பரபரப்பு நிலவியது. மெக்ஸிக்கோ நக ரில் விமானம் தரையிறக்கப்பட்டு பாம்பு வெளியேற்றப்பட்டது. (ம-எ)



# அமெரிக்கத் தேர்தல் களம்; ஹிலாரி முன்னிலை



வோஷிங்ரன், நவ. 9

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தினமான நேற்றைய நிலவரத்தின்படி ஹிலாரி ஜனாதிபதியாவதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகம் எனச் சொல்லப்பட்டது.

தற்போதைய ஜனாதிபதியான ஒபாமாவின் பதவிக்காலம் அடுத்த வருடம் ஜனவரி மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. இதனால் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நேற்று நடத்தப்பட்டது. அமெரிக்காவின் இருபெரும் கட்சிகளில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் போட்டியிட்டனர். அமெரிக்காவில் தற்போது ஆட்சி அமைத்துள்ள கட்சியான ஜனநாயக் கட்சியின் வேட்பாளர் என்ற காரணத்தாலும், அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சராக ஏற்கனவே பதவி வகித்த காரணத்தாலும் ஹிலாரிக்கு அதிகளவான ஆதரவு ஆரம்பத்தில் இருந்தது. மின்னஞ்சல் சர்ச்சையால் சிறிது பின்னடைவைச் சந்தித்தாலும், அவர் குற்றமற்றவர் என்று தீர்ப்பானதால் அவருக்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது என தேர்தலுக்கு முன்னைய தினத்தில் சொல்லப்பட்டது. இதன்படி தேர்தல் தினமான நேற்றைய நிலவரத்தின் படி ஹிலாரி வெற்றிபெறுவதற்கான வாய்ப்பும் அதிகரித்திருந்தது.

பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் ஹிலாரி வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு 90 சதவீதம் உள்ளது எனத் தெரிவித்தது. பி.பி.சி. செய்தி நிறுவனம் ஹிலாரி வெள்ளை மாளிகைக்குச் செல்வதற்கான வாய்ப்பு அதிகம் எனக் குறிப்பிட்டது. யு.எஸ்.ஏ. ருடே நிறுவனமும் ஹிலாரிக்கு வாய்ப்பு அதிகம் என்று செய்தி வெளியிட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலில் கிராமம் ராக் படையால்

## உடல்களும் கண்டெடுப்பு



அமைந்துள்ள பாடசாலை வளாகத்தில் பெரிய அளவிலான புதை குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. தலை துண்டிக்கப்பட்டு அழுகிய நிலையில் 100 உடல்கள் குழியிலிருந்து மீட்கப்பட்டன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டவர்களின் உடல்களே அவை என ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தெரிவித்தது.

ஒன்பது அல்லது பத்து வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் மோசூல் நகரை பாதுகாக்கவும் கட்டளைகள் பிறப்பிக்கவும் இடுபடுத்தப்பட்டனர் என ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்தது.

**கொளுத்தப்பட்டன எண் ணெய் கிணறுகள்**

இராணுவத்தின் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க இயலாது பின்வாங்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு செல்லும் வழியில் உள்ள 19 எண்ணெய் கிணறுகளுக்கு தீ வைத்துச் சென்றது. கிணறுகள் தொடர்ந்தும் எரிந்தபடி உள்ளன. எங்கு பார்த்தாலும் புகை மூட்டமாக உள்ளது.

சுற்றுச்சூழலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் இன்னும் 6 கிணறுகள் உள்ளன.

அவற்றுக்கும் ஆயுததாரிகள் தீ வைக்க கூடும் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட ஈராக்கில் குவாராகுவாஷ் பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் 2 வருடங்களுக்குப்பிறகு வழிபாடுகள் நடைபெற்றன. சென். மேரி அல் ரஹிரா ஆலயத்தில், பக்தாத் ஆயர் யுசிப் அபாபா வழிபாடுகளை நடத்தினார். (ம-எ)

# டுபாய் விமான நிலையத்தில் தமிழ் மொழியில் அறிவிப்பு



பன்னாட்டு விமான நிலையமானடுபாய்விமானநிலையத்தில் பயணிகளுக்கான அறிவிப்புக்கள் தமிழ் மொழியிலும் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. உலக அளவில் சுற்றுலா நகரங்களில் டுபாய் முக்கிய இடத்தை பெற்றது.

இங்குள்ள வானுயர்ந்த கட்டடங்கள் பிரமிக்க வைக்கும். டுபாயில் பொழுதுபோக்கு இடங்கள் அதிகம் இருப்பதால், சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்து வருகிறது. டுபாய் நகருக்கு உலக நாடுகளில் இருந்தும், தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரும் தமிழ் பேசும் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதைவிட 5 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் டுபாயில் வசித்து வருகின்றனர். இவர்களில் 20 சதவீதம் பேர் குடும்பத்துடன் வசிக்கிறார்கள். இதனால் அவர்களின் வசதிக்காக தமிழ் மொழியிலும் பயணிகள் அறிவிப்பு வெளியிடப்படுகிறது. (ம-எ)

## கடந்த 70 ஆண்டில் இல்லாத அதிசயம்

பௌர்ணமி நிலவைவிட 30 மடங்கு அதிக வெளிச்சத்தில் தோன்றும் நிலவை (சுப்பர் மூன்) எதிர்வரும் 14 ஆம் திகதி அனைவரும் காணலாம் என நாஸா அறிவித்தது. இந்த அதிசய நிகழ்வு 70 ஆண்டுகளுக்கு ஒரு தடவையே நிகழும் எனவும் நாஸா அறிவித்தது. 'சூப்பர் மூன்' எனப்படுவது பூமிக்கு மிக அரு கில் நிலவானது காட்சியளிப்பதாகும். அந்த நேரத்தில் நிலவு மிகவும் பிரகாசமாகவும், மிகப் பெரியதாகவும் தோற்றமளிக்கும். 70 ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வாறு நடக்கும். கடந்த 1948 ஆம் ஆண்டு இத்தகைய நிலவு இறுதியாகத் தோன்றியது. பூமியை சுற்றி வரும் நிலவு குறிப்பிட்ட நீள் வட்டப்பாதையில் செல்லாமல் அதில் இருந்து விலகி 48 ஆயிரம் கிலோ மீட்டர் அருகில் வந்து செல்வதாலேயே இவ்வாறு 30 மடங்கு பிரகாசமாக அது தென்படுகிறது என நாஸா தெரிவித்தது. (ம-எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# போர்க்கால இலக்கியங்கள்-6

# தமிழினி ஜெயக்குமாரனின் ஒரு கூர்வாளின் நிழலில்

நா.யோகேந்திரநாதன்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

இரண்டாம் உலகப்போர் இடம்பெற்ற காலப்பகுதியில் ஹிட்லரின் நாஜிப்படைகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றி முன்னேறிச் சென்று சோவியத் யூனியனைக் கைப்பற்றும் முகமாக லெனின் கிராட், ஸ்டாலின் கிராட், மொஸ்கோ ஆகிய பிரதான நகரங்களை முற்றுகையிட்டன. சோவியத் செஞ்சேனையும் மக்களும் இந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த மிகவும் கடுமையாகப் போரிட வேண்டியிருந்தது. இந்தப் போரில் ஏறக்குறைய இரண்டு கோடி சோவியத் மக்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துத் தாய் நாட்டைப் பாதுகாத்தனர். ஜேர்மனியைத் தோற்கடித்து முன்னேறிய செஞ்சேனை, கிழக்கு ஐரோப்பிய நாடுகளை விடுவித்ததுடன் கிழக்கு பேர்ளினையும் கைப்பற்றி ஹிட்லரின் நாஜி ஆட்சியதிகாரத்தை முற்றாகவே தகர்த்தெறிந்தது. இரண்டு கோடி சோவியத் மக்களின் தியாகம் ஹிட்லரின் ஆக்கிரமிப்பிலிருந்து முழு உலகையும் விடுவிக்க அடிப்படையாக விளங்கியது என்பதும் சோவியத் மக்களுக்குத் தலைமை தாங்கிப் போரை வழிநடத்திய ஸ்டாலினின் தலைமைத்துவ முக்கியத்துவமும் எவராலும் மறுத்துவிட முடியாது. அது மட்டுமன்றிப் போரில் சிதைவுற்ற சோவியத் யூனியன் வெகு விரைவிலேயே ஸ்டாலின் தலைமையில் மீளெழுச்சி பெற்று ஒரு வல்லரசாகியது.

இதைப்பொறுக்க முடியாத மேற்குலக ஏகாதிபத்திய சக்திகள் சோவியத் யூனியன் ஒரு இரும்புத்திரை நாடெனவும் ஸ்டாலின் ஒரு கொடிய சர்வாதிகாரி எனவும் அங்கு ஜனநாயகமோ மனித உரிமைகளோ மதிக்கப்படுவதில்லையெனவும் ஸ்டாலினுடன் கருத்து முரண்பாடு கொள்வோர் கடினவேலை முகாம்களுக்கு அனுப்பப்பட்டு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் உலகளாவிய பரப்புகளை மேற்கொண்டு வந்தன.

**பொய்ப் பரப்புரை**

இந்தப் பரப்புரையின் இலக்கிய வடிவமாக எம்.வி.ஜோய்ஸ் ஆல் எழுதப்பட்ட 'விலங்குப் பண்ணை' என்ற நூல் வெளியிடப்பட்டு பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு எங்கும் பரப்பப்பட்டது.

இதில் ஸ்டாலின் பெயர் நேரடியாகக் கூறப்படாவிட்டாலும் படிக்கும் எவரும் அங்கு ஸ்டாலின்தான் சுட்டிக்காட்டப்படுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். தனிநபர் வழிபாடு, மனித உரிமை மீறல், கருத்துச் சுதந்திரத் தடை, கடின வேலை முகாம்கள், உடல் உள சித்திரவதைகள் எனப் பல்வேறு கொடுமைகள் இரும்புத் திரையின் பின் மேற்கொள்ளப்படுவதாகச் சித்திரிக்கப்படுகிறது.

இந்த நூல் ஒரு சிலரால் இரகசியமான முறையில் கிளிநொச்சியில் சில இடைநிலை போராளிகளுக்கும் புதிய இளம் படைப்பாளர்களுக்கும் எந்தக் காலத்துக்கும் பொருந்தும் காலத்தை வென்ற அற்புதமான நூல் எனக் கூறப்பட்டுப் பரிமாறப்பட்டது. பிரபாகரன் கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் ஒரு சர்வாதிகாரி எனவும் தனிநபர் வழிபாட்டின் மூலம் தனது விருப்பு வெறுப்பை எல்லோர் மேலும் சுமத்துகிறார் எனவும் இளைய தலைமுறையினரிடம் பரப்பும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் இந்த விடயம் அன்ரன் பாலசிங்கத்தின் காதுக்குச் சென்ற பின் அந்த நூல்கள் எப்படியோ காணாமல்போய்விட்டன. எனினும் சீனக் கலாசாரப் புரட்சியைக் கேவலப்படுத்தும் சில மேற்கத்தேய படைப்புக்களின் மொழிபெயர்ப்புகள் தொடர்ந்து உலவ விடப்பட்டன. தற்சமயம் தமிழினியால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் ஒரு கூர்வாளின் நிழலில்' என்ற படைப்பை ஊர் ஊராகக் கொண்டு சென்று கலந்துரையாடல்களை நடத்தி அதில் கூறப்பட்ட கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் அந்த நாள்களில் 'விலங்குப் பண்ணை' என்ற நூலை இளைஞர்கள் மத்தியில் பரப்புவதில் ஈடுபட்ட அதே நபர் முன்னின்று உழைத்து வருகிறார். இதிலிருந்து இந்த நபர்கள் அன்று 'விலங்குப் பண்ணை'யைப் பாவித்தது போன்று இன்று தமிழினியின் பெயரைத் தமது நோக்கங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

'போர் என்பது ஒரு மாலைநேரப் பொழுது போக்கோ அல்லது இரவு நேர விருந்து பசாரமோ அல்ல. அது அவற்றைப் போன்று ஒழுங்கானதாகவோ பண்பானதாகவோ இருக்கமுடியாது. அது ஒருவரையொருவர் வெற்றி கொள்ள மேற்கொள்ளப்படும் குருதி சிந்தும் வன்முறை".

இது சீனாவை விடுதலை செய்த தலைவர் மாஓசேதுங்கின் மேற்கோள். உலகில் எந்த ஒரு போரும் நியாயமானதாக பண்பானதாக அமைந்ததில்லை. பல சமயங்களில் முறை மீறல்கள் தந்திரோபாயங்களாகப் பார்க்கப்பட்டுப் பாராட்டப்படுவதுண்டு.

ஆனால் அடக்குமுறையாளர்கள் தாங்கள் பின்பற்ற மறுக்கும் நேர்மை, பண்பு, நாகரிகம், மனிதநேயம் என்பவை விடுதலைப் போராளிகளிடம் இல்லை எனக்குற்றம் சுமத்துகின்றனர். ஒடுக்குமுறையாளர்களின் அதே நிலைப்பாட்டில் நின்றே இந்த மழுங்கடிக்கப்பட்ட கூர்வாளும் தலைவரையும் பொட்டம்மானையும் கீழ்மைப்படுத்த முனைகிறது.

**சரி-பிழையிடையிலான தொடர் போராட்டம்**

தலைவர் பிரபாகரன் எப்போதுமே வளைந்து கொடுக்காத விலைபோகாத ஒரு விடுதலைப் போராளி. அப்படியே புலனாய்வு ஆற்றல் காரணமாகவும் சில நடவடிக்கைகள் காரணமாகவும் பொட்டம்மான் எதிரிகளின் சிம்மசொப்பனமாக விளங்கினார். எனவேதான் ஸ்டாலின் மீது எவ்வாறு நச்சு அம்புகள் எய்யப்படுகின்றனவோ அவ்வாறே அவர்கள் மீதும் சேறு பூசும் நடவடிக்கைகளை ஒடுக்குமுறையாளர்கள் தொடர்ந்து வருகின்றனர். அதையே அந்த நூல் மூலமும் சிலர் செய்ய முயன்றுள்ளனர்.

போரின் தோல்விக்கான முழுக் காரணத்தையும் இவர்கள் மீது சுமத்துவதன் மூலம் இந்தப் போரில் விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் நயவஞ்சகமான முறையில் தோற்கடித்த சக்திகளை நியாயப்படுத்த முனைகின்றனர். அதன்மூலம் அந்த நூல் யாரின் நலன்களுக்குச் சேவை செய்கிறது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். எந்த ஓர் அம்சத்திலும் சரிக்கும் பிழைக்குமான போராட்டம் நிரந்தரமானது. இது தனி மனிதர்கள், குடும்பங்கள், அமைப்புகள் என எவரும் தவிர்க்க முடியாதபடி விரவி நிற்கும். இது விடுதலைப் புலிகளுக்கு மட்டும் எப்படி விதி விலக்காக முடியும்? சரியான பக்கம் மேலோங்கி நிற்கும்போது அமைப்புச் சரியான பக்கத்தை நோக்கி நகர்கிறது. பிழையானவை மேலோங்கும் போது பிழையான பக்கத்தைநோக்கி நகர்கிறது.

தமிழரசுக் கட்சியின் சிந்தனைப் போக்கின் தொடர்ச்சி காரணமாகவும் 'றோ' போன்ற உளவு நிறுவனங்களின் ஊடுருவல் காரணமாகவும் சில பலவீனமானவர்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்பகரமான பார்வைகள் இயல்பாகவே யாழ்ப்பாண சமூகத்தில் நிலவிய நிலப்பிரபுத்துவ சிந்தனைப் போக்கும் குட்டி முதலாளித்துவ சிந்தனைப் போக்கும் கொண்ட ஒரு மனநிலையாகும். இவற்றுக்கும் விடுதலைக்காக அர்ப்பணமாகும் உன்னத உணர்வுக்கும் இடையேயான போராட்டம் தொடர்ந்து கொண்டே வந்தது. போர்க் காலத்தில் விடுதலையுணர்வே மேலாதிக்கம் வகித்ததுடன் வளர்க்கும் போக்கில் காணப்பட்டது.

ஆனால் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே அனுசரணையுடன் பேச்சுக்கள் இடம்பெற்ற போது நிலவிய சமாதான காலம் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட்டது. அதுவரை இறங்குமுகமாக இருந்த தீய அம்சங்கள் ஏறு முகமாக மாற்றமடைய விடுதலையுணர்வு இறங்குமுகமாக ஆரம்பித்தது. சமாதான காலத்தில் திறக்கப்பட்ட கதவுகள் ஊடாகப் பல பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் வந்திறங்கின. அவற்றினூடாக ஊடுருவிய உளவாளிகள் எமது மக்களினதும், போராளிகளினதும் பலம் பலவீனத்தை நன்றாக எடைபோட்டு அவற்றுக்கேற்ப போராட்ட சிந்தனைகளை மழுங்கடிக்கும் வகையில் காய்களை நகர்த்தின. வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று ஆடம்பரமோகம் எல்லா இடமும் பரப்பப்பட்டது. பல பொறுப்பாளர்கள் உட்படப் போராளிகள் வரை காணிகளை வாங்குவது, அலங்காரமான வீடுகளை அமைப்பது, உயர்ரக வாகனங்களை வாங்குவது போன்ற மாற்றங்கள் ஏற்பட்டன. அரச சார்பற்ற நிறுவனங்கள் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி என்ற பேரில் இத்தகைய நடவடிக்கை களுக்கு நிதியை அள்ளி வீசின. கிளிநொச்சியில் கூடப் போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரையே குடிக்குமளவுக்குச் சில பொறுப்பாளர்கள் தங்களை மாற்றிக் கொண்டனர். ஒரு பொறுப்பாளர் தனது வீட்டுக்குள் நீச்சல் தடாகம் அமைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



மக்களின் விடுதலைக்காகவும் விமோசனத்துக்காகவும் தாங்கள் அர்ப்பணமானவர்கள் என்ற சிந்தனை மெல்ல மெல்ல மழுங்கடிக்கப்பட்டு தாங்கள் மக்களை விட மேம்பட்டவர்கள் என்ற உணர்வு லாவகமாக ஊட்டப்பட்டது. அதிகாரித்துவ உணர்வு உருவாக்கப்பட்டது.

இத்தகைய ஊடுருவல்களால் படையணிப் போராளிகளோ தளபதிகளோ பாதிக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இப்படியாக ஒரு பகுதி போராளிகளும் போராட்ட உணர்விலிருந்து துரத்தள்ளப்பட்ட நிலையிலேயே மீண்டும் போர் ஆரம்பமானது. இந்த நிலையில் பல மக்கள் மத்தியில் வேலை செய்த பல போராளிகள் மத்தியில் போர் பற்றிய எதிர்ப்புணர்வும் சலிப்பும் மேலோங்க ஆரம்பித்தன.

**தமிழினியின் நூல் செய்யத் தவறியவை**

சமாதான காலத்தில் பல்வேறு முறைகளிலும் ஊடுருவி விட்ட உளவுச் சக்திகள் அவசர ஆட்சேர்ப்பு, கட்டாய ஆட்சேர்ப்பாக மாறியபோது அதை முற்று முழுதான மக்கள் விரோத நடவடிக்கையாக மாற்றினர்.

உண்மையாக இந்த நிலமைகள் ஒரு கூர்வாளின் நிழல் என்ற நூலில் நியாயபூர்வமாக அலசப்பட்டு மேற்குலக இந்திய ஊடுருவல் சக்திகளையும் அவர்களின் முகவர்களையும் பொட்டம்மான் இனங்காணத்தவறின குற்றவாளி எனக் குற்றம்சாட்டப்பட்டிருந்தால் அது நியாயமாக இருந்திருக்க முடியும். ஏ.எல். படிக்கும் மாணவிகளைப் பலவந்தமாக ஆரம்ப மருத்துவப் பயிற்சி எனச் சொல்லி அழைத்துச் சென்று பின் போதிய பாதுகாப்பு இன்மையால் திடீர் தாக்குதலில் 65 மாணவிகள் கொல்லப்பட்டமைக்காகத் தமிழினி மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டிருந்தால் அது நியாயமாயிருந்திருக்கும்.

இந்தப் போர் தோற்கடிக்கப்பட்டதையும் நீண்ட காலத்துக்கு தமிழ் மக்களும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் பின் தள்ளப்பட்டதையும் நொந்த மனங்களுடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். தோல்விகளும் தோல்விகளுக்கான காரணங்களும் சரியான முறையில் இனங்காணப்பட்டு அனுபவங்களை அறிவாக்கும் வகையில் ஒரு முன்னாள் அரசியல்துறைப் போராளியின் படைப்பு உருவாக்கப்பட்டிருந்தால் பயனுள்ளதாக அமைந்திருக்கும். ஆனால் தமிழினியால் தனது பிறழ்ச்சிகளை நியாயப்படுத்தி பழியை தலைவரிலும் பொட்டம்மானிலும் போடவே முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலட்சிய உறுதியும், வீரமும், தியாகமும், சொல்லொணா இழப்புக்களையும் சந்தித்த ஒரு புனிதமான விடுதலைப் போராட்டத்தை தமிழினியின் பெயரால் இந்த நூலை வெளியிட்ட எந்த ஒரு சக்தியாலும் களங்கப்படுத்த முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மலாட்டமும் நிழற்பாவை நாடகமும்

மருத்துவர் இ.கணேசமூர்த்தி

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி சத்திய சாயி நிறுவனத்தினரால் சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் மனித மேம்பாட்டுக் கல்வி முறைக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. கண்காட்சி மிகவும் ஆழ்ந்த பரந்துள்ள கருத்துக்களை வெளியிட்டதை அவதானித்தேன். அங்கு ஒரு இருட்டான கூடத்தில் இனிமையான 'பழம் நீயப்பா ஞானப்பழம் நீயப்பா' என்ற பாடல் கேட்டதும், உள்ளே நுழைந்தேன். அங்கே பெற்றோரியலைப் பற்றிய பொம்மலாட்டத்தைக் கண்டு மகிழ்ந்தேன். அக்கூடத்தில் சிறுவர்களும் பெரியோர்களும் நெருக்கமாக இருந்தார்கள்.

ஆட்டத்தில் சிறுவர்கள் தமது அப்பா,அம்மாவை 'பாபா' பெற்றோரியலைப் பற்றிக்கூறிய கதையைக் கேட்கும்படி அழைத்தார்கள். முதலில் சிறுவர்கள் மிருகங்களுடன் சேர்ந்து ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். இப்படியிருக்கும் வேளையில் அப்பா அம்மா ரியூசனுக்குப் போக நேரமாச்சு என்று அந்தரப்படுகிறார்கள். சிறு வர்களோ கதை கேட்க ஆர்வப்படுகிறார்கள். அந்நேரம் பாட்டி வந்து முருகனுக்கு ஞானப்பழம் கிடைக்காததால் ஏற்பட்ட கோபத்தை அடக்கப் பாட்டுப்பாடுகிறாள். ஒரு பிள்ளை சிவபெருமான் ஏன் ஒரு மாம்பழத்தை வைத்திருந்தார்? இரண்டு வைத்திருந்திருக்கலாமே என்று கேட்பது இது பிள்ளைகளின் புத்திக்கூர்மையைக் காட்டியது. பெற்றோருக்குத் தகுந்த மறுமொழிகூற முடியவில்லை. பாடசாலைக்குப் போய் வருகிறார்கள். வந்ததும் வெளியே போய் விளையாடும்படி பாட்டி சொல்ல பெற்றோர் உடுப்பு அழுக்காய் போய்விடுமென்று தொலைக்காட்சியைப் பார்க்கும்படி சொல்கின்றார்கள். அங்கே நிழற்பாவைகள் மூலம் சுப்பர் மான், ஸ்பைடர் மான் போன்ற படங்கள் காட்டப்படுகின்றன. பிள்ளைகள் அந்த உருவங்களையே மனதில் பதிந்து கொள்கிறார்கள். பாட்டி, பாட்டா, பிள்ளைகள் முந்தாக் குளம் போய் இயற்கையை ரசித்து விளையாட அனுமதி கேட்டுப் பெற்றோருடன் சென்றார்கள்.

அடுத்த கட்டத்தில் பெற்றோர் பிள்ளைகள் தங்களுடன் கதைக்கிறதில்லையென பாட்டியிடம் முறையிடுகிறார்கள். பாட்டி பிள்ளைகளைக் கூப்பிட்டு அரிச்சந்திரன் கதையைக்கூற அதை ஆர்வமாய்க் கேட்டார்கள். பெற்றோர்களுக்கு பிள்ளைகளைக் கவரும்படி கதை சொல்லும் பழக்கமில்லை. ரியூசனுக்குப் போ என்றுதான் சொல்லத்தெரியும். என்பதைக் காட்டினார்கள். பெற்றோரின் தர்மம் பற்றி மிகவும் இனிமையான பாடல்மூலம் சொன்னார்கள். அப்பாடல்;

நாங்கள் உங்கள் குழந்தைகள்
நாங்கள் என்பது வேறல்ல நீங்கள்தான்
எப்படி நீங்கள் நாங்களாக கேட்போம்
புல்லாங்குழல் எப்படி தென்றலை அனுமதிக்கிறதோ
அப்படியே நீங்களும் எங்களை அனுமதிக்கவேண்டும்
அன்பை உங்களையன்றி எங்ஙனம் பெறுவோம்?
நீங்கள் எங்கள் தண்டவாளங்கள்
விலகினால் எமக்கு விபத்து என்பது புரிகிறது.
தண்டனைகள் தவறல்ல நீங்கள் தாராது விடுதலே தவறு
தவறைத்தரம்பிரித்துதனித்துக்காட்டுதல் உங்கள் கடமை
தவறாது தவறிழைத்தால் தண்டித்தல் உரிமை
மற்றவர் முன்னே மன்னித்தலும்
தனிமையில் வைத்து தண்டித்தலும் கடமையின் அழகு
புல்லாங்குழல் தாயென்றால் துளைகள் தந்தை
நாங்கள் காற்று கட்டுப்பாட்டை விரும்பாத காற்று
எங்கே நுழைய எம்மை அனுமதித்தால்
இசை வரும் என்பது உங்களுக்குத்தான் தெரியும்
நாங்கள் இசையாவதும் சத்தமாவதும்
உங்களிடம்தான் உள்ளது.

எனப் பல விடயங்களைப் பெற்றோருக்குக் கூறி னார்கள். இடையில் தொலைக்காட்சிப் பெட்டியைப்பற்றி பிள்ளைகள் கூறியது
அழுக்குப்பெட்டி
குப்பைத்தொட்டி
தொல்லைப்பெட்டி
என்பது மிகவும் பொருத்தமாக இருந்தது. பாட்டி கதை கேட்போமே என்று பாடி முடித்தார்கள். அவ்வளவும் கவர்ச்சியாகவும் விளக்கமாகவும் இருந்தது.

இக்காட்சி தொடங்குவதற்கு முன்பு இதற்குப் பொறுப்பானவர் பெற்றோரியலைப்பற்றிக் கருத்துச் சொன்னார்கள். அதன் சாரம் சுவரிலே தொங்கவிடப்பட்டிருந்தது.

இந்த ஊடகம் எவ்வளவு வல்லமையானதென்பதை அறிந்தேன். இது மிகவும் பழைமையான ஒரு தொடர்பாடல் ஊடகம் என்றும் 3000 ஆண்டுகளுக்கு முன்னமே தொடங்கியதென்றும் அறிந்தேன். இதில் பங்குபற்றிய பிள்ளைகளுக்கும் அதைத் தயாரித்த செயற்றிறன் அரங்க இயக்கத்தினருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.


> பெற்றோர் பிள்ளைகள் தங்களுடன் கதைக்கிறதில்லையென பாட்டியிடம் முறையிடுகிறார்கள். பாட்டி பிள்ளைகளைக் கூப்பிட்டு அரிச்சந்திரன் கதையைக்கூற அதை ஆர்வமாய்க் கேட்டார்கள். பெற்றோர்களுக்கு பிள்ளைகளைக் கவரும்படி கதை சொல்லும் பழக்கமில்லை ரியூசனுக்குப் போ என்றுதான் சொல்லத்தெரியும் என்பதைக் காட்டினார்கள். பெற்றோரின் தர்மம் பற்றி மிகவும் இனிமையான பாடல்மூலம் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித விழுமியங்களும் நச்சு இலக்கியங்களும்

தேவிபரமலிங்கம்



மனித விழுமியங்களை வளர்ப்பதும் பேணுவதும் இலக்கியமாகும். இலக்கியம் மனிதனது வாழ்வியலைச் சொல்வதும் புடம் போடுவதுமாகும்.

ஆக இலக்கியம் மனித விழுமியங்களைக் கட்டி எழுப்பப்படுவதற்காகப் படைக்கப்பட வேண்டும் என்று கட்டளை இட்டுக் கூறலாம்.

இலக்கியம் என்னும் போர்வையில் சிற்றின்ப உணர்ச்சிகளைத் தூண்டி விடும் பாலியல் சார்ந்த இலக்கியப் படைப்புக்கள் எந்த வகையிலும் மனித விழுமியங்களைக் கட்டி வளர்க்க உதவப் போவதில்லை.

அதேபோன்று பொழுது போக்குப் படைப்புக்களான இலக்கியங்களும் மனித விழுமியங்களை எந்தக் கட்டங்களிலும் நிலை நிறுத்தத் தேவைப்படாதவை.

அப்படியானால் எத்தகைய இலக்கியங்கள் மனித விழுமியங்களைக் கட்டிக்காக்க வளர்த்தெடுத்து உதவும்? என்ற கேள்வி எழுகின்றது.

**மக்கள் இலக்கியம்!**

இந்தக் கேள்வியே மனித விழுமியங்களை வளர்க்க, கட்டிக் காக்க என்றில்லாமல் நமது தமிழ் மொழியில் நல்ல இலக்கியங்களைத் தேடவும், கற்கவும்–அதற்கும் மேலாக அத்தகைய இலக்கியங்களை நாமே படைக்கவும் வழிவகுக்கும்.

அதுதான் மக்களிடம் கற்று, மக்களுக்கே படைத்து வழங்கும் மக்கள் இலக்கியம் ஆகும். அதாவது மக்களின் சரியான வாழ்வியலை; மக்களின் சாதாரண நாளாந்த நடைமுறை வாழ்வில் இருந்து கற்றுக் கொண்டு, முரண்பாடுகளைப் புட்டுக்காட்டி எதிர்காலச் சந்ததியினருக்கு வாழ்வியலை நேர்கோட்டில் படிப்பிக்கும் நேர்மையான ஒரு பாடநூலாக அமையும் இலக்கியம்தான். மக்கள் இலக்கியம் எனக் குறிப்பிடப் படும் தலை சிறந்த இலக்கியக் கூறாகும்.

ஆயினும் எமது மக்களின் பிழையான தெரிவுகளால் மக்கள் இலக்கியம் சமூகத்தில் வளர்த்தெடுக்கப்படுவதில்லை. அதனால் மக்கள் இலக்கியப் படைப்பாளிகள் சமூகத்தால் வளர்த்தெடுக்கப்படாமல் அற்றுப் போகின்ற நிலைதான் பொதுவாகக் காணப்படுகிறது.

ஆயினும் காலத்துக்குக் காலம் மக்கள் இலக்கியப் படைப்பாளிகளும் இந்தச் சமூகக் கூறுகளில் இருந்தே தோன்றுகிறார்கள். அதனாலே மக்கள் இலக்கியங்களைப் படைத்து; சமூகத்தில் உலாவ விட்டிருப்பதன் மூலமாக அந்த இலக்கியம் அழிந்து விடாமல் வாழ்ந்து கொண்டிருப்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

**ஊடகங்களே இலக்கியங்கள்**

இந்த மக்கள் இலக்கியம் என்பது எங்கோ ஏகாந்தத்தில் கற்பனை செய்து தோற்றுவிக்கப்படுவதும் அல்ல என்பதை மேலே பார்த்தோம். மக்களின் இலகுவான மொழி நடையில்; மக்களால் எந்தவிதத் தாமதமும் இல்லாமல். வாசித்துப் புரியக் கூடியதுமாய் அமைவதாலேயே மக்கள் இலக்கியம் என அது சுட்டப்படுகிறது.

இலக்கிய வடிவங்கள் நமது மொழியில் எமக்கு வாழ்வியலைக் கற்பிக்கும் ஒரு ஊடக சாதனமாகவே பணியை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தமிழில் ஏலவே இருந்த இலக்கிய வடிவம் கவிதை அல்லது செய்யுள் என்னும் ஊடக வடிவமாகவே இருந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

நாவல், சிறுகதை, நாடகம் மற்றும் குறுநாவல், நடைச்சித்திரம் போன்ற இன்னோரன்ன இலக்கிய வடிவங்கள் அனைத்தும் பிறமொழி இலக்கிய வடிவங்களால் இரவல் பெறப் பட்டவைதாம்.

கவிதை வடிவமும் தற்பொழுதுள்ள வடிவம் போன்றல்லாமல் செய்யுள் என்னும் புராதன வடிவத்திலே எமது பழைமை வாய்ந்த இலக் கியங்கள் படைக்கப்பட்டிருப்பன கண்கூடு.

**பண்டைத் தமிழர் மாண்புகள்**

எமது பழந்தமிழ் இலக்கியங்களை மிக அரிதாகவே நாம் பார்க்கப் படிக்க இப்பொழுதெல்லாம் கிடைக்கின்றன. அந்த இலக்கியங்களைத் தேடிப் பிடித்து வாசித்தாலே பண்டைத் தமிழன் மாண்பு; வாழ்வியல் பரிணாமங்களை எம்மால் தரிசிக்க முடியும்.

மனித வாழ்வியலில் பலப்பல பரிணாமங்களைக் கண்டு கடந்து சென்று கொண்டிருக்கிறது. காலங்களும் – நேரங்களும் அதனூடாகப் பல நூற்றாண்டுகளைக் கடந்து சென்று கொண்டிருக்கும் மனித வாழ்வியலில் விழுமியங்களை எமது எதிர்காலச் சந்ததிகள் தரிசிக்கக் கூடியதாக இருக்கும் ஒரே ஊடக வடிவமே இலக்கியம்.

இந்த இலக்கியத்தின் ஊடாக மனித விழுமியங்களைக் கட்டிக் காத்து வருகின்ற மரபு, பண்பாடு தமிழர்களுக்கு மட்டும் என்றில்லாமல், உலக இலக்கிய சகல மொழி ஊடகங்களிலும் பேணப்பட்டு வருவதை தெரிந்து கொள்ளலாம்.

செய்யுள்வடிவில் இருந்த எமது மொழி ஊடக வடிவம் காலச்சுழற்சியில் பல்வேறு ஊடக வடிவங்களிலும் வெளி வந்து கொண்டிருப்பதெல்லாம் பிற்பட்ட சங்கதிகள்.

**நச்சு இலக்கியங்கள்!**

எது எப்படி என்றாலும் இன்றைய வாழ்வியலைப் படிப்பிப்பதுவே இன்றைய இலக்கியமாக என்றில்லாமலும், எதிர்கால இலக்கியமாகவும் பரிணமிக்க இயலும்.

இன்றைய மனித விழுமியங்களை எதிர்காலச் சந்ததியினருக்கு கண்ணாடிபோட்டுக் காட்டும் இலக்கியம் மக்கள் இலக்கியமாக மட்டுமே அமைய முடியும்.

மனித விழுமியங்களுக்கு எந்த விதத்திலும் பயன்படாத ஏனைய பொழுது போக்கு கேடான சிந்தனைகளை வளர்க்கும் லாகிரித்தன இலக்கியங்கள் நச்சு இலக்கியங்களே.





## 'புதிதாய் வாழ்வோம்' மேய்ப்புப் பணி மாநாடு

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் சீரிய வழி காட்டலில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் 100க்கு மேற்பட்ட குருக்கள், துறவியரின் ஒத்துழைப்பில் யாழ். மறைமாவட்டத்தின் மறைக்கோட்டங்களான யாழ்ப்பாணம், பருத்தித்துறை, இளவாலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, தீவகம் ஆகிய 5 மறைக் கோட்ட பொதுநிலை பேராளர்கள் 400 பேரின் கூட்டுழைப்பில் "புதிதாய் வாழ்வோம்" என்னும் தலைப்பில் மேய்ப்புப்பணி மாநாடு அண்மையில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றது.

மாநாட்டில் கலந்து கொண்ட யாழ். மறை மாவட்ட ஆயர் குருமுதல்வர், குருக்கள் துறவிகள் சிறப்பு விருந்தினர்கள், பேராளர்கள் சகிதம் எடுத்துக் கொண்ட ஒளிப்படம். (135)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









## கவிதைத் தொகுதி வெளியீடு

உயில் கலை இலக்கியச் சங்கத்தின் ஏற்பாட்டில் துவாரகனின் (சு.குணேஸ்வரன்) 'அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள்' என்ற கவிதைத் தொகுதி அண்மையில் வெளியிடப்பட்டது. பருத்தித்துறை ஞானாலயம் மண்டபத்தில் சி. விமலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நூல் தொடர்பான உரைகளை தி. செல்வமனோகரன், தர்சன் அருளானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை இ. இராஜேஸ்கண்ணன் வழங்க, கலாபூசணம் ம. கணேசலிங்கம் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளை எழுத்தாளர் க.நவம் வழங்கி வைக்க, த.உதயரத்தினம், மா.ரவிரதன், தீபச்செல்வன், ஆர். இராஜசேகரன், கவிஞர் கே.ஆர்.திருத் துவராஜா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். ஏற்புரையை நூலாசிரியர் துவாரகன் நிகழ்த்தினார். சித்திராதரன் நன்றியுரையை நிகழ்த்தினார்.

(108)





## பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கை பத்திரிகை நிறுவனம் மற்றும் இலங்கை முஸ்லிம் மீடியா போரம் இணைந்து வீரகத்தி தனபாலசிங்கத்துக்கு கடந்த மே மாதம் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்தது. கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியமும் சிவன் பவுண்டேசனும் இணைந்துஅவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் தஞ்சை ஐங்கரன் பாலர்பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. சிவன் பவுண்டேசன் நிறுவுனர் வே.கணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வடமாகாண முதலமைச் சர் சி.வி. விக்னேஸ்வரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளு மன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மிரர் ஆசிரியர் மதன், தினக்குரல் ஆசிரியர் வே.செந்தில்வேலர், தினக்குரல் நிறுவுனர் எஸ்.பி. சாமி, ஆசிரியர் பாரதி, மூத்த ஊடகவியலாளர் எஸ். சச்சிதானந்தன், காலைக் கதிர் ஆசிரியர் என்.வித்தியாதரன் உட்பட பலரும் சாதனையாளருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டியதோடு, வாழ்த்துரைகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வில் கரவெட்டி ஒன்றியத் தலைவர் உபாலி பொன்னம்பலம் வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கொழும்பு நகர சபை முன்னாள் உறுப்பினர் பாஸ்கரா உட்பட ஊடகவியலாளர்கள் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (108)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# கிளிநொச்சி இந்துவில் சித்திரக் கலைக் கண்காட்சி – 2016














கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் சித்திர அலகினால் இருநாள்கள் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் சித்திரக்கண்காட்சி கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமானது.

இது உயர்தர மாணவர்களின் செயற்றிட்ட நகர்வுடன் வர்ண மொழி ஓவிய மன்றத்தினரது அனுசரணையுடன் மிக உயர்தர ஆக்கங்களுடன் நடைபெற்றது. முதல் நாள் நிகழ்வில் அக்கராயன் ஆசிரியர் மத்திய நிலையத்தை சேர்ந்த ஆனந்தர் கேசவமூர்த்தி கலந்து சிறப்பித்ததுடன் அயற் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பெருமளவிலானோர் பார்வையிட்டனர். இதன் இரண்டாம் நாள் நிகழ்வு 26ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் விருந்தினராக பிரதேச கலாசார அலுவலர் கு. றஜீபன் கலந்துகொண்டு சிறப்பித்தார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணாலிங்கம் இங்கு வருகை தந்து சிறப்பித்தார். மற்றும் வாழ்க்கைத்தொழிற் பயிற்சி திறனபிவிருத்தி அமைச்சின் உதவிப்பணிப்பாளர் இரா.அகிலன்,தேசிய அருங்கலைகள் பேரவை தொழிற்றுறை அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.லோகப்பிரகாஸ் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பெருமளவிலானோர் வருகை தந்து சிறப்பித்தனர். மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துக்களையும் மனதார வழங்கியிருந்தனர். இதற்கு அரும்பாடுபட்ட அனைத்து மாண வர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாராட்டைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றனர் கலை ஆர்வலர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருண்மைக்குள் பிள்ளைகள் உலகம்

பிள்ளைகளைப் பெற்றெடுப்பது என்பது இலேசான காரிய மல்ல. செத்துப் பிழைப்பது என்று சொல்வார்கள். பிரசவ வேதனையென்பது பல் கலைக்கழகத்துக்கும் அப்பாற்பட்ட படிப்பாகும். அது ஒரு இன்ப வேதனை. அது ஒரு இனிய சாதனை. அது இறைவனின் படைப்புக்கு அடுத்த படியாகும். இதில் ஆண் களைவிடப் பெண் களின் பங்களிப்பே பிரதானமாக அமைகிறது. அப்படியிருந் தும், பிறப்புச் சான்றி தழின் அடிப்படையில் ஒரு பிள் ளையின் பெயருக்கு முன்னால் தந்தையின் பெயரை யே முழுப் பெயரில் அமைய எழுதுமாறு கோரப்படுகிறது. இது சட்டப்படி சரியாகப்பட்டாலும், தர் மத்தின்படி தாயினுடைய பெயரையும் முழுப் பெயரில் அமைத்தே எழுதப்பட வேண்டும்.

கே.எஸ்.சிவஞானராஜா

இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட, அவை இரண்டும் சேர்ந்தொரு பொம்மையைச் செய்தன தாம் விளையாட என்ற பாடல் ஒலிக்கும் போதெல்லாம், ஒவ்வொரு மனிதனையும் பெற்ற தாயவள் சுமந்துபட்ட வேதனைகளை எண்ண, என் மனம் அவாவுறுகிறது. எந்தத் தாயும் அவள் குழந்தை ஒன்றையோ பலவற்றையோ பெற்றிருந்தால், அவளுக்கு ஒரு கலாநிதிப் பட்டம் மனமுவந்து வழங்கலாம். ஆதலினால், ஒவ்வொரு தாய்க்கும் அவள் அனுபவித்து முடித்த தாய்மைக்குமாகச் சேர்த்துக் கலாநிதிப் பட்டத்தைப் பயமின்றிக் கொடுக்க என் மனம் அவாவுறுகிறது.

பிள்ளைகளைப் பெற்றெடுப்பது என்பது இலேசான காரியமல்ல. செத்துப் பிழைப்பது என்று சொல்வார்கள். பிரசவ வேதனையென்பது பல்கலைக்கழகத்துக்கும் அப்பாற்பட்ட படிப்பாகும். அது ஒரு இன்ப வேதனை. அது ஒரு இனிய சாதனை. அது இறைவனின் படைப்புக்கு அடுத்த படியாகும். இதில் ஆண்களைவிடப் பெண்களின் பங்களிப்பே பிரதானமாக அமைகிறது. அப்படியிருந்தும், பிறப்புச் சான்றிதழின் அடிப்படையில் ஒரு பிள்ளையின் பெயருக்கு முன்னால் தந்தையின் பெயரையே முழுப் பெயரில் அமைய எழுதுமாறு கோரப்படுகிறது. இது சட்டப்படி சரியாகப்பட்டாலும், தர்மத்தின்படி தாயினுடைய பெயரையும் முழுப் பெயரில் அமைத்தே எழுதப்பட வேண்டும். முதலெழுத்துக்களுடன் பெயரை எழுதுமாறு கேட்கப்படும்போது பா.சு.பிரபு என்பது பா.சுமதி பிரபு என்பதாக அமையும். இவ்வாறு எழுதுவது பெண்மையையும் தாய்மையையும் பெறுமதியாக்கும். பெண்ணியவாதத்தினர் இதில் வெல்லப்பட வேண்டும்.

### செல்வங்கள்

பிள்ளைகளே வீட்டுக்கும் நாட்டுக்கும் பெரும் செல்வங்களாக உள்ளனர். இவர்களின் பெறுமதியை இந்த உலகத்தில் எதற்கும் ஒப்பாகச் சொல்லவும் முடியாது, வெல்லவும் முடியாது. இந்த நிலையில், பிள்ளைகளைப் புள்ளிகளுக்காகவும் பரிசுகளுக்காகவும் கௌரவங்களுக்காகவும் கற்பிப்பதைவிட, அதற்கப்பால் வாழ்வாங்கு வாழும் பெறுமதிக்காக அவர்களைத் தயார்செய்ய வேண்டியவர்களாகப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாறவேண்டும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பேணப்பட்டு வந்த பாரம்பரியவிழுமியங்களைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் மதகுருமார்களும் சமூக வளவாளர்களும் ஊருக்குப் பெரியவர்களும் பிள்ளைகளுக்கு ஒப்படைக்க ஆவன புரிவதே தற்போதைய அவசர தேவையாகும். இந்தத் தேவைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய தலைவர்களைத் தேடியும் கண்டுபிடிக்க முடியாதவர்களாக இந்த மண்ணின் தலைவிதி அமைந்துவிட்டது.

தாங்கள் தாங்களாகவே தலைமைத்துவத்தைச் சுவீகரித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறதேயொழிய, பிள்ளைகள் முன்மாதிரியாகப் பின்பற்றக்கூடிய தலைமைத்துவம் இன்னுமே சிருட்டிக்கப்படவில்லை. எந்தவிதமான பலவீனங்களுக்கும் அடிமையாகாத ஒரு தலைவனை இறைவன் எமக்குத் தந்துவிடக்கூடாதா எனப் பல பிள்ளைகள் கையால் எழுதிய துண்டுகள் கோயில் உண்டியலில் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உண்டியலில் பணம் மட்டுமல்ல- வரமும் உண்டு.

### பூக்கள்

இறைவன் படைத்த அதிசயங்களிலொன்றுதான் நறுமணம் மிக்க பூக்களாகும். பூக்களும் பிள்ளைகளும் பண்புகளில் ஒற்றுமைமிக்கனவாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. பூக்கள் எப்படி அழகும், மணமும், குணமும், வனப்பும், இனிப்பும் கொண்டனவோ- அதேபோல பிள்ளைகளும் இளமை, அழகு, மணம், குணம், வனப்பு, இனிமை, இதம், பதம், மென்மை உடையவர்களாவர். இத்துடன் கல்வியும் ஒழுக்கமும் சேருமாயின், பிள்ளைகளின் பெறுமதி சொல்லுந்தரமன்று. இந்தப் பிஞ்சுகள் சிரிப்பதனாலேதான் உலகம் தினமும் விடிகிறது.

பெரியவர்கள் [illegible] சிரிக்கிறார்கள்? பணம் அல்லது மேடை கொடுத்தால் மட்டும் அப்பப்ப கொஞ்சம் சம்பளத்துக்குச் சிரிக்கிறார்கள். மற்றும்படி கடினம்தான். காரணம், பெரியவர்களாகி இருப்பவர்களில் பலருக்கு வீட்டில் திருப்தி இருப்பதேயில்லை. இதனாலே வீட்டுக்குள்ளேயும் வெளியிடங்களிலேயும் திருப்தியைத் தேடிக் கொண்டேயிருக்கிறார்கள். தேடுகின்றபோது தீனி கிடைத்துவிடுகிறது. அல்லது கிடைக்கச் செய்கிறார்கள். நரிக்குணம் உடைய சிலர் பண்டமாற்று முறைகளைக் கையாண்டு பதிலுக்குப் பதில் சூறையாடி விடுகிறார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்குப் பிள்ளைகள் மட்டுமல்ல, பிள்ளைகள் அல்லாத மணம் முடித்த சிலரும் ஏதோவொரு பின்னணியில் அகப்பட்டு விடுகிறார்கள். இதில் என்ன விசேடமென்றால், இருசாராரும் நல்ல பிள்ளைகள் போலத் தப்பித்தும் விடுகிறார்கள். எத்தனை பெண் பிள்ளைகள் வெளியில் சொல்லிக்கொள்ள முடியாமல், மறுக்கவும் முடியாமல், மறைக்கவும் முடியாமல் இழந்த சேதாரங்களுக்காக இறைவனிடம் சென்று மன்றாடுகிறார்கள்.

### கண்கள்

எந்தப் பிள்ளையென்றாலும் சரி, அவர்களின் கண்களுக்கு எந்தவொரு ஆணினது கண்கள் தேடும் பொருளை இலகுவாகவும் எளிதாகவும் கண்டுபிடித்து விடமுடியும். பிறகென்ன? உண்டியலில் எழுதிப்போட்டு விடுங்கள். சாமிக்காவது தெரியட்டுமே. சாமி தண்டிக்கட்டும். சட்டம் முத்திரை குத்தியே தீரும்.

### பரிதாபம்

வாகனங்களில் பிள்ளைகள் பயணிப்பதென்பது மிகவும் ஆபத்தாகவே எதிர்நோக்கப்படுகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளிடத்திலே போதிய அக்கறை காட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. பிள்ளைகளின் பால் ஏற்படும் அசௌகரியங்கள் [illegible] பாலும் பயணங்களிலேதான் [illegible] பெறுகின்றன. பிள்ளைகளிட[illegible] சமூகமும் ஏன் ஆன்மிகமும் அரசிய[illegible] கூட எதிர்பார்த்த அக்கறையைக் கா[illegible] வதாகத் தெரியவில்லை. வாகனங்க[illegible] பிள்ளைகளுக்கு உரிய பாதுகா[illegible] அளிப்பதாகத் தெரியவில்லை. கா[illegible] யில் அணியப்பட்ட சீருடைகள் மா[illegible] ஆறு மணிவரை வியர்வை[illegible] நனைந்து பிள்ளைகளின் ஆரோக்[illegible] கெட்டுப்போவதாகவே உள்ளது. இ[illegible] கைக் கடன்களை முறையாகக் கழி[illegible] முடியாதவாறு பாடசாலைகளால் [illegible] பறைகளைப் பராமரிக்க முடிவதில்[illegible] வீட்டிலேயும் பிள்ளைகளுக்கு உ[illegible] வாறு மலசல கூடங்கள் சீர்செய்[illegible] படுவதில்லை.

சில இடங்களில் பிள்ளைகள் ஒது[illegible] வதற்கான மறைவிடங்கள் சரி[illegible] அமைக்கப்படவேயில்லை. சில [illegible] களில் சிறுநீர் எங்கும் பரவி நிற்[illegible] சுற்றுப்புறச் சூழலுக்குப் பங்கம் [illegible] கிறது. சில ஆகாத பழக்க வழக்[illegible] உருவாகுவதையும் சில பிள்ளை[illegible] நோக்கியுள்ளார்கள். பெரும்பா[illegible] பிள்ளைகள் எச்சரிக்கையோடு [illegible] வேண்டிய சூழ்நிலைக்கே தள்ளப்[illegible] ளார்கள். பாவம் இவர்கள், பாவ[illegible] பிள்ளைகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகல் நடத்தைகளிலிருந்து விலக்கிப் பிள்ளைகளைப் பெற்றோர் வளர்த்தெடுக்க வேண்டும்



■சி.நற்குணலிங்கம்

விலகல் நடத்தைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும். மனிதனின் நடத்தைக் கோலங்களே அவனது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. நன்னடத்தை உள்ளவர்கள் அவர்களது குடும்பத்தாலும் சமூகத்தாலும் மதிக்கப்படுகின்றார்கள். துர்நடத்தைகள் அதாவது சமூகத்துக்கு ஒவ்வாத மது, புகை, போதைப் பொருள் பாவனை, கீழ்ப்படிவின்மை, சட்டத்துக்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் ஈடுபடல், சமூகத்தில் சீரழிவுகளை ஏற்படுத்தல், பணிவு, அடக்கமின்மை போன்ற விலகல் நடத்தைகளிலிருந்து பிள்ளைகளை விலக்கி வளர்த்தெடுக்க வேண்டும். இதன் முழுப் பொறுப்பும் பெற்றோரையே சாரும். பிள்ளை வளர்ப்பு என்பது ஓர் இலகுவான காரியம் அல்ல, அதுவும் ஒரு கலைதான். அந்தக் கலை வழுவாத வகையில் வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

பிள்ளையை நன்கு அவதானித்து வளர்க்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒவ்வொரு தனித்திறமை இருக்கின்றது. அதனை அடையாளம் கண்டு அதில் பிள்ளை தன் ஆற்றலைக்காட்ட பெற்றோர் உதவ வேண்டும். மனிதநேயம், இரக்கசிந்தை, சமூகசேவை, உதவும் எண்ணம் போன்ற புதிய பகுத்தறிவுவாதச் சிந்தனைகள் முன்னெடுக்கப்பட பெற்றோர் வழிகாட்ட வேண்டும். பிள்ளைகளின் தவறான நட்பை ஆரம்பத்திலேயே துண்டித்துவிடுவதில் பெற்றோர் அக்கறை காட்டவேண்டும். இல்லையேல் நேர் நடத்தைகளிலிருந்து பிள்ளை விலகிச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். தொலைக்காட்சி, அலைபேசி, சமூக வலைத்தளங்களின் ஈடுபாடு ஆகிய தேவையில்லாத பொழுதுபோக்கு அம்சங்களில் வீணே பொழுதைப் போக்குவதிலிருந்து மாற்றிப் பிள்ளையை நற்பழக்கங்களை நோக்கித் திசை திருப்ப வேண்டும். மேலைநாட்டுக் கலாசார மோகத்தில் திளைக்காத வகையில் எமது பண்பாட்டுக் கலாசாரத்துக்கு முக்கியத்துவம்கொடுத்து வளர்த்தெடுக்க வேண்டும்.

### நடத்தைக் கோலங்கள்

பிள்ளைகள் பதின்மவயதை எட்டும்போது, அவர்களின் நடத்தைக்கோலங்கள் பொதுவாக .விலகல் நடத்தைகளையே நாடும். இந்தக் காலப்பகுதியில் பெற்றோர் தம் பார்வையை முழுமையாகப் பிள்ளைகள் மீது விலகலற்றுக் காட்டவேண்டும். இல்லையேல் பிள்ளைகள் விலகல் நடத்தைக்கோலத்தில் ஈடுபடத் தொடங்கிவிடுவர். பதின்மவயதில் இளமை தொடர்பான உணர்வுகள் மேலோங்கிக் காணப்படும் பிள்ளைகளின் நடத்தைகள் பொதுநியமத்திலிருந்து விலக விரும்பும் காலப்பகுதியாகும். சமூகப் பிறழ்வுகளைத் தோற்று விக்க வழிகோலும் காலப்பகுதியாகும். எனவே இந்தக் காலப்பகுதியில் பெற்றோர் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

இந்தக் காலப்பகுதியில் பிள்ளைகளுடன் அன்பாகப் பழகி நல்ல சமூகத்துக்குப் பொருத்தமான சிந்தனைகளை ஊட்டவேண்டும். பொருத்தமான ஊக்குவிப்புக்கள் உரிய சந்தர்ப்பங்களில் வழங்கப்பட வேண்டும். தவறான எண்ணங்கள் காணப்படின், உடனடியாக அவை சீரமைக்கப்பட வேண்டும். தேவையான இடங்களில் வழிகாட்டத் தவறக்கூடாது. புதிய விழுமியங்களில் பிள்ளைகள் ஈடுபடும் அளவுக்குக் கவனம் செலுத்தப்பட வேண்டும். வாழ்வில் உள்ள பொறுப்புக்களை உணர்த்தி, வளர்த்தெடுக்க வேண்டும். இவற்றிலிருந்து பெற்றோர் தவறும் பட்சத்தில் சமூகத்தின் இழி சொற்களுக்கு பிள்ளையும் பெற்றோரும் ஆளாக வேண்டி நேரிடும். வாழ்க்கை என்பது எளிது என்று ஒருநாளும் எவருமே கூறியதில்லை. ஒருபிள்ளை தனது சமூகத்தில் ஆளுமை யுள்ள ஒரு பிரசையாக வளருமாயின் அதன் எதிர் காலம் சிறப்பாகவே காணப்படும். அவன் நெறிபிறழ் வான நடத்தைகளில் ஈடுபடமாட்டான். இவ்வாறு வளர குடும்ப ஆதரவும் வழிகாட்டலும் மிக அவசியமானதாகும். ஆளும் வளர வேண்டும், பண்புடன் அறிவும் வளரவேண்டும். ஈன்றவளுக்கு அதுதான் மகிழ்ச்சி. வளர்ந்துவரும் உலகுக்கு நீதானடா வலதுகை என்று சொல்லி வளர்க்க வேண்டும்.

### முதல்வனாகவே இரு

முதல்வனாய் இரு, இல்லாவிட்டால் முதல்வனோடு இருக்கப்பழகு. தீயவர்களோடு இருக்க நினைக்காதே, அது உன் வாழ்வை அழிக்கும் என்று கூறி வளர்க்க வேண்டும். தன் பிள்ளை எல்லாவற்றிலும் திறமை உள்ளவனாக வரவேண்டும் என்று பெற்றோர் ஆசைப்படுவது இயல்பு. ஆனால் பிள்ளை பிள்ளையாக வாழ, சமூக அங்கீகாரம் பெற்றுவாழ, சமூகம் மதிக்கும் பிள்ளையாக வாழ வளர்ப்பதில் சிலர் தவறிவிடுகின்றனர். அவர்கள்தான் இறுதியில் "ஏன் பிறந்தாய் மகனே, நீ எனக்கு ஏன் பிறந்தாய்" என்று கதறுகிறார்கள். நீ தீயவனாக இருக்கிறாயா? உன்னை நீயே மாற்றிக்கொள். இன்றே திருந்த முயற்சிசெய். உனதுதிறமைகளைதூண்டிவிட மட்டுமே மற்றவர்களால் முடியும். ஆனால் உன்னை வளர்த்துக் கொள்ள உன்னால் மட்டுமே முடியும்.தனக்கு மட்டும் நல்லவனாக இருப்பவன் எதற்கும் பயன்பட மாட்டான்.மனிதன் உயர்நிலைப் பகுத்தறிவுள்ள விலங்கு. தான் புரியும் ஒவ்வொரு செயலுக்கும் தனது சமூகம் சார்ந்த பெறுமானங்களை அறிந்தும், புரிந்தும் வைத்திருக்கக் கூடியவன். வாழ்க்கையை நாம் தெரிந்து தான் வாழ்கிறோமா? தெரிந்து உணர்ந்து வாழ்கிறோமா? என்று சிந்தித்து வாழ வேண்டும். ஏனோ தானோ என வாழ முற்படக் கூடாது. அவ்வாறு நினைத்தால் எமது வாழ்வு விலகல் நடத்தைகளின் தொகுப்பாகவே காணப்படும்.

### எதிலும் உயர்ந்தது ஒழுக்கம்

நாலு பேருக்குத் தெரியாமல் திரைமறைவில் எதையும் செய்யலாம் என நினைக்காது, ஒழுக்கம் என்பது தனக்காகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதைப் புரிந்து நடக்க வேண்டும். எமது அடையாளங்கள் எவை? அதை ஏன் நாம் மாற்றுகிறோம்? மாற்றத்தான் வேண்டுமா? எமது பண்பாடுகள் எவை? எங்கே எமது பண்பாடுகள்? எமது கலாசாரம் தொலைகின்ற இடங்கள் எவை? எங்கே நாம் நிற்கின்றோம்? இந்தக் கேள்விகளுக்கு விடைகளைபெற்றோரும் பிள்ளைகளும் இணைந்து தேட வேண்டும். இளமையும்,சக்தியும்,நம்பிக்கையும் இருக்கும் காலத்தில்தான் உங்கள் எதிர்கால இலட்சியத்தை நீங்கள் முடிவு செய்யலாம். பிள்ளைகள் தமது கனவைச் சொல்லும்போது அந்த வார்த்தைகளில் உயிர்த்துடிப்பு இருக்க வேண்டும். நல்ல வாழ்வுக்கான கனவைக் காணவேண்டும்.உலக மயமாக்கலின் விளைவுகள் எமது ஊர் வரை வந்து எம்மைத் தொலைத்து விட முயற்சி எடுக்கின்றன.. நாம் எமது நன்னடத்தைகளிலிருந்து விலகாது வாழ வேண்டும். அதற்கு ஈடுகொடுத்து வெற்றி காண பெற்றோரின் பங்கு முக்கியமானதாகும்.

பிள்ளையை நன்கு அவதானித்து வளர்க்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒவ்வொரு தனித்திறமை இருக்கின்றது. அதனை அடையாளம் கண்டு அதில் அவன்தன் ஆற்றலைக் காட்ட பெற்றோர் உதவ வேண்டும். மனிதநேயம். இரக்கசிந்தை. சமூக சேவை. உதவும் எண்ணம் போன்ற புதிய பகுத்தறிவு வாதச் சிந்தனைகள் முன்னெடுக்கப்பட பெற்றோர் வழிகாட்ட வேண்டும். பிள்ளைகளின் தவறான நட்பை ஆரம்பத்தி லேயே துண்டித்துவிடுவதில் பெற்றோர் அக்கறை காட்டவேண்டும். இல்லையேல் நேர் நடத்தைகளிலிருந்து பிள்ளை விலகிச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவம்பர் மாத எண் ஜோதிடப் பலன்கள்

1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு இந்த மாதத்தில் எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கல்வியாளர்கள், அறிஞர்களின் தொடர்பு கிடைக்கும். குடும்பத்தில் நல்லது நடக்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். புது வீடு கட்டி குடிபுகுவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாக முடியும்.
அரசியலில் செல்வாக்குக் கூடும். விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். புதிதாக தொலைக்காட்சி, குளிர் சாதனப்பெட்டி போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். மாதத்தின் மையப் பகுதியிலிருந்து கணவன்–மனைவிக் குள் வரும் சின்ன சின்ன பிரச்னைகளைப் பேசி தீர்க்கப் பாருங்கள். அவ்வப்போது மனஇறுக்கம், அசதி, சோர்வு வந்து போகும். அரசியல்வாதிகளே! புதுப் பொறுப்புக்கள் தேடி வரும்.
கன்னிப் பெண்களே! முடிவுகள் எடுப்பதில் இருந்த தடுமாற்றம் நீங்கும். உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரி அலுவலக இரகசியங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்வார்.
இங்கிதமாகப் பேசி சக ஊழியர்களின் குறை, நிறைகளைச் சரி செய்வீர்கள். கலைத்துறையினர்களே! உங்களின் கற்பனைத் திறன் வளரும். விவேகமான முடிவுகளால் முன்னேறும் மாதமிது.

**அதிஷ்ட திகதிகள்: 1, 9, 10, 12, 21**
**அதிஷ்ட எண்கள்: 1, 7**
**அதிஷ்ட நிறங்கள்: பிஸ்தா பச்சை, ஊதா**

2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு இந்த மாதத்தில் ரசனை மாறும். வி.ஐ.பிகளிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.
வாகனத்தைச் சரி செய்வீர்கள். சிலர் வீடு மாற வேண்டுமென நினைப்பீர்கள். சகோதரங்கள் உங்கள் தேவையறிந்து உதவிகரமாக இருப்பார்கள். ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்தை காப்பாற்ற வேண்டி வரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும்.
பழைய பிரச்சினைகளுக்கு ஒரு பக்கம் தீர்வுகள் கிடைத்தாலும் புதிது புதிதாக சில பிரச்னைகளும், சிக்கல்களும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். என்றாலும் பிள்ளைகள் கோபப்படுவார்கள். நெருங்கிய உறவினர்களில் சிலர் உங்களைப் பார்த்தால் ஒரு பேச்சு, பார்க்காவிட்டால் ஒரு பேச்சு என்று இருப்பார்கள். வழக்கில் வழக்கறிஞரை மாற்றுவீர்கள். அரசியல்வாதிகளே! தலைமையை பற்றி சகாக்களிடம் குறை கூற வேண்டாம்.
கன்னிப் பெண்களே! வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து ஏமாறாதீர்கள். புது வேலைக்கு முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உயரதிகாரியால் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். கலைத்துறையினர்களே! பழைய நிறுவனங்களிலிருந்தும் வாய்ப்புகள் தேடி வரும். பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்ட வேண்டிய மாதமிது.

**அதிஷ்ட திகதிகள்: 2, 11, 15, 16, 20**
**அதிஷ்ட எண்கள்: 2, 6**
**அதிஷ்ட நிறங்கள்: செவ்வூதா, வெள்ளை**
**அதிஷ்ட கிழமைகள்: செவ்வாய், வியாழன்**

# மூன்று நூல்களின் அறிமுக விழா







எழுத்தாளர் சாகித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப் எழுதிய 'நாம் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983', 'காலங்கள் சாவதில்லை', 'நாமிருக்கும் நாடே' எனும் மூன்று நூல்களின் அறிமுக விழா கடந்த 5 ஆம் திகதி அன்று சனிக்கிழமை அட்டன் சமூக நிறுவனத்தில் நடைபெற்றது. பத்திரிகையாளர் சிவலிங்கம் சிவகுமாரன் தலைமையில், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மூத்த கவிஞர் அல்–அஸ்மத் கலந்து கொண்டார். இந்நூலை பாக்கியா பதிப்பக உரிமையாளர் மல்லியப்பு சந்தி திலகர் வெளியிட்டு வைத்தார். மேற்படி நிகழ்வில் வரவேற்புரையை லுணுகலை ஸ்ரீயும், நூல் அறிமுகவுரையை சுப்பையா கமலதாசனும் நிகழ்த்தினர்.
'நாம் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983' என்ற நூலின் ஆய்வுரையை ஜே.லெனின்மதிவானம், மற்றும் 'நாமிருக்கும் நாடே' எனும் நூலின் ஆய்வுரையை எம்.எம்.ஜெயசீலன் ஆகியோரும், கருத்துரையை கவிஞர் வே.தினகரன் மற்றும் எழுத்தாளர் சிவனு மனோகரன் ஆகியோரும் நிகழ்த்தினர். ஏற்புரையை நூலாசிரியர் கலாபூணம் தெளிவத்தை ஜோசப் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.







**நாளை ஐப்பசி-25**
வியாழக்கிழமை -10.11.2016
திதி: தசமி கா. 06.34
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ.11.13
ராகுகாலம்:01.35-03.05 வரை
சுபநேரம்: 07.35-09.05 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையாள சினிமா வரலாற்றிலேயே முதல் முறையாக சாதனை படைத்த புலிமுருகன்

வைசாக் இயக்கத்தில் மோகன்லால், நமீதா நடித்து சமீபத்தில் வெளியான படம் புலிமுருகன். கிட்டத்தட்ட 25 கோடியில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் 100 கோடி வசூலை எட்டியுள்ளது.

இதன் மூலம் 100 கோடியை எட்டிய முதல் மலையாளப் படம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. எனவே, இந்தப் படத்தின் மீள் பதிப்புரிமைக்கு பெரும் போட்டி நிலவியது.

இந்த நிலையில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட அத்தனை மொழிகளின் உரிமையையும் அபிஷேக் பிலிம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து முலகுப்பாடல் பிலிம்ஸ் நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

இந்தச் சாதனையைத் தொடர்ந்து, இத்தனை நாள்களாக 3 கோடி சம்பளம் வாங்கி வந்த மோகன்லால் தற்போது தனது சம்பளத்தை 3.5 கோடி முதல் 4 கோடியாக உயர்த்தியுள்ளார்.

WhatsApp

நீங்கதானே தமிழ்ச் செல்வன்..?
ஆமாங்க..?
உங்க பேர்லே கணக்கு இருக்கா...?
கணக்கு இல்லைங்க தமிழ்தான் இருக்கு?



**VAISHENAAV SURESH**


பலவீனம்தான் என
உணர்ந்து கொள்ளாதவரை
வரப்போவதில்லை...
பலவீனத்தை சமாளிக்கும்
பலம்.

பெண்களை நம்பித்தான்
நகைக்கடைகள் திறக்கப்படுகிறது...



ஆண்களை நம்பித்தான் அடகு
கடைகள் திறக்கப்படுகின்றன...!!

நோயாளி: உடம்பெல்லாம்
எனக்கு ஒரே அரிப்பு...
டாக்டர்: ஊசி போடவா?



நோயாளி: வேணாம் டாக்டர் கொஞ்சம்
சொறிஞ்சு விட்டாபோதும்...!

ஜனவரி, பெப்ரவரிக்கு
அடுத்து மார்ச்சுவரிதானே வரனும்...
இதைக் கேட்டா ஏன் அடிக்க வராங்க



நீங்களே ஒரு நியாயத்தை சொல்லுங்க!

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | 5 | 6 | | |
| 6 | | | 7 | | | | 9 | |
| | 1 | 5 | | 9 | | | | 8 |
| | 6 | | 8 | | | | | |
| 3 | | | 1 | | 2 | | | 6 |
| | | | | | 7 | | 5 | |
| 4 | | | | 2 | | 3 | 6 | |
| | 2 | | | | 3 | | | 9 |
| | | 6 | 5 | | | 1 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 1 | 9 | 6 | 4 | 7 | 3 | 5 |
| 7 | 4 | 3 | 1 | 2 | 5 | 9 | 8 | 6 |
| 5 | 6 | 9 | 8 | 3 | 7 | 1 | 2 | 4 |
| 2 | 3 | 6 | 5 | 1 | 9 | 4 | 7 | 8 |
| 4 | 8 | 5 | 6 | 7 | 2 | 3 | 9 | 1 |
| 9 | 1 | 7 | 4 | 8 | 3 | 6 | 5 | 2 |
| 1 | 5 | 4 | 3 | 9 | 8 | 2 | 6 | 7 |
| 6 | 9 | 2 | 7 | 5 | 1 | 8 | 4 | 3 |
| 3 | 7 | 8 | 2 | 4 | 6 | 5 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள்பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல. அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்று, நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை இலக்கை அடைவீர்கள். சேமிப்பு பன்மடங்கு உயரும். புத்திரர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** இனம்புரியாத மனசஞ்சலம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், இடையூறை சரி செய்வது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். உடல் நலத்துக்கு சிகிச்சை தேவைப்படலாம். படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**கடகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சீராக இருக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**சிங்கம்:** முக்கியமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்களுக்கு, பதவி உயர்வும், சலுகையும் கிடைக்கும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கன்னி:** பேச்சில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி பெறுவீர்கள். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்துசேரும். பெண் கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

**துலாம்:** வீண் பேச்சால், சங்கடத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள், ஆடம்பர எண்ணத்தை கைவிடுவது நல்லது.

**விருச்சிகம்:** உங்களிடம் உதவி பெற்றவர், நன்றி மறந்து செயற்படுவர். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**தனுசு:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில், சுப விடய பேச்சு நடந்தேறும். உறவினர் வருகையால், மனதில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**மகரம்:** பேச்சில், நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில், மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிவிடயமாக வெளியூர் செல்வர். வீடு, வாகன பாதுகாப்பு வகையில், விழிப்புடன் இருப்பது அவசியம்.

**கும்பம்:** அடுத்தவர் வியக்கும் விதத்தில் முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், குடும்ப வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வர்.

**மீனம்:** தகுதிக்கு மீறி வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரம், மந்தகதியில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். சத்தான உணவு, உடல்நலத்தை சீராக்கும்.

## நல்லிணக்கத்துக்கு...

அமைச்சர் பரோனெஸ் அனெலி, எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவருமான இரா.சம்பந்த னிடம் நேற்று நேரில் தெரிவித்தார்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட் டுள்ளசெய்திக்குறிப்பில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண் டுள்ள ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநல வாய நாடுகளுக்கான பிரிட்டனின் இரா ஜாங்க அமைச்சர் பரோன்ஸ் அனெலிக் கும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள பிரிட்டன் தூது வர் இல்லத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே பரோன்ஸ் அனெலி மேற் கண்டவாறு உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் அரசமைப்பு உருவாக் கம் தொடர்பில் பிரிட்டன் அமைச்சரைத் தெளிவுபடுத்திய கூட்டமைப்பின் தலைவர், தேசியப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை புதிய அரசமைப்பினூடாக அடைவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

வடக்கிலே காணப்படும் அதீத இராணுவப் பிரசன்னம் மற்றும் நாளாந்தப் பொருளா தார நடவடிக்கைகளில் இராணுவத்தின் இடையூறுகள், அதனால் மக்கள் எதிர் கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பிலும் பிரிட்டன் அமைச்சரிடம் விளக்கிய கூட்டமைப்பின் தலைவர், பொது மக்களின் காணிகள் விடுவிப்பில் ஏற் பட்டுள்ள முன்னேற் றங்களை விவரித்த தோடு இந்தக் காணி விடுவிப்புகள் இன் னும் துரிதகதியில் இடம்பெற வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நல்லிணக்கத்தை நோக்கிய இலங்கை யின் பயணத்தில் பிரிட்டனின் பங்கும், பன்னாட்டுச் சமூகத்தின் கண்காணிப்பும் பங்கும் கடந்த காலங் களில் இருந்ததைப் போல தொடர்ச்சி யாகவும் இருக்க வேண் டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாள ரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான எம்.ஏ.சுமந்திரன், கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை களின்போது பிரிட்டன் ஆற்றிய பங்க ளிப்பை வரவேற்றதோடு தொடர்ந்தும் அத்தகைய பங்களிப்பின் அவசியத்தை யும் வலியுறுத்திக் கூறினார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கை அரசுக்குப் பிரிட்டன் தொடர்ந்தும் ஒத்து ழைப்பும் ஊக்கமும் கொடுக்கும் என்று இந்தச் சந்திப்பின் இறுதியில் ஐக்கிய நாடு கள் மற்றும் பொதுநலவாய நாடுகளுக் கான பிரிட்டனின் இராஜாங்க அமைச்சர் பரோனெஸ் அனெலி தெரிவித்தார்.(த-5)

## ஓட்டுமடம்...

என்று யாழ். மேல் நீதிமன்ற அறங்கூறும் அவை தீர்ப்பளித் தது. அவர்கள் நால் வருக்கும் தூக்குத் தண்டனைத் தீர்ப்ப ளித்து உத்தரவிட் டார் யாழ். மேல் நீதி மன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.

ஏனைய 4 பேரும் நிரபராதிகளாக இனங்காணப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப் பாணம் ஓட்டுமடத் தில் நடு வீதியில் வைத்து குடும்பத் தலைவர் மீது அசிற் வீசப்பட்டு வாளால் வெட்டப்பட்டது. இதன் போது படுகாயம டைந்த அவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பயன ளிக்காது உயிரிழந் தார்.

இந்த வழக்கு யாழ். நீதிவான் மன்றில் இடம்பெற்ற சுருக் கக் கூற்று விசார ணையில் கொலை என்று உறுதிப்படுத்தப்பட்டதனால், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல்நீதிமன்றுக்கு விசாரணைக் காகப் பாரப்படுத்தப்பட்டது. மேல்நீதிமன் றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோது இந்த வழக்கை அறங் கூறும் அவை முன்பாக விசாரணை செய்யுமாறு எதிரிகள் கோரியிருந்தனர்.

அதன்படி யாழ்ப்பாணம் மேல் நீதிமன் றத் தினால் அறங்கூறும் அவை அமைக்கப் பட்டு இந்த வழக்கு கடந்த ஒருவாரமாக வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சியங்கள், எதிரி தரப்புச் சாட்சிகள் மற்றும் நிபுணத்துவ சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் எதிரி தரப்பு சட்டத்தரணிகள் சார்பாகச் மூத்த சட்டத் தரணி நிசாம் காரியப்பரும், சட்டமா அதி பர் திணைக்களம் சார்பாக அரச சட்டத் தரணி நிசாந் நாகரட்ணமும் தத்தமது தொகுப்புரையை அறங்கூறும் அவை முன்பாக நேற்றுத் தொகுத்து வழங்கினர்.

அதன் பின்னர் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் வழக்கு பற்றிய முழுமை யான விளக்கவுரையை வழங்கினார். தொடர்ந்து அறங்கூறும் அவையினர் தமது தீர்ப்பை அறிவிக்கத் தயாராகினர். அதற்கான போதிய நேரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அறங்கூறும் அவையினர் தமது முடிவு களை எடுத்துக்கொண்டு பதிவாளருக்குத் தெரியப்படுத்தினர். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.30 அளவில் அறங்கூறும் அவை மீள ஆரம்பமாகியது. அதன்போது தீர்ப்பை அறிவித்தனர்.

முதலாவது குற்றமான சட்டவிரோத கூட் டம் கூடியமைக்கு, 1ஆம் 7 ஆம் எதிரிகள் சுற்றவாளிகள். ஏனையவர்கள் 6 பேரும் குற்றவாளிகள் என்று அறங்கூறும் அவை தீர்ப்பளித்தது. அதற்காக 6 பேரில், 2ஆம் மற்றும் 6 ஆம் எதிரிக்கு 6 மாத கால கடுழிய சிறைத்தண்டனை விதித்த மேல் நீதிமன்ற நீதிபதி, அந்தத் தண்டனை 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார். 3, 4, 5, 8 ஆம் எதிரிகளுக்கு 6 மாதகால கடுழிய சிறையும் 2 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்த நீதிபதி, பணம் கட்டத்தவறின் ஒரு மாதகால கடுழிய சிறைத்தண்டனையும் விதித்தார்.

சட்டவிரோத கூட்டம் கூடி அதன் உறுப்பின ராக இருந்து பொதுநோக்கத்துடன் கொலை செய்தனர் என்று 8 எதிரிகள் மீதும் இரண்டாவது குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது. சட்டவிரோத கூட்டம் கூடிய குற்றச்சாட்டு இருப்பின் அதில் குறைந்தது 5 பேர் காணப்படவேண்டும். ஆனால் அறங்கூறும் அவையினர் 4 எதி களை மட்டும் குற்றவாளிகளாக அடையா ளம் கண்டு கொண்டமையால், இந்தக் குற்றச்சாட்டிலிருந்து 8 எதிரிகளும் விடு விக்கப்பட்டனர்.

மூன்றாவது குற்றச்சாட்டு திட்டமிட்ட கொலை. இந்தக் குற்றச்சாட்டில் அறங் கூறும் அவையினர் எதிரிகளான நசார், ந.சிவகுமார், நிஜாம், ப.லிங்கநாதன் ஆகிய 4 எதிரிகளும் நிரபராதிகள் என்று தீர்ப்பளித்தனர். அவ்வாறு நிரபராதியாக அறிவிக்கப்பட்டவுடன் முதலாவது எதி ரியான நசார் திடீரென மயங்கிச் சரிந்தார். அவரை அனைத்துக் குற்றச் சாட்டுக்களி லிருந்தும் விடுவிப்பதாக அறிவித்த நீதி பதி அவரை மன்றிலிருந்து செல்லுமாறு அறிவுறுத்தினார்.

இந்த வழக்கில் 3, 4, 5, 8 ஆம் எதிரிக ளான சகோதரர்களான குசைன் முகமது றியாஸ், முகமது குசைன் அஸ்மித், முக மது சர்ரான் மற்றும் றிப்கான் ஆகிய நான்கு பேரையும் அறங்கூறும் அவையி னர் கொலைக் குற்றவாளிகளாக அடையா ளம் கண்டனர். அந்தக் கொலைக்கான தண்டனையை மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் வழங்கினார்.

அதன்படி 4 பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனையை ஜனாதிபதி தீர்மானிக்கும் இடத்தில், தீர்மா னிக்கும் தினத்தில் 4 பேரும் கழுத்தில் சுருக்கிட்டு தொங்க விடப்பட்டு உடலிலி ருந்து உயிர் பிரியும் வரை தூக்கில் தொங்குவீர்கள் என்று மேல் நீதிமன்ற நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார்.

அறங்கூறும் அவை முன்பான இந்த வழக்கு 6 நாள்கள் இடம்பெற்று 6 ஆவது நாளான நேற்றுத் தீர்ப்பு வழங்கப் பட்டது. 6 நாள்களும் வழக்கு இடைவேளை முடிந்து மீண்டும் தொடங்கும் ஒவ்வொரு தடவை யும் அறங்கூறும் அவையினர் மேல் நீதிமன்றப் பதிவாள ரால் சத்தியம் செய் யப்பட்டிருந்தனர். 'இந்த வழக்குத் தொடர்பாக அறங்கூறும் அவையினரைத் தவிர வேறு எவருடனும் கலந்துரையாட மாட்டேன் என்றும் வழங்கப்படுகின்ற சாட்சிகளைப் பதிவு செய்து நீதியானதும் நியாயமானதுமான தீர்ப்பை வழங்கு வேன்' என்றும் பதிவாளரால் சத்தியம் செய்யப்பட்டது.


இதேவேளை, இந்த வழக்கில் எதிரிகள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத் தரணி நிசாம் காரியப்பர் விசாரணை நட வடிக்கைகளின் நிறைவில் மன்றில் கருத்துரைத்தார்.

அறங்கூறும் அவை விசாரணை மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. தென்னி லங்கையில் எந்தவொரு நீதிமன்றப் பதி வாளரும் இவ்வாறு உரிய நடைமுறைக ளைக் கடைப்பிடிப்பதில்லை. யாழ்ப்பாண நீதிச் செயற்பாடுகள் நம்பிக்கைமிக்கவை என்று அவர் தெரிவித்தார்.

(வ-4,6)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவபாதம் (நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் முத்தட்டு மடலேனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவபாதம் நேற்று (08.11.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான ஆறுமுகம்-வைரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அன்ன லெட்சுமி, பத்மநாதன், வேதார ணியம், இராசலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்தட்டுமட லேன்,
கோண்டாவில்.

(ஜே.5992)
(16,17,19)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தெய்வவேற்பரமநாதன்

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கிராம அலுவலர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.02.1951 | 08.11.2016 |



பெரியமாவடி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், இல. 709, சிவிக் சென்ரர், வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப் பிள்ளை தெய்வவேற்பரமநாதன் 08.11.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சுப்பையா வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதி யரின் அன்புமகனும் காலஞ்சென்ற சின்னையா பொன்னுத்துரை சிவ பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் அருந்தவஜெயந்தி யின் அன்புக்கணவரும் குகன் (P.H.I பரந்தன்), தரணிபன் (லண்டன்), ஜனார்த்தனன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் மகேஸ்வரி, கமலாதேவி, கதிர்காமநாதன் காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் பாலசுந்தரம் (ஓய்வு நிலை R.D.O), சண்முகசுந்தரம் ( CPI /U.C சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருந்தவநாதன் (கிளி/மாவட்டம் நீதிமன்றம்), உதயநாதன் (பிரான்ஸ்), குகநாதன் (CLG/NP), சத்தியநாதன் (வர்த்தகர்), சோதிநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமைத்துனரும் சத்தியவதனி (மருந்துக் கலவையாளர்), பாலகௌரி, கோகிலசிறி, சத்தியராணி, பராசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மதுஜா (ஆசிரியர் தருமபுரம் மத்திய கல்லூரி), சிவகாமி (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.11.2016) புதன்கிழமை அன்னாரின் வதிவிடத்திலிருந்து பி.ப ஒரு மணியளவில் பன்னங்கண்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(கே/250)(17,19,20)

தகவல் :
தெ.குகன் (மகன்)

உத்தியோகபூர்வ முடிவுகள்
512 2016.11.08
வெற்றி இலக்கங்கள்
15 35 45 49 H
ரூ. 16,996,000/-


சீட்டிழுப்பு வாரம்: 61
சீட்டிழுப்பு திகதி: 08.11.2016
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 76,459,520/-
J 08 32 47 64

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
08.11.2016 2054 நீலம்
தனுசு
வெற்றி இலக்கங்கள்
15 25 31 60
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5, 958 500/=

வெற்றி இலக்கங்கள்
30 43
டபள் சான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பொருளாதார பரம்பலை தீர்மானிக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்





"இராணுவ பொருளாதார ரீதியில் தனித்து விடப்பட்டுள்ளது"

உலக நாடுகள் அனைத்துமே சமீப காலமாக பொருளாதார நெருக்கடிகளினுள் ஆட்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த ஆண்டில் கிறீஸ், போர்த்துக்கல் போன்ற ஐரோப்பிய நாடுகள் மிகப் பெரிய கடன் சுமையை எதிர்நோக்கியிருந்தது.
அதே போன்று ஐரோப்பிய கூட்டமைப்பிலிருந்து பிரிட்டன் வெளியேறிய சந்தர்ப்பமானது, கச்சா எண்ணெயின் கேள்வியில் அதிகரிப்பு மற்றும் பன்னாட்டு அளவிலான தீவிரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலே உலக அரசியல் அரங்கத்திலே இராணுவ ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் தனித்து முடிவுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் அமெரிக்க உள்ளது.
இன்றைய (நேற்றைய) இறுதித் தேர்தல் வக்கெடுப்பில் பங்குபற்றியுள்ள ட்ரம்பின் வெளியுறவு கொள்கைகள் அமெரிக்கர்களுக்கு சாதகமாக இருந்தாலும், அமெரிக்கா நோக்கி வேலைவாய்ப்பைத் தேடி நகர்வோரிடையே கெடுபிடிகளை உருவாக்கும் என சுட்டிக்காட்டப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதியின் தேர்வு என்பது சர்வதேச நாடுகள் உடனான உறவுகளை அவர்கள் எப்படி பேணுவார்கள் என்பதன் அடிப்படையில் இடம் பெறுவதில்லை என்பது நோக்கத்தக்கது.
இந்த நிலையிலேயே ஹிலரி வெற்றிபெற்றால், பன்னாட்டு அளவிலான பொருளாதார உறவுகள் சீராக காணப்படும் என்பதான நம்பிக்கையின் பற்றுதல் சர்வதேச நாடுகளின் தற்போதைய நகர்வுப் போக்கில் தென்படுகிறது. இருந்தபோதும் தற்போதைய பொருளாதார அரசியல் நடைமுறைகளில் இந்தத் தேர்தலில் யார் வெற்றிபெற்று ஆட்சியில் அமர்ந்தாலும், பெரிதாக எந்த மாற்றங்களையும் கண்டுகொள்ள முடியாது என எதிர்வுகூறப்படுகிறது.

# கடனடிப்படையிலே சூரிய மின்கலங்கள்

## தேசிய சேமிப்பு வங்கி, சோலரிஸ் எனர்ஜி இணைந்து ஏற்பாடு




தேசிய சேமிப்பு வங்கி மற்றும் சோலரிஸ் எனர்ஜி நிறுவனத்தினர் இணைந்து சூரிய மின்கலங்களை (சோலர்கள்) கடனடிப்படையிலே பொருத்தி மின்சாரத்தைச் சேமிக்கும் திட்டம் ஒன்றை வாடிக்கையாளர்களுக்கென ஆரம்பித்துள்ளது.
இதன் பிரகாரம் இந்தத் திட்டம் தொடர்பிலான தெளிவுபடுத்தல்– கலந்துரையாடல்கள் பிரதேச செயலக ரீதியிலே இடம் பெற்றுவருகிறது.
அரசினால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மேற்படி 'சூரிய பல' திட்டத்தின் கீழாக பொருத்தப்படவுள்ள சூரிய மின்கலங்கள் 25 வருட உத்தரவாதத்தைக் கொண்டவை.
திட்டத்தில் இணைந்து கொண்டு, தமது வீடுகளுக்கான சூரிய மின்கலத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தேசிய சேமிப்பு வங்கியின் பிரதேச ரீதியிலான இயங்குநிலை கிளைகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியுமெனதெரிவிக்கப்படுகிறது.
இதன்மூலம் மாதாந்தம் அதிகளவான மின் சக்தியைப் பயன்படுத்துவோர் தாங்கள் பாவிக்கும் மின்சாரத்துக்கான கட்டண அளவை பொருத்தப்படுகின்ற சூரிய மின்கலங்களின் பாவனை மூலம் குறைத்துவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வணிகம்

# பெற்றோலிய வள அபிவிருத்தி திருத்தச் சட்டம்

## தயாரிப்பு நடைமுறைப் பணிகள் நிறைவு



பெற்றோலிய வள அபிவிருத்தி திருத்தச் சட்ட வரைவை விரைந்து நாடாளுமன்றத்திலே சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் புதிய சட்டத்தை தயாரிக்கும் பணிகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளதாகவும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.
இதன்பிரகாரம் பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு போன்றவற்றை கொள்வனவு செய்வது தொடர்பில் முதலீட்டாளர்களை உரிய முறையிலே நாட்டினுள் வரவழைத்துக் கொள்வது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.
இதேவேளை–இந்தச் சட்டமானது நாடாளுமன்றில் அங்கீகாரம் பெற்றதன் பிற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பிலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென எடுக்கப்படும் என மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.
அத்துடன் பெற்றோலிய பயன்பாட்டின் போது நுகர்வோர் எதிர் நோக்கிவரக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும்–இதன்போது ஆராயப்படவுள்ளதாகவும் மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

## நுட்பம்

# மோட்டோ எம் (MOTO M) சிமாட் கைபேசி புதிய அறிமுகம்

சிமாட் கைபேசிகளின் தயாரிப்புத் துறையில் தரமான கைப்பேசிகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தி வரும் மோட்டோரோலா நிறுவனம் தங்களுடைய அடுத்த புதியவகை தயாரிப்பான மோட்டோ எம் எனும் புதியவகை கைபேசியை அறிமுகம் செய்துள்ளது.
இந்தக் கைபேசியானது 5.5 அங்குல அளவுடையதுடன், 1920 இற்கு 1080 பிக்சல் றெசலுசன் உடைய முழுமையான எச்.டி. தொடுதிரை, எம்.ரி.எச். பி15 புறோசசர், 4 ஜிபி பிரதான நினைவகமாக, 32 ஜி.பி சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.
இவைதவிர 16 மெகாபிக்சல் அளவு கொண்ட பிரதான கமரா, 8 மெகாபிக்சல் அளவுகொண்ட வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, நீண்ட ஆயுள் பாவனையுடைய 3050 மெகா கேட்ஸ் மின்கலம் என்பனவும் சிறப்பு அம்சங்களாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.



CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| 8/11/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| சுட்டிகள் | | இன்று | நேற்று |
| ASPI | -5.91 | 6,439.06 | 6,444.97 |
| S&P SL20 | -5.32 | 3,614.58 | 3,619.90 |
| வியாபாரப்புரள்வு | | 161,753,984 | 406,081,856 |
| உள்நாடு:- கொள்வனவு | | 137,186,272 | 152,184,912 |
| விற்பனை | | 149,533,248 | 341,072,736 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 24,567,708 | 253,896,944 |
| விற்பனை | | 12,220,729 | 65,009,120 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N0000 | 26.2 | 1,710,708 | 44,664,065 |
| சென்ட்ரல் பைனான்ஸ் | CFIN.N0000 | 107 | 220,875 | 23,855,062 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N0000 | 860.0 | 10,601 | 9,019,259 |
| சம்பத் வங்கி | SAMP.N0000 | 266 | 33,608 | 8,905,919 |
| கொமர்சியல் வங்கி | COMB.N0000 | 149 | 52,349 | 7,755,304 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X0000 | 52.4 | 133,938 | 7,021,000 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N0000 | 151.5 | 41,679 | 6,322,307 |
| சிலோன் கோல்ட் ஸ்டோரஸ் | CCS.N0000 | 725.0 | 8,483 | 6,016,988 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N0000 | 92 | 41,196 | 3,758,725 |
| ஏ சி எல் பிளாஸ்டிக் | APLA.N0000 | 225 | 10,011 | 2,252,475 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
அக்ஸஸ் இஞ்சினியறிங் (AEL) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.50
லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் (LHCL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
கொமர்சியல் வங்கி (COMB) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| [illegible] | 294 |
| பரிமாற்றத்தில் | 190 |
| விலை உழைப்பு | 13.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாஜியால்....

செங்கோலைத் தூக்க ஓடிச் சென்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சிறிது நேர அமளியின் பின்னர் நிலமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

வடக்கு மாகாண சபையின் அமர்வுகள் இடம்பெறத் தொடங்கிய பின்னர் சிவாஜி லிங்கம் செங்கோலுக்கு அச் சுறுத்தல் விடுத்த இரண்டாவது சம்பவம் இதுவாகும். 2014ஆம் ஆண்டு ஜுலை மாதமும் சிவாஜிலிங்கம் செங்கோலைத் தூக்கி வீசினார். செங்கோல் சேதமடைந் தது. அதனைத் திருத்தியமைப்பதற்கு ஏற்பட்ட செலவைச் செலுத்துமாறு சபை சிவாஜிலிங்கத்தைக் கேட்டுக் கொண்டபோதும் அவர் மறுத்துவிட்டார்.

நேற்று, வடமாகாண சபையின் 65ஆவது அமர்வு இடம் பெற்றபோது கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டுக்கொண்டிருந்தபோது சிவாஜிலிங்கம் மீண்டும் செங்கோலைத் தூக்க முயன்றார். எனினும் ஏனைய உறுப்பினர்கள் அவரைச் சமாதானப்படுத்தி னர். அவர் இருக்கைக்குத் திரும்பினார்.

விவாதத்தின்போது, வடமாகாண சபை உறுப்பினர்களுக் கான தீர்வையற்ற வாகனங்களுக்கான அனுமதி தொடர் பில் உறுப்பினர் ஜெயதிலக மற்றும் செனவிரத்ன ஆகி யோர் கருத்துத் தெரிவிக்க முயன்றனர். ஆனால் அவைத் தலைவர் "அதற்கு இது பொருத்தமான நேர மில்லை" என்று தெரிவித்தார். அதற்கிடையில், உறுப் பினர்களான சிவாஜிலிங்கத்துக்கும் ஜெயதிலகவுக்கும் இடை யில் கருத்து மோதல் ஆரம்பித்தது.

இந்தச் சமயத்தில் சிவாஜிலிங்கம் திடீரென தமிழ்ப் பத்தி ரிகை ஒன்றில் வெளியான கட்டுரை தொடர்பில் உரை யாற்றத் தனக்கு நேரம் தரப்படவேண்டும் என்றார். அவைத் தலைவர் அதற்கும் அனுமதியளிக்கவில்லை. "நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படவில்லை" என்று கூறி ஒதுக்கிவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த சிவாஜி சடுதியாக இருக்கையை விட்டு எழுந்து அவைத் தலைவரின் பீடத்தை நோக்கி "ஏன் எனக்கு நேரம் ஒதுக்கித் தரமுடியாது?" எனக் கத் திக்கொண்டே அவைத் தலைவரின் முன்பாக உள்ள செங்கோலைத் தூக்க முற்பட்டார்.

உடனடியாகத் தலையிட்ட ஏனைய உறுப்பினர்கள் அவரைச் சமாதானப்படுத்தினர். இதையடுத்து அவர் இருக்கைக்குத் திரும்பினார்.

செங்கோலை சிவாஜிலிங்கம் தூக்க முற்பட்டபோது அவருக்கும் அவைத் தலைவருக்கும் இடையில் நடந்த வார்த்தை மோதல் சபைக் குறிப்பேட்டி லிருந்து நீக்கப்பட்டன. இதற்கான உத்தரவை சபைத் தலைவர் வழங்கினார். (உ-8)

## குடும்பத்தலைவர்....

3 ஆவதுநாள் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரி விக்கப்பட்டது. அவரை மோதிய வர் தப்பிச் சென்றுவிட்டார்.

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு அருகில் கடந்த சனிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது. இதில் சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்ம ன் கோவிலடியைச் சேர்ந்த இராசையா சிவசுப்பிர மணியம் (வயது-71) என்பவரே உயிரிழந்தார். அந்தப் பகுதியில் உள்ள உணவகத்துக்கு முதிய வர் நடந்து சென்றவேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதிவிட்டு தப்பி யோடியுள்ளது. காயங்களுக்கு இலக்கான முதியவர் சாவகச்சேரி வைத்தி யசாலையில் சேர்க் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக் குக் கொண்டு செல லப்பட்டார். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுச் சிகிச்சை பய னின்றி உயிரிழந் தார். விசாரணை களின் பின்னர் சட லம் உறவினர்களி டம் ஒப்படைக்கப்பட் டது. (த-4-9)

## பெரும்...

கலந்துரையாடலின் போதே பொலிஸார் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தெரிவித்த தாவது: ஆவா என்பது பெரிய குழு அல்ல. அவர்கள் மிகச் சிறிய குழுவினர் தான். வடக்கில் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அவர்கள் செயற்பட்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்திலும் ஒரு சில பகுதிகளில் மாத்திரமே உள்ளனர்.

களவு உள்ளிட்ட சில சமூக விரோதச் செயல்களில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சந்திகளில், மதுபானம் அருந்தி விட்டு இருக்கும் இளைஞர்களால் தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றனர்.

இதேவேளை, கடந்த இரு வாரங்களாக ஆவா குழு தொடர்பில் தென்பகுதி அரசியல் தரப்பினர் பெரும் பரப்புரைகளை மேற் கொண்டிருந்தனர். இந்தக் குழுவுடன் தொடர்புடைய சந்தேகத்தில் யாழ்ப்பாணத்தில் 9 பேர் கடந்த சில தினங்களில் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக் கது. (த-5)

## போதைப்...

கலந்துரையாடலில் பொலிஸார் தெரிவித்தனர். வடக்கின் தற்போதைய நிலமை தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநர் குரே தலைமையில் அவரது அலுவலகத்தில் நேற்றுக் காலை சிறப்புச் சந்திப்பு இடம் பெற்றது. இதில் வடக்கின் 5 மாவட் டங்களினதும் மாவட்டச் செயலர்கள், வடக்கு மாகாண தலைமைச் செயலர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர், 5 மாவட்டங்களினதும் படைக் கட்டளைத் தளபதிகள், பொலிஸார் கலந்து கொண்டனர். வடக்கில் தொடர்ச்சியாகக் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் கடத்தப்படுவது தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தியாவிலிருந்தே போதைப் பொருள்கள் இங்கு கொண்டு வரப்படுகின்றன. தென்னிலங்கையைச் சேர்ந்த முதலாளிகளுக்கே அவை கொண்டு வரப்படுகின் றன. இதனைக் கடத்தும் மையமாக வடக்கு இருக்கின்றது. வடக்கில் போதைப் பொருள் நுகர்வு 5 சதவீதம்தான். போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவதற்குத் தொடர்ச் சியாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-5)


### இதய அஞ்சலி



ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையின் ஆரம்பத் தலைவராகவும் தற்போது உபதலைவராகவும் இருந்து இறைபணிபுரிந்து அமரராகியுள்ள

**வயிரமுத்து தருமதுரை**

அவர்களின் இழப்பு எங்கள் எல்லோரையும் தீராத சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லம் வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஊரெழு கிழக்கு.

பரிபாலனசபை
நாவலம்பதி ஞானவைரவர் ஆலயம்.

### ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
### மரண அறிவித்தல்

**திருமதி இராசலட்சுமி கணேஸ்பத்தர்**



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி உடுவிலை வசிப்பிடமாக வும் தற்போது கொலண்டை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இராசலட் சுமி கணேஸ்பத்தர் 07.11.2016 திங்கட் கிழமை கொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கப்பத்தர் - பூரணம் தம்பதிய ரின் மூத்த மகளும் காலஞ்சென்ற கணேசு பத்தரின் மனைவியும் சண் முகம் பத்தர்(கொலண்ட்) காலஞ்சென்றவர்களான சந்திரபுஸ்பம் (கொலண்ட்), ராணிமலர்(ஔவை - ஜேர்மனி) மற்றும் உதயகுமார் (உதயன் - கொலண்ட்), கருணாகரன்(பவா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மலர், பஞ்சரத்தினம், இந்திரகுமாரி, ஈஸ்வரி, நாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மகேஸ்வரி(வத்தளை), யோகரட்ணம்(இந்தியா), தங்கராசாப் பத்தர்(உடுவில்) காலஞ்சென்ற சித்திரவேல்(இலங்கை மின்சார சபை) மற்றும் ஜெகசோதிமலர் (இணுவில்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொலண்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டச்றோட் உடுவில்
021 224 4990
(J 5978)
(14.18.21)
சகோதரன் தங்கராசாப் பத்தர் (உடுவில்)

கொலண்ட்
003 161 662 9955/ 003 161 341 5408

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**சோமசுந்தரம் இராசையா**

பிறப்பு
29.12.1941

இறப்பு
12.11.2013

திதி: வளர்பிறை நவமி
(09.11.2016)

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் பிரிவால் வாடும்

அங்களப்பாய்
இணுவில் கிழக்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**முருகேசு சுந்தரம்**

(நயினாதீவு -7)



தோற்றம் : 16.12.1932
மறைவு :08.11.2016

நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுந்தரம் நேற்று (08.11.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - அம்பலத்தி தம்பியரின் மகனும் லெட்சுமியின் பெறா மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன் னம்மா தம்பதியரின் மருமகனும் நீலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் பூரணம், கனகலிங்கம்,காலஞ்சென்ற நாகராசா மற்றும் சரஸ்வதி, கமலாம்பிகை, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரரும் நீதிராசா, புவனலெட்சுமி,இராசபாலன் காலஞ்சென்றவர்களான ஸ்ரீபாலன், ஜெயராசா, மனோகரி மற்றும் கேதீஸ்வரி , தியாகராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, சண்முகநாதன் (வேலணை பிரதேச செயலகம்), கிருஷ்ணகுமாரி, சபாரெத்தினம்(பிரதேச செயலகம் நெடுந்தீவு), சத்திய வாணி, சித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவக்கொழுந்து, மங்களம், காலஞ்சென்ற வடிவேலு, இராசரெத்தினம் மற்றும் தவமணி, தங்கரெத்தினம், தங்கமணி, காலஞ்சென்றவர்களான யோகம்மா, செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2016) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(ஜே/5974)(12.18.21)
தகவல்:
குடும்பத்தினர்.

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்

### நன்றி செலுத்தும் வழிபாடு



**செல்வம் டானியல் கிறேஸ்மலர்**

கிளிநொச்சி, தருமபுரம், உழவனூர் நவஜீவனத்தை வதிவிடமாகக் கொண்ட செல்வம் டானியல் கிறேஸ்மலர் (சீதாலட்சுமி) அவர்கள் 10.10.2016 கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார். அவர்களின் நினைவாக

இன்று (09.11.2016) அவரது மகன் மகேந்திர செல்வம் (ராஜா) அவர்களின் வீட்டில் நன்றி செலுத்தும் வழிபாடு முற்பகல் 11 மணிக்கு நடைபெறுகின்றது. இவ்வழிபாட்டுக்கு வருகை தந்து கலந்துகொள்ளும்படி போதகர்கள், அமைப்புத் தலைவர்கள், விசுவாசிகள், நண்பர்கள், உறவினர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம். வழிபாட்டைத் தொடர்ந்து நடைபெறும் ஐக்கிய விருந்து உபசாரத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
(கே/208)(11.17.21)

D.மகேந்திரசெல்வம் (ராஜா),
7ஆம் யூனிட், கல்மடுநகர், இராமநாதபுரம்.
021 390 0052

### 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் இராசையா கார்த்திகேசு**

(ஓய்வுபெற்ற முன்னாள் உள்நாட்டு இறைவரித் திணைக்கள பொறுப்பதிகாரி)

தோற்றம்
01.02.1939

மறைவு
15.11.2010



உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
ஆறு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா....
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(ஜே/5979)
(11.17.21)

இல.39/2, சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் புவேந்திரா
இராஜக்கோன்
(அரசாங்க மருந்தாளர்)

மலர்வு 01.09.1941
உதிர்வு 09.11.2013

எங்கள் உயிரில் கலந்த உறவே !
இம்மையில் உங்களை நேசித்தோம்
மறுமையில் உங்களை மறவோம்.

தபாற்கந்தோர் முன்பாக,
ஏழாலை வடக்கு, ஏழாலை.
(J 5882)
(14,17,18)
குடும்பத்தினர்



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 27.09.2016
செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்

அமரர்
கனகரத்தினம்
பாபு

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (10.11.2016) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் சட்டநாதர் கோயிலடியில் உள்ள திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கற்குளம்லேன்,
யாழ்ப்பாணம்.
(J 5972)
(14,17,18)
தகவல்
குடும்பத்தினர்.


### கத்தி வைத்திருந்த ஒருவருக்கு இரு மாதச் சிறை

சட்டத்துக்கு முரணான வகையில் கத்தியொன்றைவைத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டு, பதுளை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோதுஅவருக்கு இரண்டுமாத சிறைத் தண்டனை விதித்து, பதுளை நீதிமன்ற நீதிவான் ருவந்திகா மாரசிங்க உத்தரவிட்டார். அத்துடன் அவரிடமிருந்த கத்தியும் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டது. (த-ய-4)


## நினைவின் மடியில் முதலாம் ஆண்டு

மூதறிஞர் சி. சிவசரவணபவன் (சிற்பி)
(ஆசிரியர் 'கலைச்செல்வி', இளைப்பாறிய அதிபர்)

எம் தோற்றச்சுடரொளியாய்
28.02.1933

சொல்லாத நுண்ணுணர்வாய்
09.11.2015



நீள நினைந்து
நித்தமும் மனதிருத்துகிறோம்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.



## 28 ஆவது பிறந்த தினமும் 7 ஆம் ஆண்டு நினைவலைகளும்

றஜிவிதா
ஸ்ரீரங்கநாதன்
(திசானி)



மலர்வு
09.11.1988

உதிர்வு
24.01.2009

ஆண்டுகள் ஏழானது அம்மா நீ பிரிந்து தவிக்கின்றோம் நாம் இங்கு உன்னை நினைத்து
பட்டாம் பூச்சியாய் சிறகடித்து பறக்கும் முன்னே
உன் வாழ்வை சிறகொடித்துப் பறித்தானே காலன்

உன் நினைவில் வாழும் உன் உறவுகள்

இல.96, குடமத்தி,
உருத்திரபுரம், கிளிநொச்சி.
(06/5207)(11,18,21)
அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் விஸ்வலிங்கம்
விநாயகமூர்த்தி
(மூர்த்தி அண்ணா)
(நிரு அரைக்கும் ஆலை)

மலர்வு 29.05.1954
உதிர்வு 13.10.2016

கடந்த 13.10.2016 ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் விஸ்வலிங்கம் விநாயகமூர்த்தி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (10.11.2016) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் என்பதனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 12.11.2016 சனிக்கிழமை அவரது இல்லத்தில். நடைபெற்று நினைவஞ்சலியும் மதியபோசன நிகழ்வும் புளியங்கூடல் மகாமாரி இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மாசாந்தி பெற வேண்டுவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னார் காலஞ்சென்ற செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர்வளையங்கள், இரங்கல் செய்தி தெரிவித்தவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்கள் நேரில் வந்து ஆறுதல் கூறி இறுதிக்கிரியையிலும், ஊர்வலத்திலும் கலந்துகொண்ட அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.
(11,17,18)
குடும்பத்தினர்.



" ஆண்டவர் தம் இல்லத்தில் ஊழியுள்ள காலமும் நான் குடியிருப்பேன் "

## ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் யோசவ் பிரான்சீஸ்
சேவியர்

மண்ணில் 01.08.1946
விண்ணில் 09.11.2014

அன்பொன்றையே பொழிந்து
எம்மை வாழ்வித்த அப்பா !

இரண்டாண்டுகள் ஒரு நொடியாய் ஓடினாலும்
ஆறவில்லை அப்பா எம் துயரம் ஒவ்வொரு வினாடியும்
உங்கள் திருமுகம் காணத் துடிக்கின்றது எம் இதயம்
இரவுபகல் என்றில்லாது கணப் பொழுதும் கனவிலும்
நினைவிலும் நிறைந்து எம்மை வழி நடத்துபவரே !
இறை ஒளியில் அமைதியுடன் இணைந்து
எமக்காய் பரிந்துரைக்க இறைவனை இறைஞ்சுகின்றோம் இடை விடாது

27/18, புங்கன்குளம் வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றவர்களின் ஊழலை விசாரிக்க மாகாண சபைக்குத் தகுதியில்லை

## வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் விசனம்

களின் ஊழல்கள் தொடர்பில் விசாரணை நடத்தத் தகுதியில்லாதவர்கள். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் கடந்த கால கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பில் மாகாண சபையின் நேற் றைய அமர்வில் முன்வைக்கப்பட்டது. நடைபெற்ற விவாத்தின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, கடந்த கால முறைகேடுகள், ஊழல்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இன்று வரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலமை இருந்தால் எம்மால் நிர்வாகச் செயற்பாடுகளைச் சரியான முறையில் முன்னெடுக்க முடியாது என்றார்.

'அதிகாரிகள் தமது கடமைகளிலிருந்து தவறும் பட்சத்தில் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். அவர்களை இடமாற்றுவதுடன் மாத்திரம் நின்று விடாது அவர்களுக்கு முறையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்' என்று ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், முறைகேடுகள் தொடர்பில் வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். வவுனியா நகர சபையில் முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரி நீக்கப்பட்டிருக்கின்றனர். அவர் ஐந்து இலட்சம் பணம் திருப்பிக் கட்டியிருக்கின்றார். அவர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று குறிப்பிட்டார்.

மீளவும் கருத்துத் தெரிவித்த அஸ்மின், மாகாண சபையில் உள்ள அனைத்துத் திணைக்களங்களிலும் பணிபுரியும் அதிகாரிகள் தொடர்பிலான பொறுப்பு அதற்குரிய அமைச்சர்களுக்கு இருக்கின்றது. அந்த வகையில் முறைகேடுகள் தொடர்பில் அமைச்சர்களும் பொறுப்புக் கூற வேண்டும் – என்றார்.

'யாழ் மாநகர சபையில் எவ்வளவு பெரிய முறைகேடுகள் நடைபெற்றது என்பதை மக்கள் அறிய வேண்டும். அந்த முறைகேடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் விசாரணைக் குழுவின் அதிகாரி அதிலிருந்து விலகியிருக்கின்றார். இது தொடர்பில் எமது அமைச்சரவை தலையிட்டிருக்கவேண்டும். இவ்வாறு தயங்கினால் ஊழல்கள் குற்றங்களை எவ்வாறு தடுக்க முடியும். நாம் எதிர்காலத்தில் ஊழல்களை இல்லாமல் செய்யும் வகையில் செயற்படவேண்டும்' என்று ஆளும் கட்சியின் உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன், வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களின் ஊழல்கள் தொடர்பில் இன்று வரை விசாரணைகள் முன் நகர்த்தப்படவில்லை. இவ்வாறன நிலையில் மற்றவர்களின் ஊழல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தத் தகுதியில்லை–என்றார்.

இறுதியாகக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாநகர சபையில் ஊழல் நடைபெறுவதாக நான் முன்னரே கூறியிருந்தேன். அதைப் போன்றே நடந்திருக்கின்றது. அத்துடன் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மக்களிடம் பணம் கேட்டு வாங்குகின்ற நிலைமையும் காணப்படுகின்றது என்றார். (த-5-8)

# ரி.ஐ.டி. கைது செய்த மூவருக்கு மறியல்

மன்று நேற்று உத்தரவிட்டது.

சிவலிங்கம் கமல்நாதன், அன்டனி தாஸீஸியஸ் அரவிந்தன் மற்றும் கெங் காதரன் பிருந்தாபன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடந்த வார இறுதியில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுக் கொழும்பு 4ஆம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சமூகவிரோதச் செயலான வாள்வெட்டில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி 3 பேரையும் பயங்கரவாதப் விசாரணைப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸிடம் நேற்று முற்படுத்தினர். அவர்களை ஆரம்ப விசாரணைக்கு உட்படுத்திய நீதிவான், எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். ஏனைய வர்கள் பற்றிய விடயங்களைப் பயங்கரவாதப் பிரிவினர் வெளியிட வில்லை. (த-4)

# நெல்சிப் திட்டத்தில் பரு., வல்வை சபைகளில் ரூ. 43 லட்சம் நிதி மோசடி

## வடக்கு மாகாண சபை நியமித்த உப குழு நேற்று அறிக்கை

இந்த மோசடி இடம்பெற்றது.

நெல்சிப் திட்டத்தில் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்று எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிக்கவென மாகாண சபையால் நியமிக்கப்பட்ட 3 உறுப்பினர்கள் கொண்ட உபகுழு தனது அறிக்கையை நேற்று சபையில் முன்வைத்தது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் இதனைப் பெரும் நிதி மோசடி விசாரணைப் பிரிவிடம் (எவ்.சி.ஐ.டி) பாரப்படுத்துவது என்று சபையில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கில் உள்ள 34 உட்பட 79 உள்ளூராட்சி மன்றங்களின் மேம்பாட்டுக்காக 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டது. அவற்றில் 100 கோடி ரூபா வரையில் மோசடி இடம்பெற்றிருப்பதாகக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டு மாகாணப் பொதுக் கணக்குகள் குழுவினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதையடுத்து கடந்த ஆண்டு ஆரம்பத்தில் வடக்கு மாகாண சபை குழு ஒன்றை நியமித்தது. வேலுப்பிள்ளை சிவயோகன், பசுபதி அரியரத்தினம், இராமநாதன் இந்திரராசா ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

வல்வெட்டித்துறை கோணாவலை வீதி, ஆற்றங்கரை வீதி ஆகியவற்றின் சீரமைப்பு மற்றும் பருத்தித்துறை மாணாண்டி சந்தைக் கட்டுமானம் என்பவற்றிலேயே மோசடி இடம்பெற்றுள்ளதாக அறிக்கை கூறுகின்றது. கேள்விப்பத்திரங்களில் காட்டப்பட்ட விலைக்கூறுகளில் திருத்தங்களைச் செய்ததன் மூலமும் சந்தையின் கொடுப்பனவுகளிலும் பார்க்கக் கூடிய விலையைப் பொருள்களுக்கும் சேவைகளுக்கும் செலுத்தியதன் மூலமும் செய்யப்படாத வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டதன் மூலமும் மோசடி இடம்பெற்றுள்ளது என்று அறிக்கை குறிப்பிடுகின்றது.

வல்வெட்டித்துறை நகர சபையில் 16 லட்சத்து 54 ஆயிரத்து 550 ரூபா மோசடியும், பருத்தித்துறை பிரதேச சபையின் மாணாண்டி சந்தை வேலையில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டதன் மூலம் 26 லட்சத்து 93 ஆயிரத்து 817 ரூபாவுமாக மொத்தம் 43 லட்சத்து 48 ஆயிரத்து 367 ரூபா நிதி ஊழல் செய்யப்பட்டது என்கிறது அறிக்கை.

இந்த விசாரணையை முன்னெடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி வகித்து வந்தவரான ம.ஜெகூ ஒத்துழைக்கவில்லை என்று அறிக்கை குற்றஞ்சாட்டுகின்றது.

வல்வெட்டித்துறை நகரசபையில் இடம்பெற்ற மோசடிக்கு அடிப்படையான, கேள்விப்பத்திரங்களில் செய்யப்பட்ட இரகசியத் திருத்தங்கள் திட்டப் பொறியியலாளர் எஸ்.ஸ்ரெஜிலாதரனிடம் ஆவணங்கள் இருந்தபோதே இடம்பெற்றன என்பதால் அவற்றை அவரே செய்தார் என்று அனுமானிப்பதாகவும் அறிக்கை விளக்கியுள்ளது.

இது பெரும் நிதி மோசடியாகக் காணப்படுவதனால் மேலதிக விசாரணைகளுக்காக இந்த விடயத்தை கணக்காய்வாளர் நாயகத்துக்கு அனுப்பிவைப்பதுடன் முதலமைச்சர் ஊடாக உடனடியாகவே நிதி மோசடிப் பிரிவில் கையளிக்கவும் சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (உ-10)

# பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு உலர் உணவு நிவாரணங்கள்

முன்னாள் போரா ளிகள் ஆகியோரை உள்ளடக்கிய பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு உலர் உணவு நிவாரணங்கள் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த ஆறு மாத காலப் பகுதிக்குள் எந்த விதமான உணவுப் பொதிகளையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு உணவுப் பொதியாக ஒரு அங்கத்தவருக்கு ஒரு மாதத்துக்கு 15 கிலோ கிராம் அடிப்படையில் வழங்கப்படும். நலன்புரி நிலையங்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் ஆறு மாத காலப் பகுதிக்கு ஒரு அங்கத்தவருக்கு ஒரு மாதத்துக்கு 15 கிலோ கிராம் உணவுப் பொதியாக விநியோகிக்கப்படவுள்ளது. ஆயிரத்து 68 குடும் பங்களுக்காக 3 லட்சத்து 38 ஆயிரத்து 310 கிலோ கிராம் அரிசி தேவைப்படுகின்றது.

மீண்டும் சமூகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் பாதிக்கப்பட்ட 16 ஆயிரம் பேருக்கு மூன்று மாத காலப் பகுதிக்கு 7 லட்சத்து 20 ஆயிரம் கிலோ கிராம் அரிசி தேவைப்படுகின்றது.

இவற்றை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மொத்தமாக 100 மில்லியன் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளது. (த-5)

# பரீட்சைக்கு முன்பாகவே வெளியானது வினாத்தாள்

## விசாரணைகளை ஆரம்பித்தது வடக்குக் கல்வித் திணைக்களம்

முன்பாகவே ஒரு பாடசாலையில் வெளியாகியுள்ளது. இதனால் வரலாற்றுப் பாடத்துக்கான புதிய வினாத் தாளை வடக்கிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் புதிதாகத் தயாரித்து வழங்க மாகா ணக் கல்வித் திணைக்களம் நட வடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் வினாத்தாள் வெளியாகியமை தொடர்பாக விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரம் 11 வரலாற்றுப் பாடப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் வரலாற்றுப் பாடப் பரீட்சை கடந்த 4ஆம் திகதி நடந்துமுடிந்துவிட்டது. இதனாலேயே இந்தச் சிக்கல் ஏற்பட்டது. இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திர னிடம் கேட்டபோது,

"வரலாற்றுப் பாடப் பரீட்சையை எதிர்வரும் 15ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தத் தகவல் குறித்த பாடசாலை அதிபரைச் சென்றடையவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் குறித்த பாடத்துக்காக ஏற் கனவே தயாரிக்கப்பட்ட வினாத்தாள் நிரா கரிக்கப்பட்டு, புதிய வினாத்தாள் தயாரிக் கப்படவுள்ளது. அந்த வினாத்தாள் 15ஆம் திகதி மாணவர்களுக்குப் பரீட்சை எழுதுவதற்காக வழங்கப்படும்–என்றார்.

இந்த விடயம் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின்போது முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோரின் கவனத் துக்கும் கொண்டு செல்லப்பட்டது. மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் சபையில் குறித்த வினாத்தாளைச் சபையில் காண்பித்தார். இதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரினார். குறித்த விடயம் மிகப் பாரதூரமானது. மாணவர் களின் கல்வியைச் சீரழிக்கும் இந்த முறைகேடு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் தெரிவித்தார். (த-4-7-8)

# புத்தரை எதிர்ப்பது தவறாம்

சிலை விவகாரத்தை பெரிதுபடுத்தவேண்டிய அவசிய மில்லை. புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது தவறு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், ஆரம்ப கைத்தொழில் அமைச்சருமான தயா கமகே தெரிவித்திருக்கின்றார்.

அம்பாறை மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். புத்தர் சிலை வைப்புக்குப் பின்னால் அமைச்சர் தயா கமகே இருப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பேசப்பட்டது.

இதன்போது பதிலளித்த அமைச்சர் தயா கமகே, இந்தச் சிலை வைப்புக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இல்லை. சிலை வைப்பதால் என்ன பிரச்சினை.

நாட்டின் அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பிலும் இந்து, இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வரலாற்றை நோக்கினால் 12 ஆயிர ஏக்கர் காணி தீகவாவி விகாரைக்கு சொந்தமானது என்பது தெரியும். ஆக கல்முனை, பொத்துவில் பிரதேசங் கள தீக வாவி விகாரைக்கே சொந்தமான புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கு எதி வெளியிடப்படுமாயின் அது பிழையா விடயம். பௌத்த மதம் இல்லாத பா தானில் புத்தர் சிலை காணப்படுகின் முஸ்லிம்கள் அதனைப் பாதுகாக்கி னர். நாங்கள் அனைத்து மதங்களை மதிக்கின்றோம். புத்தர் சிலை வை தால் நல்லாட்சிக்குப் பாதிப்பு இல்லை என்னால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு நடக்குமாயின் நா எனது அமைச்சுப் பதவியைத் துறப்பே இந்த அமைச்சுப் பதவி ஒன்றும் எனக் பெரிதல்ல. இந்தப் புத்தர் சிலைக் எனக்கும் சம்பந்தமில்லை. எங்கே வது புத்தர் சிலை அமைக்கப்பட்டிரு மாயின் வணங்கி விட்டுச் செல்வே புத்தர் சிலை எங்கு வைக்கப்படுகின்றது பதை அவ தானிப்பது என் வேலையல் – என்றார். (த-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரிவிலிருந்து நியூசி. விடுபடும்

### வில்லியம்சன் கணிப்பு

டெஸ்ட் ஆட்டங்களில் கடந்த சில வாரங்களாக தடுமாற்றத்தை வெளிப்படுத்திய நியூசிலாந்து, பாகிஸ்தானுக்கு எதிரான தொடருடன் சரிவிலிருந்து விடுபடும் என்று தெரிவித்தார் நியூசிலாந்து அணியின் தலைவரான வில்லியம்சன்.

இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. இரு அணிகளும் தாம் இறுதியாக விளையாடிய ஆட்டங்களில் தோல்விகளைச் சந்தித்தவை. நியூசிலாந்து இந்தியாவிடமும், பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகளிடமும் தோல்வியடைந்தன. இந்த நிலையிலேயே வில்லியம்சன் இவ்வாறு தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரைப் பயன்படுத்தி தோல்விக்கு முற்றுப்புள்ளி வைப்போம். வீரர்கள் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தத் தயாராகவே உள்ளனர். தொடர் எமது மண்ணில் (நியூசிலாந்தில்) நடைபெறுவதால் எமக்கு கூடுதல் வாய்ப்பு உள்ளதாகவே கருதுகிறேன். பாகிஸ்தான் இலகுவான அணியல்ல. அந்த அணி அண்மைக்காலமாக சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துகிறது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்துக்கு முன்னேறியிருந்தது. தற்போது அந்த இடத்தை பாகிஸ்தான் இந்தியாவிடம் இழந்திருந்தாலும் குறைத்து மதிப்பிடவில்லை என வில்லியம்சன் மேலும் தெரிவித்தார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதியும், இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)



## தொடர்ச்சியான காயங்கள் காரணமாக

# ஒப்பந்தத்தை நிராகரித்தாராம் மலிங்க




இலங்கை கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்தை தனக்கு எற்பட்டுள்ள தொடர்ச்சியான காயங்கள் காரணமாகவே நிராகரித்துள்ளதாக வேகப்பந்து வீச்சாளர் மலிங்க தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபை தனது வீரர்களுடனான ஒப்பந்தத்தை அண்மையில் புதுப்பித்துக் கொண்டது. நீண்ட இழுபறிக்குப் பின்னர் வீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்தானது. முதல் தர ஒப்பந்தத்தில் மலிங்க இடம்பெற்றிருந்தார். ஆனால் அவர் தனது ஒப்பந்தத்தை மறுத்தமைக்குக் காயமே காரணம் எனத் தெரிவித்தார். இலங்கை கிரிக்கெட் சபையால் எனக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

இது மகிழ்ச்சிக்குரிய செய்தி. ஆனால் என்னால் அந்த ஒப்பந்தத்தை ஏற்க முடியாது. ஏனெனில் கடந்த 11 மாதங்களாக நான் நாட்டுக்காக விளையாடவில்லை. எனக்கு தொடர்ச்சியாக ஏற்பட்ட காயங்களால் ஓய்வில் இருந்து வருகிறேன்.

எப்போது களம் திரும்புவேன் என்று உறுதிபடக் கூறமுடியாத நிலை உள்ளது. இந்த நிலையில் குறித்த ஒப்பந்தத்தை நான் ஏற்றால் அது ஏனைய வீரர்களுக்குச் செய்யும் அநீதியாகப் போய் முடியும். எனவேதான் இந்த ஒப்பந்தத்தை நிராகரித்தேன். உடல் நிலை சரியானதும் மீண்டும் களமிறங்குவேன்.

அப்போது ஒப்பந்தங்களைப் போட்டுக் கொள்ளலாம் என இலங்கை கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்துள்ளேன். எனது ஒப்பந்தப் பணம் இன்னுமொரு இளம் வீரருக்குப் பயன்படும் என மலிங்க மேலும் தெரிவித்தார். (ம)

## ஆடுகளத்தில் அதிருப்திகள்

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டம் நடைபெற்ற பேர்த் ஆடுகளத்தில் அதிருப்தி வெளியிடப்பட்டது.

இந்த டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. ஆட்டம் பேர்த்தில் நடைபெற்றது. இந்த ஆடுகளமே உலகின் வேகமான ஆடுகளமாகும். ஆட்டத்தில் இறுதிநாளான நேற்றுமுன்தினம் ஒரு அங்குலம் அளவிலான விரிசல்கள் ஆடுகளத்தில் ஏற்பட்டிருந்தன. இதனால் சில அதிருப்தியான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இத்தகைய விரிசல்களால் ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஒரு பக்கச் சாதகமாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)





சமபோசா கிண்ணத்துக்காக தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பிடித்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணிக்கு கல்லூரிச் சமூகத்தினால் நேற்று சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. (ம-23)

## இசாந்திடம் இலக்கைக் கைப்பற்றும் ஆற்றலில்லை

இந்திய டெஸ்ட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான இசாந் சர்மாவிடம் இலக்குகளைக் கைப்பற்றும் ஆற்றல் இல்லை எனத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரான கபில் தேவ்.

ஆங்கில இணையத்தளத்துக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்திய அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக இசாந் சர்மா உள்ளார். அவரிடம் திறமைக்குப் பஞ்சம் இல்லை. இருப்பினும் அவரிடம் இலக்குகளைக் கைப்பற்றும் மார்க்கம் குறைவாகவே உள்ளது. இலக்குகளைக் கைப்பற்றும் ஆற்றல் இசாந்திடம் இல்லை. தனது திறமையை வைத்து இலக்குகளைச் சரிக்கும் விதத்தை அவர் அறிய வேண்டும். டெஸ்ட் ஆட்டங்களுக்கு சிக்கனப் பந்துவீச்சை விட இலக்குச் சரிவே அதிக முக்கியம் என கபில் தேவ் மேலும் தெரிவித்தார். (ம)



## கோக்லியின் தலைமையின் கீழ் அனுபவித்து விளையாடுகிறோம்

### ரகானே புகழாரம்

இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் கோக்லியின் தலைமையின் கீழ் வீரர்கள் அனுபவித்து விளையாடுகிறார்கள் என அந்த அணியின் நட்சத்திர வீரர் ரகானே புகழ்ந்து தள்ளியுள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையே இன்று நடைபெறத் திட்டமிட்ட டெஸ்ட் தொடர் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ரகானே இவ்வாறு தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக விளையாடுவது சவாலானதுதான். அந்த அணியின் துடுப்பாட்ட வரிசை அனுபவம் வாய்ந்தது. ஆனால் அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு போதிய அனுபவம் இல்லை. எனினும் எதிரணியை மதிக்க வேண்டும். இந்தத் தொடரில் நாங்கள் ஆதிக்கம் செலுத்த விரும்புகிறோம்.




கடந்த ஒன்றரை வருடங்களாகவே சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறாம். தொடர்ச்சியாக நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்துவது என்பது மிகவும் முக்கியமானது.

ராஜ்கோட்டில் சிறப்பான தொடக்கம் கொடுப்போம். தலைவராகக் கோக்லி ஆக்ரோமாக செயல்படக்கூடியவர். அதேவேளையில் டோனி நிதானமாகசெயல்படும்தன்மை கொண்டவர்.

நெருக்கடியான நிலையிலும் பதற்றம் அடையமாட்டார். அவரிடம் இருந்து கோக்லி அதிகம் கற்றுக்கொண்டுள்ளார். கோலியின் தலைமையின் கீழ் விளையாடுவது சிறப்பான விடயம். அனைவரும் தமது சுய பாணியில் அனுபவித்து விளையாடுகிறார்கள் என ரகானே மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்ரிட் - ரொனால்டோ 2021 வரை ஒப்பந்தம்



போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமாக இருக்கும் ரொனால்டோவுக்கும், ரியல் மட்ரிட் கழகத்துக்கும் இடையில் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டுவரை ஒப்பந்தம் கைச் சாத்தாகியுள்ளது.


ரொனால்டோ, போர்த்துக்கல் அணியுடன் கொண்டிருந்த ஒப்பந்தம் அடுத்த வருடத்துடன் முடிவடையவிருந்தது. இதனால் இவரை வாங்க பல்வேறு கழகங்கள் போட்டியிட்டன. ஆனால் ரொனால்டோவை வெளியேற்ற மட்ரிட் விரும்பவில்லை. எனவே அவரை அணியுடன் தக்கவைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் கடந்த சில மாதங்களாக நடைபெற்றன. இருதரப்புக்கும் இணக்கப்பாடு ஏற்பட்டதை அடுத்து எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு வரை ரியல் மட்ரிட் அணியுடன் ரொனால்டோ தொடரவுள்ளார். இதற்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்தானது. ரியல் மட்ரிட் கழகத்தின் தலைவர் புளோரன்டினோ பெரேஸ் முன்னிலையில், ஒப்பந்தத்தில் ரொனால்டோ கையெழுத்திட்டார். 3 லட்சத்து 65 ஆயிரம் யூரோ, ரொனால்டோவுக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. ரியல் மட்ரிட் அணிக்காக 360 ஆட்டங்களில் விளையாடியுள்ள ரொனால்டோ 371 கோல்களை அடித்துள்ளார்.

(ம)

## லிவர்பூல் முதலிடம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வட்போர்ட்டை வீழ்த்தி தரப்படுத்தலில் முதலிடத்துக்குச் சென்றது லிவர்பூல்.

6:1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வெற்றிபெற்றது. 27ஆவது நிமிடத்தில் சாடியோ மனே முதல் கோலைப் பதிவுசெய்தார். 30 ஆவது நிமிடத்தில் பிலிப்பேயும், 43 ஆவது நிமிடத்தில் அடம்லானாவும் கோல்களைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் முன்னிலை பெற்றது. 57ஆவது நிமிடத்தில், லானாவிடமிருந்து பந்தைப் பெற்ற ரொபேர்டோ பெர்மிங்கோ லிவர்பூலின் நான்காவது கோலைப் பதிவுசெய்தார். 68 ஆவது நிமிடத்தில் மனேயும். 91ஆவது நிமிடத்தில், ஜோர்ஜினியோவும் லிவர்பூலின் கோல்களைப் பதிவு செய்தனர். வட்போர்ட் சார்பாகப் பதிவானகோல் ஆட்டத்தின் 72 ஆவது நிமிடத்தில் கிடைத்தது. (ம)



## தொடரைக் கைப்பற்றும் இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றும் எனத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரரான லக்ஷ்மன்.

ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி இங்கிலாந்துக்கு வந்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் ராஜ்கோட்டில் இன்று ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே லக்ஷ்மன் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான நீண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றும். ஆனால் ஓர் ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெறும். எனவே இந்திய அணி 4:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்ற அதிக வாய்ப்புக்கள் உள்ளன எனக் கருதுகிறேன். கோக்லி தலைமையிலான அணி அனைத்து துறைகளிலும் சமநிலையில் உள்ளது. ரகானே, புஜாரா போன்ற உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேயா ஆகியோர் உலகத்தரத்திலான பந்துவீச்சை வெளிப்படுத்துகின்றனர். அமித் மிஸ்ராவின் பங்களிப்பையும் மறந்துவிட முடியாது. வேகப்பந்து வீச்சாளர்கள் நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் தங்கள் திறமையை நிரூபித்துள்ளனர். மொத்தத்தில் இங்கிலாந்து அணிக்கு பெரும் பரீட்சையாக இந்தத் தொடர் அமையவுள்ளது. இங்கிலாந்துக்கு இந்தத் தொடரில் மொயின் அலி மிகப் பெரும் வீரராக இருப்பார். அவரைக் கையாளும் விதத்தை இந்தியா அறிய வேண்டும் என லக்ஷ்மன் தெரிவித்தார். (ம)

# இன்னும் 10 ஆண்டுகள் அணியில் தொடர்வேன்

### ரொனால்டோ நம்பிக்கை

அடுத்த 10 வருடங்களுக்கு முன்னர் கால்பந்தாட்ட அரங்கிலிருந்து விடைபெறும் எண்ணமில்லை எனத் தெரிவித்தார் ரொனால்டோ.

உலகின் ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரர்களில் ரொனால்டோவுக்கு முக்கிய இடமுண்டு. தற்போது அவருக்கு 31 வயதாகிறது. தேசியத்தில் போர்த்துக்கலையும், கழக மட்டத்தில் ஸ்பெய்னின் புகழ்பெற்ற செல்வந்தக் கழகம் என வர்ணிக்கப்படும் ரியல் மட்டிட்டையும் பிரதிநிதித்துவம் செய்து வருகிறார். ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற சம்பியன் லீக்கை ரியல் மட்ரிட்டும், யூரோ கிண்ணத்தை போர்த்துக்கலும் கைப்பற்ற ரொனால்டோ முக்கிய காரணமாக திகழ்ந்தார். 2021 ஆம் ஆண்டு வரை ரொனால்டோவை தக்கவைக்க மட்ரிட் முடிவெடுத்து அவருடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பின்னர் உரையாற்றுகையிலேயே ரொனால்டோ இவ்வாறு தெரிவித்தார்.

கண்டிப்பாக இது எனது கடைசி ஒப்பந்தமாக இருக்காது. கால்பந்தாட்ட வாழ்க்கையில் இருந்து தற்போதைக்கு ஓய்வுபெறும் எண்ணமில்லை. எனக்கு இன்னும் 10 ஆண்டு கால கால்பந்தாட்ட வாழ்க்கை எஞ்சியுள்ளது. தற்போது எனக்கு 31 வயதாகிறது. எனது 41 ஆவது வயதில் அல்லது அதற்குப் பின்னரேயே ஓய்வுபெறுவது தொடர்பில் சிந்திப்பேன் என ரொனால்டோ தெரிவித்தார். (ம)



# இங்கிலாந்து - இந்தியா ஆட்டம் இன்று ஆரம்பம்

இங்கிலாந்து - இந்தியா அணிகளுக்கு இடையிலான நீண்ட டெஸ்ட் தொடர் ராஜ்கோட்டில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு வந்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் முதலாவது டெஸ்ட் ஆட்டம் ராஜ்கோட் மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது ஆட்டம் விசாகப்பட்டினத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதியும், மூன்றாவது டெஸ்ட் மொகாலியில் எதிர்வரும் 26 ஆம் திகதியும், நான்காவது டெஸ்ட் மும்பையில் அடுத்த மாதம் 8 ஆம் திகதியும், ஐந்தாவதும் இறுதியானதுமான டெஸ்ட் சென்னையில் எதிர்வரும் 16 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்திய அணிக்கு கோக்லியும், இங்கிலாந்து அணிக்கு அலிஸ்டர் குக்கும் தலைமை தாங்குகின்றனர்.

(ம)

# றோயல், நீக்கிலஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 9

மைலோ கிண்ணத் தொடருக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையே நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஆட்டங்களில் ஊரெழு றோயல், நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணிகள் வெற்றிபெற்றன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் ஆட்டங்கள் நடைபெற்றன. ஊரெழு றோயல் அணியை எதிர்த்து பொற்பதி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய அவகாசம் ஏற்பட்டது. 4:1 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றிபெற்றது.

நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணிக்கும் அரியாலை ஐக்கிய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இருஅணியினரும்தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 3:1 என்ற கோல் கணக்கில் சென். நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைலோ கிண்ணத் தொடர் இரண்டாம் சுற்று முடிவுகள்






யாழ்ப்பாணம், நவ. 9
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. குறித்த ஆட்டங்களின் முடிவுகள்:

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து ஞானகலா அணிமோதியது. இதில் ஊரெழு றோயல் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதியது. இதில் நாவாந்துறை கலைவாணி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நான் காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பாரதி அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட் இட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யாததினால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய தேவை ஏற்பட் டது. இதில் பாரதி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## இலங்கை பெரும் முன்னிலை

சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றைய நிலவரத்தின் படி இலங்கை வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 504 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தனஞ்சய சில்வா 127 ஓட்டங்களையும், குணரத்ன 116 ஓட்டங்களையும், தரங்க 79 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் திரிபானொ, கிரீமர் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், மசகட்சா இரு இலக்குகளையும், மொபு, வோலர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே இரண்டாம் நாள் முடிவில் 126-2 என்றிருந்தது. சறி 60 ஓட்டங்களுடனும், எர்வின் 60 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 64 ஓட்டங்களுடன் எர்வினை வீழ்த்தினார் லக்மல். 80 ஓட்டங்களுடன் சறியை போல்ட் செய்தார் கேரத். வோலரும் அவரிடம் ஆட்டமிழந்தார். கிரீமர், திரிபானோ, மும்பா ஆகியோரின் ஆட்டங்கள் பெரிதாக எடுபடவில்லை. 272 ஓட்டங்களில் சிம்பாப்வே சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் கேரத் 5 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா 3 இலக்குகளையும், லக்மல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

232 ஓட்டங்களுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை, மூன்றாம் நாள் முடிவில் 102-4 என்ற நிலையில் உள்ளது. சில்வா, மென்டிஸ், தரங்க, தனஞ்சய டி சில்வா ஆகியோர் ஒற்றை இலக்கங்களுடனும் பதின்மத்துடனும் பவிலியன் திரும்பினர். குணரத்ன 54 ஓட்டங்களுடன் களத்திலுள்ளார். (ம)

## யங்கம்பன்ஸ் முன்னேற்றம்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து மன்னார் சென். அன்ரனிஸ் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண் டாம் பாதியின் 37 ஆவது நிமிடத்தில் ரதன் அணியின் முதல் கோலைப் பதிவு செய்தார். அதுவே ஆட்டத்தின் ஒரே கோலாகவும் அமைந்தது. (ம-422-108)



## யங்கம்பன்ஸ் சம்பியனானது

கரணவாய், நவ. 8
வல்வை விளையாட்டுக் கழகம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத்தில் யங்கம்பன்ஸ் அணி சம்பியனானது.

குறித்த கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், கம்பர்மலை யங்கம் பன்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன் ரனிஸ் அணி மோதியது. 2:0 என்ற கோல்களின் அடிப்படையில் முதல் பாதியில் முன்னிலை வகித்தது சென். அன்ரனிஸ்.

இரண்டாவது பாதியாட்டத்தில் ஆட்டத்தை வேகப்படுத்திய யங்கம் பன்ஸ் அணி, அனுராகாந் தனின் உதவியால் முதல் கோலைப் பதிவுசெய்தது. சென். அன்ரனிஸ் அணியின் சார்பில் மற்றொரு கோல் பதிவாக நிலமை 3:1. சரிவிலிருந்து மீண்ட யங்கம்பன்ஸ், அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பெற்றிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் யங்கம் பன்ஸ் அணி சம்பியனானது. (ம-108-422)


ஆங்கிலம் 3 மாத பயிற்சி நெறி
3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேச...
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 12.11.2016
பிரிவு1.காலை 08-10 பிரிவு 3.மாலை 01-03
பிரிவு2.காலை 10-12 பிரிவு 4. மாலை 03-05
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்!
பாடப்புத்தகங்கள் Video DVD என்பன இலவசம்.
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAAMSON
Expert in Language Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

வேலை வாய்ப்பு
110 நாடுகளில் விஸ்தரித்துள்ள எமது Canedian வெளிநாட்டு நிறுவனமானது இலங்கையில் வடக்கு பகுதியில் அலுவலக ரீதியான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.
தகைமை:
O/L, A/L கல்வி கற்றோர்
சம்பளம்:
3 மாத பயிற்சியின் போது 12,000-15,000
பயிற்சியின் பின் 50,000 மேல்
வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு உண்டு.
தொடர்பு: 077 2986763,
077 0771377, 076 8643505

கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
கட்டார் நாட்டில் உள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் உடனடி வேலை வாய்ப்பு

| | QR |
|---|---|
| Light Drivers (Qatar Licence) | 2002+Food |
| Mechanic (Auto mobile) | 1920+Food |
| Plumber | 1750 + Food |
| Electrician | 2350+Food |
| Cleaners | 900+Food |

எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் கட்டார் நாட்டவர்களால் நேர்முகத் தேர்வு எமது நிறுவனத்தில் நடைபெறும். (வயதுஎல்லை 18-40) உடன் தொடர்பு கொள்ள
Capital Recruitment (Pvt) Ltd
LLNo- 2248
No 130, 3/1 Grand Pass Colombo -14
077 721 5291, 011 524 4146

வீடு வாடகைக்கு
யாழ். நகரில் அமைதியான சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.
T.P : 077 367 3309

கட்டடம் வாடகைக்கு
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. ஒவ்வொன்றும் 1120 சதுரஅடி கொண்டது.
021 205 1131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.